


# உடப்பூர் வாய்மொழிப் பாடல்கள் நாட்டாரியல் வள(ல)ம்

பேராசிரியர். வ. சிவலோகதாசன்



JPL
C12657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36
KOHA
JPL

# உடப்பூர் வாய்மொழிப் பாடல்கள்
# நாட்டாரியல் வள(ல)ம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பேராசிரியர். வ. சிவலோகதாசன்

265
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
12657CC
265
CC
15

ஜீவநதி வெளியீடு
2018

265470 CC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடப்பூர் வாய்மொழிப் பாடல்கள்**

**நாட்டாரியல் வள(ல)ம்**

©வ. சிவலோகதாசன்

ஆசிரியர் : பேராசிரியர். வ. சிவலோகதாசன்

முதலாம் பதிப்பு : 2018 ஆனி

விலாசம் : 4ம் வட்டாரம், உடப்பு, இலங்கை

வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய், யாழ்ப்பாணம்.

அச்சகம் : பரணி அச்சகம், நெல்லியடி, யாழ்ப்பாணம்

பக்கங்கள் : 144

தொலைபேசி : +94 112081514

விலை : 350/-

ISBN : 978-955-4676-78-7

**Uddapur Vai Molip padalkal**

**Nadariyal valalam**

©V.sivalogathasan

Author : Prof.V.Sivalogathasan

First Edition : 2018 June

Address : Division N0. -04, Udappu, Sri Lanka

Published by : Jeevanathy, Kalaiaham, Alvai,Jaffna

Printers : Baranee Printers, Nelliady,Jaffna

Pages : 144

Contract tel. : +94112081514

Price : Rs.350/-

ஜீவநதி வெளியீடு – 111



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

அணிந்துரை

முன்னுரை

1. உடப்பூர் காவியங்கள்
   - 1.1 விநாயகர் காவியம்
   - 1.2 ஐவர் காவியம்
   - 1.3 ஐயனார் காவியம்
   - 1.4 வீரபத்திரர் காவியம்
   - 1.5 கந்தசாமி காவியம்
   - 1.6 திரௌபதி அம்மன் காவியம்
   - 1.7 காளியம்மன் காவியம்
   - 1.8 மாரியம்மன் காவியம்
   - 1.9 ஸ்ரீ ராமர் காவியம்
   - 1.10 வைரவ சுவாமி காவியம்
2. அம்மன் எச்சரிக்கைகள்
   - 2.1 திரௌபதியம்மன் எச்சரிக்கை
   - 2.2 காளி அம்மன் எச்சரிக்கை
   - 2.3 மாரி அம்மன் எச்சரிக்கை
   - 2.4 இராமர் எச்சரிக்கை
3. அம்மன் ஊஞ்சல்கள்
   - 3.1 திரௌபதையம்மன் ஊஞ்சல்
   - 3.2 முத்துமாரி அம்மன் ஊஞ்சல்
4. அம்மன் கும்மிகள்
   - 4.1 முத்துமாரியம்மன் கும்மி
   - 4.2 திரௌபதியம்மன் மான்மியக் கும்மி
   - 4.3 திரௌபதியம்மன் பூர்வீகக் கும்மி
   - 4.4 ஸ்ரீ திரௌபதையம்மன் மாலையிடும் கும்மி
   - 4.5 காளியம்மன் கும்மி

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.6 கலியடி கம்பு கும்மிப்பாடல்
4.7 சித்திரைச் செவ்வாய் விழாவிக் கும்மி
4.8 திரௌபதி அம்மன் விழாக்கும்மி
4.9 பாரதக் கும்மி
5. தவசி நிலைப் பாடல்கள்
5.1 தவசிப் பாடல் 1
5.2 தவசிப் பாடல் 2
6. அம்பாப்பாடல்கள்
6.1 குழுவாகப் பாடல்:
6.2 தனித்துப் பாடல் - தொகையறா:
6.3 எதிர்த்தம்பா பாடல்
6.4 நீட்டம்பாப் பாடல்
6.5 விருத்தம்பா
6.6 ஏனையவை
7. தாலாட்டுப் பாடல்கள்
7.1 உடப்பூர் தாலாட்டு - 1
7.2 உடப்பூர் தாலாட்டு - 2
7.3 உடப்பூர் தாலாட்டு - 3
8. ஒப்பாரிப் பாடல்கள்
8.1 உடப்பூர் ஒப்பாரி - 1
9. கோலாட்ட பாடல்கள்
9.1 ஒற்றை மல்லி - கோலாட்டப்பா
9.2 இரட்டை மல்லி - கோலாட்டப்பா
10. விளையாட்டுப் பாடல்கள்
10.1 பொரக்கிவா விளையாட்டு
10.2 குவா குவா விளையாட்டு
10.3 அத்தக்கா புத்தக்கா விளையாட்டு
10.4 திரி போடல் விளையாட்டு
10.5 இரும்பு கோட்டம் உடைத்தல் விளையாட்டு
10.6 கண்ணாம் பொத்தி விளையாட்டு
10.7 ஊஞ்சல் விளையாட்டு
வாசிப்புத் துணை நூல்கள்
நூலாசிரியர் அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நமது தமிழியல் வரலாற்றுப் போக்கில் நீண்டகாலமாகப் பொத்தம் பொதுவான கருத்தியல்களே முதன்மை பெற்று வந்துள்ளன. சங்க இலக்கிய அகப்பாடல் மரபுகளில் முதல், கரு, உரி என்ற விடயங்கள் பெற்ற முதன்மை, பக்தி இலக்கியங்களில் பாடல் பெற்ற தலங்கள், மங்களாசாசனம் பெற்ற தலங்கள் என்ற கருத்தியலில் பிராந்தியங்கள் பெற்ற முதன்மை என்ற விடயங் களை நீக்கிவிட்டுப் பார்க்கின்றபோது சோழர்காலம் வரையில் பொதுமைப் பண்பாட்டின் ஒருமையையே இலக்கிய வழி அடையாளங்கான முடிகின்றது. எனினும் சங்க அகப்பாடல்கள் வழியும், தேவாரம், பாசுரங்கள் வழியும் மறைமுகமாக நிலை பெற்ற பிராந்தியங்கள் தொடர்பான கரிசனை வேகங் கொண்டது பதிமூன்றாம் நூற்றாண்டிற்குபின்னரேயாகும்.

பிராந்தியங்களை மையப்படுத்தி இலக்கியங்கள் எழுந்தமைக்குத் தமிழிலக்கிய வரலாற்று ஆசிரியஉகள் பல்வேறு காரணங்களைக் கற்பித்தனரேனும், சமூக அசைவிலக்கிய மொன்றின் மாற்றங்களின் வழி அது அமைந்தது எனலாம். பேரரசுக்களின் சிதைவும், அந்நியத்தன்மைகளும் தமிழ் சூழலில் மனோபாவத்தைத் தவிர்த்து சுயதரிசனம் காணும் முறை மேற் கிளம்பிய போதுபழைய நடவடிக்கைகளை அது புரட்டிப் போட்டது. அதன் வழிதான் பிராந்தியங்கள் என்ற மண்ணும், அதன் பிரதான இயங்குவிசைகளான மக்களும் முதன்மை யுற்றனர். இதனைத்தான் இந்திய வரலாற்று ஆசிரியர்கள் “பிராந்தியங்களின் எழுச்சி” என்ற சொல்லாடலுக்குள் கட்டமைக்கின்றனர்.

இந்த பிராந்திய எழுச்சியில் நமக்கு முதன்மையாதார மாகக் கிடைப்பவை தல புராணங்களே. இந்திய உப கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு கோயில்களுடன் இணைந்தே வந்துள்ளது. எனினும்அவற்றை புராதன கோயில் பண்பாடு(Primitive Temple Culture), அரசுக் கோயில் பண்பாடு (Royal Temple Culture), பிராந்திய கோயில் பண்பாடு (Regional Temple Culture) என்ற வகையுள் அடங்கலாம். அந்த வகையில் தலபுராண மரபு பிராந்திய கோயில்களின் எழுச்சியுடன் சம்பந்தப்பட்டே வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

தல புராணம் என்ற சொல்லாடல் ஆரம்பத்தில் நம்மிடையே பக்தி சார்ந்த அடையாளமாகவே இனங்காணப் பட்டது. பௌராணிக மரபின் வழிபட்ட ஒரு இலக்கியே முறையாகவே அது செல்வாக்குப் பெற்று வந்தது. மூர்த்தியின் மகிமைக்கு தலமும், தீர்த்தமும் கருப்பொருளாயின. ஆயின் காலம் அவ்வாறான கருத்தியல்களுள் தொடர்ந்து அவற்றைத் தேக்கங் கொள்ளச் செய்யவில்லை. அந்தப் புராணங்கள் கட்டுடைக்கப்பட்டன. அப்போது அவற்றின் அகப் பண்பும், புறப் பண்பும் விகசிப்புப் பெற்றன. தலபுராணங்களின் பக்திமை தாண்டிய சமூக உள்ளடக்கங்கள் வெளியாயின. தலம் என்ற சொல்லின் மகிமை உணரப்பட்டது. மண்ணும், அது சார்ந்த மக்களும் மீட்கப்பட்டதுடன் அது சார்ந்த பண்பாடுகளும் வெளிச்சத்துக்கு வந்தன.

சோழ அரச காலங்களின் பிற்கூற்றில் சிதம்பரத்தை மையப்படுத்தி எழுந்த ஹிரண்ய புராணம் பற்றி எழுதிய மேலைநாட்டவர் ஒருவர் "சாளுக்கிய நாட்டுப் பரம்பரையில் வந்த சோழ அரசர்கள் தம்மை முற்கால சோழ அரசர்களின் வாரிசுகள் என்று நிலை நிறுத்த எடுத்த முயற்சிகளை இந்த புராணத்தினூடு இனங்கான முற்படுகின்றார். இதுபோலவே தல புராணங்கள் பற்றியும் அவற்றின் உள்ளடக்கங்கள் பற்றியும் சுல்ற்ஷ்மன் என்ற மேலைப் புல அறிஞர் TheTemple Methology என்ற நூலொன்றை எழுதியுள்ளார். இவையெல்லாம் சொல்லுகின்ற செய்தி என்னவெனில் தல புராண மரபு என்பதும் கோயில் பிராந்திய மரபு என்பதும் வெளித்தோற்றத்தில் பக்திமயப் படுத்தப்பட்டாலும் அவை உள்ளே பல செய்திகளை பொதித்து வைத்திருக்கின்றன என்பதேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் தோற்றம் பெற்ற தல புராண, மற்றும் கோயில் புராண மரபுகளையும் இவ்வாறாக கட்டுடைத்துப் பார்க்க வேண்டிய தேவை நமக்கு உண்டு. இவ்வாறானதொரு பின்னணியிலே தான் பேராசிரியர் கலாநிதி வ. சிவலோகதாசன் எழுதிய இந்த நூலையும் நோக்க வேண்டியுள்ளது.

அடிப்படையில் இதனை அவர் வாய்மொழிப் பாடல்கள், நாட்டாரியல் வள(ல)ம் என்ற மகுடத்தில் தொகுத்த போதும் பெரும்பாலான பாடல்கள் கோயில், கோயில் பண்பாடு சார்ந்தவையாகவே காணப்படுகின்றன. காவியம், எச்சரிக்கை, கும்மி, ஊஞ்சல், தவசுநிலை எனக் கோயில் பண்பாடு சார்ந்த பாடல்களும், அம்பா என்ற தொழில் சார்ந்த வழிபாட்டுப் பாடல் களும், தாலாட்டு, கோலாட்டம், விளையாட்டு, ஒப்பாரி என வாய்மொழிப் பாடல்களுமாக இந்த நூல் சுமார் பத்து தலைப்புக் களில் நாற்பத்தாறு விடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பாசிரியர் ஏன் இவற்றை வாய்மொழிப் பாடல்களாக இனங்கண்டார் என்பதையும் இங்கு நோக்குவது அவசியம். இந்த இடத்தில் தான் "உடப்பு" என்ற பிராந்தியத்தின் வாய்மொழி மரபின் நீட்சியையும், அதன் பண்பாட்டுப் பின்புலத்தையும் அறிந்து கொள்ள முடியும்.

"உடப்பு" என்ற பெயருடைய ஒரு கடலோரக்கிராமம் வடமேல் மாகாணத்தில் அலைகள் ஆர்ப்பரிக்கும் வங்கக்கடல் ஓரத்தில் அமைந்துள்ளது. எந்த வித மதக் கலப்பும் அற்ற இந்து மீனவ சமூகமொன்றின் வாழ்விடம் அது. அதன் வரலாறு பற்றி நடராசா, ஸ்ரீஸ்கந்தராசா, வீரசொக்கன், சிவலோகதாசன் எனப்பலர் எழுதியாகி விட்டது. அந்தக் கிராமத்தின் சன வேற்றம், தொழில் முறைமைகள், திரௌபதை, காளி, மாரி, இராக்குருசி அம்மன்களின் வழிபாடு, சித்திரைச் செவ்வாய், மகாபாரதக் கதை படிப்பு, தீமிதிப்பு, வேட்டைத்திருவிழா, ஐயனார் வழிபாடு என பல்பண்பாட்டுக் குவியல்களைக் கொண்ட ஊர் அது. மேலாக நாட்டுப்புற மரபுகள் பவற்றை (வாய்மொழி உட்பட) இன்னும் பேணி வருகின்ற பண்பாட்டுப் பெட்டகம் அந்த ஊர். ஆகவே அந்த ஊரில் இருந்து மேற்கிளம்பிய பேராசிரியர் கலாநிதி வ.சிவலோகதாசன் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு புத்திஜீவி. ஆகவே அவர் தனது புலமைத்துவக் கண் ணோட்டத்துடன் இந்த தொகுப்பை நமக்கு தந்திருக்கின்றார்.

இந்தொகுப்பினுள் நுழைகின்றபோதுமுதலில் காவியம் என்ற பகுதியில் விநாயகர், ஐவர், ஐயனார், வீரபத்திரர், கந்தசாமி, திரௌபதி, காளியம்மன், மாரியம்மன், ஸ்ரீராமர், வைரவசுவாமி ஆகியோர்க்கான காவியங்கள் காணப்படுகின்றன. காவியங்கள் என்பவற்றிக்கு தண்டியலங்காரம் தரும் அர்த்தம் வேறு, நாட்டுப் புறப்பாடல் மரபு புலப்படுத்தும் அர்த்தம் வேறு. பின்னையது எந்த அழகியல் அம்சங்களும் சேராத கதை மரபுகள் அல்லது போற்றிப்பாடல்கள் என அமைவன. அளவில் சிரியன, கடவுளரின் தோற்றத் தொன்மம், வரலாறு முதலியவற்றை உள்ளடக்கியன. அந்த வகையில் உடப்பு பிரதேசத்தில் வணங்கப் படுகின்ற அனைத்துத் தெய்வங்கள் (பிரபல தெய்வங்கள் தவிர்ந்து) பலவற்றிற்கும் காவியங்கள் பாடப் பெற்றமையை அறிய முடிகின்றது. மேற்குறித்த தெய்வங்களின் பட்டியலை உற்று நோக்குகின்ற போது உடப்புக் கிராமியத் தன்மை புரிந்துவிடும். மேலாக திரௌபதை அம்மனுக்குஇங்கு வழங்கப்படும் முக்கியத்துவம் மிகப் பெரியது.

மகாபாரதக்கதை மரபிலும், இராமாயணக் கதை மரபிலும் மிகவும் பாதிக்கப்பட்ட பெண்களான திரௌபதையும், சீதையும் பின்னாற்களில் கிராமப்புற மக்களின் வழிபடு தெய்வங் களாயினர் என்று ஆராச்சியாளர் கண்ட முடிபு, தமிழகத்தில் கிராமியத் தேவதைகளாக திரௌபதை அம்மனும், தீப்பாஞ்ச நாச்சியாரும் விளங்குகின்றனர். அதன் தொடர்ச்சி இலங்கை யிலும் நீடித்தது. உடப்பிலும், மட்டக்களப்பில் பாண்டிருப்பி லும், இன்னும் கிழக்கு மாகாணத்தின் சில இடங்களிலும், புத்தளத்தில் முந்தலிலும் திரௌபதை கிராமத் தேவதையாக வணங்கப்படுகின்றாள். சீதை அம்மனாக சீதா எளியவில் வணங்கப் படுகின்றாள். உடப்பில் திரௌபதையே பிரதான வழிபடு தேவதை அவளைச் சுற்றியே சகல பண்பாட்டுச் சம்பிரதாயங்களும் அமைந்துள்ளன.

(ஆயின் அண்மைக்காலங்களில் திரௌபதைக்கும் அவலம் நேர்ந்தது. மேல்நிலையாக்க கருத்தியல் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரௌபதை மூலஸ்தானத்தில் இருந்து அகற்றப்பட்டு, அங்கே ஸ்ரீருக்மணி, சத்தியபாமா சமேத பார்த்த சாரதிப் பெருமாள் குடிகொண்டு, திரௌபதையம்மன் ஆலயம் அருள்மிகு ஸ்ரீருக்மணி, சத்தியபாமா சமேத பார்த்த சாரதி தேவஸ்தானமாக மாறிவிட்டது.)

எனினும் அவ்வூரார் திரௌபதையை மறந்தாரில்லை அவர்களது பண்பாட்டு வேர்களை அவர்கள் இன்னும் முயன்று பாதுகாத்து வருகின்றனர். அதனால் தான் மகாபாரத படிப்பும், தவசு நிலையும், வேட்டைத் திருவிழாவும், தீமிதிப்பும் இன்னும் தொடர்கின்றன. அவை தொடர வேண்டும், உடப்பில் திரௌபதையைத் தவிர ஏனைய கடவுள்கள் ஆங்காங்கே காட்டிலும், மேட்டிலும் குடிக்கொண்டுள்ளனர். இராமர் கூட இங்கு சிறுதெய்வ அளவிலேயே மதிப்புப் பெறுகின்றார்.

இந்தக் காவியங்களைத் தொடர்ந்து எச்சரிக்கை, ஊஞ்சல், கும்மி என்ற கிராமிய இலங்கிய வடிவங்களுடாக மேற்குறித்த சனங்களின் சாமிகளே கும்பிடப் பெறுகின்றனர். இந்தச்சாமிகளின் வகைப்பாட்டைப் பின்வருமாறு அடக்கலாம்.

(1) காவியம் வழி வந்தவை (திரௌபதை, இராமன்)

(2) இந்துப் பண்பாட்டின் உதிரிகளாக அமைந்தவை (வீரபத்திரர், பைரவர், காளி, கந்தசாமி, விநாயகர்)

(3) கிராமியம் சார்ந்தவை (ஐயனார், மாரி)

இந்தச் சாமிகள் மீது பாடப்பெற்ற மேற்படி பாடல்களை உற்று நோக்குகின்ற போது. தொன்மம், வரலாறு, வழக்காறு என்பன நிறைந்து காணப்படுகின்றன. அவை பற்றி இனிமேல் வரும் ஆய்வாளர்கள் ஆய்வுகளை நிகழ்த்தக் கூடும்,

இத்தொகுப்பிலுள்ள தவசிப்பாடல்கள் (தவசுபாடல்கள்) முக்கியத்துவம் வாய்ந்தவை. உடப்பில் நிகழ்த்தப்படும் திரௌபதையம்மன் வழிபாட்டில் நிகழ்த்துகையுடன் கூடிய ஒரு சடங்கு இந்த அருச்சுனன் தவசு ஆகும். இத்தொகுப்பில் இரு வகைமைகள் உள்ளன. அமைப்பில் அவை ஒன்று போலத் தெரியினும், கூறும் பொருள் மரபில் வேறுபட்டனவே. இவை தவிர அந்தப் பிரதேசத்துகேயுரிய தாலாட்டு, விளையாட்டு, ஒப்பாரிப்பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடப்பில் எனக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. நான் உடப்பின் உபாசகன். தொண்ணூறுகளின் முற்பகுதியில் அங்கு விஜயம் செய்த போது அப்பிரதேசத்தின் பண்பாட்டால் ஈர்க்கப் பட்டேன். நண்பர்கள் நடராசா ஆசிரியர், வீரசொக்கன், ஸ்ரீஸ்கந்தராசா, ஆகியோரது தொடர்பு தொடர்ந்து வந்ததால் உடப்புப் பயணங்கள் அடிக்கடி நிகழ்ந்தன. எனது மாணவர் களையும் பண்பாட்டுப் பயணிகளாக அங்கே அழைத்துச் சென்றிருக்கின்றேன். மேலாக உடப்பிலிருந்து பல்கலைக்கழகம் வந்த சிவலோகதாசன், தேவகுமாரி, பத்மானந்தன், தனபாலசிங்கம் ஆகியோர்வழி அது தொடர்ந்தது. பேராசிரியர் கலாநிதி வ.சிவலோக தாசன் என் கண்முன்னே வளர்ந்த பிள்ளை. அவர் பல்கலையில் படித்தது வர்த்தகம், முகாமைத்துவம் எனினும் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம், குறிஞ்சிக்குமரன் கோயில் இந்து மாணவ சங்கங்களின் முக்கிய செயற்பாட்டாளராக அங்கு விளங்கி, இந்து தர்மத்தின் ஆசிரியராகவும் மிளிர்ந்தவர். இன்று தன்னை ஒரு மதிப்புது புத்திஜிவியாகக் கட்டமைத்துக் கொண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறையின் பேராசிரியராக, தலைமகனாக விளங்குபவர். வணிக, நிர்வாக, முகாமைத்துவ நிகழ்ச்சி நிரல்களுக்குப் புறம்பாக, அவரது பண்பாட்டுப் பேணுகை அலாதியானது. இராக்குரிசி அம்மன் வழிபாட்டை எனக்கு அறிமுகம் செய்தவர் அவர். பல ஆய்வரங்கு களில் பண்பாடு பற்றிய கட்டுரைகளை சமர்ப்பித்தவர். இதற்கு முன்பும் உடப்பின் வரலாற்றைப் பற்றி இரு பெரும் நூல்களைத் தந்தவர். தொடர்ந்தும் தான் பிரதேசத்தின் மீதுகொண்ட காதலால் தனது பணி நெருக்கு வாரங்களுக்குள்ளும் தன் துறைசார் ஆய்வுக்குப் புறம்பாக முயன்று அரிதில் தேடி இத்தொகுப்பைத் தந்திருக்கின்றார். அவரது முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். அவர் தொடர்ந்தும் இவ்வாறு வினையாற்றி தன் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் பல வெளியிடுகளை நிகழ்த்த வேண்டும் என்று ஆசிரிய, நட்பு நிலை நின்று வாழ்த்துகிறேன், விருப்புகிறேன், கட்டளையிடுகின்றேன்.

**பேராசிரியர்.வ. மகேஸ்வரன்**

**தமிழ்த்துறைத் தலைவர்,பேராதனைப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனித இனத்தின் இயல்பான உணர்வுகளின் அடிப்படையில் எழுவது பாடல். மகிழ்ச்சி, சோகம், காதல், குழுவுணர்வு, பெருமிதம் போன்ற பல அகவியல் நிலைகள் மனித உணர்வுகளைத் தூண்டுகின்றன. அதன் விளைவாக சாதாரண மக்களிடத்தில் பாடல் எழுகின்றது. இலக்கண வரம்புகளின்றி-உடனே தன் உணர்வை எளிமையாகச் சுருக்கமாக இசை தழுவியதாக நயத்துடன் வெளிப்படுத்துவன நாட்டுப் பாடல்களாகின்றன. நாட்டுப்பாடல் என்பது உயிருள்ளதோர் வடிவம். மனித குலம் எங்கெல்லாம் வாழ்ந்ததோ அவரவர் சிறப்புகளுக்கும் வாழ்க்கை முறைமைக்கும் தக்கவாறு வாய்மொழிப் பாடல்கள் தோன்றின.

உடப்பூர் மக்களின் வாழ்வியலில் செவிவழியாக வந்த நாட்டுப் பாடல்கள் முக்கியம் பெறுகின்றன. அவ்வகையில் காவியங்கள், எச்சரிக்கைகள், ஊஞ்சல்கள், கும்மிகள், தாலாட்டுப் பாடல்கள், அம்பாப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

ஆலயங்களிலே பூசை வேளையில் விநாயகர் சந்நிதானத்தில் பூசை நடைபெறுகின்ற பொழுதும், உற்சவ காலங்களிலும் விநாயகர் காவியம் பாடப்படுகின்றது. பெரும்பாலும் திருவிழாக் காலங்களிலேயே இக்காவியம் பாடப்படுகின்றது. அவ்வாறே ஐயனார் காவியம், வீரபத்திரர் காவியம், கந்தசாமி காவியம், திரௌபதி அம்மன் காவியம், காளியம்மன் காவியம், மாரியம்மன் காவியம், ஸ்ரீ ராமர் காவியம் என இங்கு கோயில்களில் வீற்றிருக்கும் ஒவ்வொரு தெய்வங்களுக்கும் காவியங்கள் உண்டு. ஆடித்திருவிழாவின்போது பதினேழாம் நாள் செவ்வாய்க்கிழமை காலையில் திரௌபதாதேவி ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்றலில் அக்கினி குண்டக்காவல் நிகழ்ச்சி இடம்பெறும். அவ்வேளையில் ஐயனா ராகவும், வீரபத்திரராகவும் உருவகித்திருக்கும் மணல் மேடை யின் அருகில் ஐயனார் காவியம், வீரபத்திரர் காவியங்கள் பாடப் படுகின்றன.

ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் பொங்கல் விழாவின் போது ஆலய முன்றலில் அவர் தம் நாமம் உரைக்கின்ற கந்தசாமி காவியம் பாடப்படுகின்றது. அத்தோடு திரௌபதாதேவியின் கரகம் திருவுலா வரும் வேளையில் கந்தசாமி ஆலயத்தை அண்மிக்கும் பொழுதும் இக்காவியம் பாடப்படுகின்றது.

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் ஆலயத்தில் உற்சவ காலங் களில் அன்னை ஸ்ரீ திரௌபதாதேவிக்கு நைமித்திய பூசை நடை பெறுகின்றபொழுது அன்னையின் அருள் வேண்டி பாடப்படு கின்ற காவியம் திரௌபதி அம்மன் காவியமாகும். அத்தோடு காளியம்மன் ஆலயத்திலே உற்சவ காலங்களில் அம்பாளின் அருள் வேண்டி அவள் சந்நிதானத்தில் காளியம்மன் காவியம் பாடப்படுகின்றது. ஆண்டிமுனைப் பதியினிலே அன்னை பராசக்தியாக வீற்றிருக்கும் ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்திலே உற்சவ காலங்களில் மாரியம்மனின் சந்நிதானத்தில் அவள் மனம் குளிரப் மாரியம்மன் காவியம் பாடப்படுகிறது. ஸ்ரீ பார்த்த சாரதிப் பெருமாள் ஆலயத்தில் அவர்தம் பெருமைகளை எடுத்துரைத்து உற்சவ காலங்களில் இசையோடு இறைஞ்சுகின்ற காவியம் ஸ்ரீ ராமர் காவியமாகும்.

ஆடித்திருவிழாவின் போது பதினாறாம் நாள் திங்கட்கிழமை மாலை, திரௌபதையம்மன் ஆலய முன்றலில் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறச் சென்ற நிலையை புலப்படுத்தும் காட்சி இடம்பெறும். அவ்வேளையில் அருச்சுனனாக வேடம் பூண்டிருப்பவரினால் பாடப்படுகின்ற பாடல் தவநிலைப் பாட்டு என அழைக்கப்படும். உடப்பு ஆடித்திருவிழாவின் போது திரௌபதாதேவியின் கரகம் ஆண்டிமுனை மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று திரும்பி வந்து திரௌபதையம்மன் ஆலயத்தினுள் நுழையும் போது திரௌபதியம்மன் எச்சரிக்கை பாடப்படுகின்றது. அவ்வாறே ஆடித் திருவிழாவின் போது பன்னிரண்டாம் நாள் திரௌபதையம்மனுக்கு திருக்கல்யாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுறும். திருக்கல்யாணம் நிறைவு பெற்றதும் திரௌபதையை வசந்த மண்டபத்தில் வைத்து ஊஞ்சல் ஆட்டப்படும் பொழுது பாடப்படுகின்ற ஊஞ்சல் பாடலே திரௌபதையம்மன் ஊஞ்சலாகும்.

உடப்பில் மக்கள் ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் கூட்டாகத் தட்டி எழுப்பும் வடிவம் கும்மி. கும்மிப்பாடல்களுடன் சேர்ந்த ஆட்டத்தை மக்கள் குழுமி நின்று ரசிப்பர். கை குவித்து கொட்டி ஆடும் ஆட்டம் கும்மி. பெண் தெய்வ வழிபாட்டில் கும்மி ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. உடப்பில் அம்மனாக உருவகிக்கப்படும் பூசகரும் கும்மி கொட்டுவார். கும்மிப் பாடல்கள் தெம்மாங்கு மெட்டில் பாடப்படுகின்றன. திரௌபதி அம்மன், காளியம்மன், மாரியம்மன் ஆகிய கடவுளர் மீது கும்மி பாடப்படுகின்றது. சித்திரைச் செவ்வாய் விழாவின் போது இளம் பெண்கள் பாடும் கும்மியும் ஆட்டமும் கலையழகு மிக்கன. பரவசம் தருவன.

ஆடித்திருவிழாவின்போது திரௌபதாதேவியின் கரகம், ஆண்டிமுனை மாரியம்மன் ஆலயத்திற்குச் சென்று திரும்பி வருகின்ற பொழுது உடப்பின் பிரதான சந்தியில் கரகம் கும்மியடிக்கும் வேளையில் திரௌபதியம்மன் பூர்வீகக் கும்மி, திரௌபதியம்மன் மான்மியக் கும்மி என்ற இருவகையான கும்மிப்பாடல்கள் பாடப்படுகின்றன.

காளியம்மன் ஆலயத்திலே நடைபெறுகின்ற வேள்வி விழாவின் போது எட்டாம் நாள் புதன் கிழமை இரவு அர்த்த ராத்திரிக் கரகம் ஊரின் சகல தெருக்களிலும் திருவுலாச் செல்லும். இறுதியாக ஊரின் நடுச்சந்தியில் கரகத்தை வைத்து கும்மியடிக்கும் போது பக்திச் சுவை சொட்டச்சொட்ட, முற்றிலும் நாட்டுப்புறவியற் குரலில் காளியம்மன் கும்மி பாடல் பாடப்படுகின்றது. இப்பாடல் பாடப்படுகின்ற பொழுது, இடையிடையே பெண்களின் குரவை ஒலி கேட்பதையும் அவதானிக்கலாம். மேலும் சித்திரைச் செவ்வாய் திருவிழாவில் பாடப்படும் கும்மி, கலியடி கம்புகும்மி எனவும் கும்மிப் பாடல்கள் உண்டு.

மனிதனது தொழில் அவனது கலை வடிவத்துக்கு ஆதாரமாயிற்று. உடப்பு மீனவர்கள் வலை இழுக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்பாப் பாடல்கள்"அவர்களது உணர்வின் வெளிப்பாடாகப் பரிணமிக்கின்றன. "அம்பாள் பாடல்கள்" அம்பாப் பாட லாயிருக்கலாம் என்பர் ஆய்வாளர்கள். ஒவ்வொரு சாதாரண மீன வனுக்குள்ளும் ஒரு கவிஞன் மறைந்துள்ளதை நாட்டுப் பாடல் கள் உணர்த்துகின்றன. வட்டார மொழி வழக்கு அற்புதமான சுகானுபவத்தை நாட்டுப்பாடல்களின் ஊடாக வழங்கு கின்றது.

வலையில் கை வைத்திருக்கும் போது வீட்டிலேயே மனம் பதிகின்றது. தொட்டிலில் உள்ள குழந்தை இதயத்தில் உதிக் கின்றது. தாயாகக் கூடு விட்டுக் கூடு பாய்கிறான். அம்பாவில் அவன் உணர்வு தெறிக்கிறது. சிறிய சொற்கள் சித்திரங்களாக்கி கருத்தைக் கவர்கின்றன. வானத்தில் சூரியன் எரிக்கிறான் கீழே மணல் கங்குகள் போக்களிக்கின்றன. கொதிப்பது மணல் மட்டுமா? அவனது உணர்வுகளும் தான். வாழ்வின் சிறுமையை வரிகளால் வடிக்கிறான். கீழே பாய்ந்தடிக்கின்ற அலைகளாய் ஓங்கி வெடிக்கும் அவன் உணர்வு; நாட்டுப்பாடலில் இலக்கியமாகின்றது.

இவ்வாறு உடப்பில் உருவெடுத்து வாய்மொழிப் பாடல் களாக இன்னும் உடப்பு மண்ணில் உலாவி வரும் இப்பாடல் களை இயன்றவரை, கிடைத்தவற்றை தொகுத்து இவை வாய் மொழியாக மட்டும் இருந்து அழிந்து விடக்கூடாது, எழுத்துரு பெற்று அவை ஆய்விற்கு உட்பட வேண்டும் என்னும் நீண்ட கால எண்ணம் இன்று இப்புத்தகத்தை உங்கள் கைகளில் தவழ விடும் போது ஓர் நிறைவைத்தருகிறது. இந்நூலை எழுத வளம் அமைத்த எம் குல தெய்வங்களின் அருளுடன், எம் உயிருக்கும் உயர் கல்விக்கும் உரம் ஊற்றி எம்மை வளர்த்த பெற்றோருக்கும், ஆசான்களுக்கும் முதற்கண் நன்றியுடன், இந்நூலிற்கு வடிவம் கொடுத்து அச்சேற்றிய எனதன்பின் துணைவியார் திருமதி சி.சோபா, பிள்ளைகள் சி.சதுர், சி.ஹம்சனா, சி.ருத்வினா ஆகி யோருக்கும், உடப்பூர் கலைகலாசார பண்பாடுகளை பாது காக்கும் எம் ஊரவர்களுக்கும், இந்நூலை வெளியீடு செய்யும் ஜீவநதி பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

வாழ்க எமது கலை கலாசார பண்பாடுகள்.

வாழ்க வளர்க எமது தமிழும், உடப்பு மரபுகளும்.

**பேராசிரியர் வ .சிவலோகதாசன்**

**துறைத் தலைவர், முகாமைத்துவத்துறை**

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. உடப்பூர் காவியங்கள்

## 1.1 விநாயகர் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

1. மூலாதி மூலமெனும் முப்பொருளும் நீரே
முத்திக்கு வித்தான முழுமுதலும் நீரே
நாலாக வேதம் பயின்றவரும் நீரே
ஞானப்பிரகாசமென நடுநின்ற வரும் நீரே
ஆலால முண்டோரின் மகனாரும் நீரே
ஐங்கரக் கடவுளாய் அமர்ந்தவரும் நீரே
பாலாபிஷேகப் பரம்பொருளும் நீரே
பரமகுருநாதா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

2. ஓங்காரத்துட் புறம் உதித்த பொருள் நீரே
ஒளிவான முக்கோணமாயுறைந்தீரே
நீங்காத நெஞ்சத் நெஞ்சத் துறைந்தவரும் நீரே
நிலை ஞானம் கலைஞானம் நிறைந்தவரும் நீரே
பாங்கான மாங்கனி பலம் பெற்ற நீரே
பரமன் உமை தான் மகிழும் பாலகனும் நீரே
ஆங்கார கயமுகன் அசுரனை அழித்த
ஆதியோம் கணபதி நமஸ்தே நமஸ்தே
(தெந்தி நதி)

3. மாணிக்கப் பிள்ளை என வந்தவரும் நீரே
மாமேரில் பாரதம் வரைந்தவரும் நீரே
காணிக்கை கொண்டே கடுகியே பண்பாடும்
கலைவாணி சரஸ்வதிக் கருள் புரியும் நீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிச்செய் தவம் வேண்டும் பெண்ணாள் அவ்வைக்கு
பேசரிய மோட்சம் கொடுத்தவரும் நீரே
ஆணிப்பெண் அம்பலத் தாண்டவம் பயின்ற
ஐங்கரப் பொருளே நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

## 1.2 ஐவர் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

1 திருமருவு அஸ்தினா புரமரசு செய்யும்
செய்ய புகழ் சந்திர குல ஐவர்கள் மீது
தரு மருவு மதுரை தமிழிசை பகரவென்ற
தந்தி முகனும் அவர் தம்பி ஆறுமுகனும்
மரு மருவு கமல மதிலுறைபவனும் மாதும்
மாரன் மதுராபுரி எரித்த மங்கையரும்
அருள் வீரபத்திரனும் மாகாளி தானும்
ஆன தமிழ் மாது அனுதினமும் அருள்வாய்.
(தெந்திநதி)

2 அருள் புரியும் அஸ்தினா புரமரசு செய்யும்
ஆன புகழ் சந்தன மகராசன் மகிழ்வாக
இருள் பரவும் வனமிருக வேட்டையது செய்ய
ஏந்திழை எனும் கங்கை தனையவர் கண்டு
பெருமண முடித்ததுமே மாது சொற்படியே
பிள்ளைகளை விட்டு மறு பிள்ளை விட்டு மறை
பருமுயர் கங்கையவள் ஈன்ற பண்போடு
பார்த்திபன் மறுக்க அவள் தானுமேகினளே
(தெந்திநதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 ஏகவே அரசனப்பிள்ளையை வளர்த்து
இன்பமுடனே அரசு புரியுமன்னாளில்
பாகனைய மொழி மாது மச்ச கந்தியும்
பராச முனி ஓட மதில் ஏறி வரும் நேரம்
தோகையவள் மச்சமாண நாற்ற மதை மாற்றி
துய்ய முனி காதலுடன் தோகையோடு சேர
ஆக முயர் வேதமுனி வியாசருமுதிக்க
அரிய பரிமளகேந்தியாக வந்தனரே
(தெந்திநதி)

## 1.3 ஐயனார் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ

1. ஆதிசிவன் மகனெனவே அவனியில் பிறந்தாய்
ஆலிலை துயின்றோள் கை அன்புடன் பிறந்தாய்
சோதியாய் உலகெங்கும் சுடர் போல உகந்தாய்
துய்ய வளமெங்கணும் ஐயனாய் இருந்தாய்
வீதி வெளி ஆகாசமெங்கும் துறந்தாய்
மேலான ஆயுதம் கை தனில் சிறந்தாய்
நீதியாய் துதிப்போர்க்கு தனி வழித் துணையாய்
நெடிய மால் புத்திரா நீயருள் செய்வாயே
(தெந்திநதி)

2. மறவாமல் அனுதினமும் மலரடி வணங்கும்
மானிடர் தனக்கருள் வாழ்வது கொடுத்து
திறமேவும் காடுவன மீதினிமுறைந்து
சிவனது குமரா அவனியில் சிறந்தாய்
குறமாது மணவாலின் வடிவேலர் துணையாய்
குஞ்சரம் தனிலேறி அஞ்சலென வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமேவும் ஐங்கரக் கடவுளுக் கிணையா
ஐயனார் அப்பனே அடி மலர் நமஸ்தே
(தெந்திநதி)

3. பாத மறவாதவர்க் கருள் புரியும் நீரே
பக்தி புரிந்தடியார்க்குச் சித்தி தரு நீரே
வேத முறை கைக் கொண்ட மேலான நீரே
விந்தையோடு பதிமீதில் விளையாடு நீரே
நாதன் என உலகெங்கு நன்மை தரு நீரே
நலமான சுகவாழ்வு தருவதும் நீரே
ஆதரவு தந்தெமக்கு அருள் புரியு நீரே
அரிகரி குமரா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

### 1.4 வீரபத்திரர் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

1. வீராதி வீரரென வந்தவரும் நீரே
வினை வில்லி சூனியம் அறுத்தவரும் நீரே
வாராத பேய்பிணிகள் வருவித்த நீரே
வஞ்சனைகள் அணுகாது மறுப்பித்த நீரே
தீராத நோய்கள் வினை தீர்த்தவரும் நீரே
சிவனுடைய திருவேர்வையில் உதித்தவரும் நீரே
நாராயணக் கடவுள் திருமருகரென வந்த
நாயகன்பாதமென்னாளும் நமஸ்தே
(தெந்திநதி)

2. நாளும் மறக்காதவர்க் கருள் புரியும் நீரே
நலமான சுகவாழ்வு தருபவரும் நீரே
ஏழைக்கிரங்கி அருள் புரிபவரும் நீரே
இஸ்டமுடன் வந்தருள் எதிர் நிற்பீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளைப் பணிந்தவர்க் கருள் புரியும் நீரே
சஞ்சலமகற்றி எமைத் தற்காத்த நீரே
வேளைக் கிரங்கி அருள் பெருகி வர
வீரபத்திரக் கடவுள் பாதம் நமஸ்தே
(தெந்திநதி)

3. உரிய நோய் துன்ப நோய் தீர்த்தாய் சிவாய நம
உத்தண்டவீரபத்திராயா சிவாயநம
கரியுரித்தோன் திருக்குமரா சிவாயநம
கணபதிக் கிளையோன் வாராய் சிவாயநம
அரிய திருமாயவன் மருகா சிவாயநம
ஐந்தெழுத்தட்சரமு மானாய்சிவாய நம
தனியவர் பிசாசகல வருவாய் சிவாயநம
சங்கரா வீரபத்திராய சிவாய நம
(தெந்திநதி)

4. பூதகண நாதனை பூதராய் கதறும்
புலிபோல வருகின்ற பூதப் பிசாசும்
வாதுபுரி உதிரமா காலி வைரவ வியும்
வாதான துர்க்கையுடன் மாடன் கறுப்பும்
கொதுபுரி சூனிய கொள்ளிவாய்ப் பேயும்
கூடியுள்ள மற்றுமுள்ள பேய்வகைகள் எல்லாம்
சோதிசரி வைரவா உன் நாமம் துதிக்க
தொடராது எமை வந்து காத்தருள் வாயே
(தெந்திநதி)

## 1.5 கந்தசாமி காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

1. திருமருவு கதிரமலை தனிலுறையும் ஈசா
தேவாதி தேவனே சித்தி தர வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக சரவணபவா கதிர மலை வேலா
முக் கண்ணனார்தந்தருளும் ஆறுமுக சீலா
கன்னல் செறி கதிரைமலை தனிலுறையு மீசா
கடவுளே உந்தாள் மீது கவிகளிது பாட
வண்ணமயில் மீதேறி வந்துதவ வேண்டும்.
வள்ளி மணவாளனே உந்தனடியார்க்கு
(தெந்திநதி)

2. சீர்மேவு கற்பகப் பொருளே சிவாயநம
செந்தில் வடிவேல் முருகா சிவனே சிவாய நம
கார்மேவு கைலாச நாதா சிவாயநம
கருணையாங் கடலான சோதி சிவாயநம
பார்மேவு பன்னிரு கை வேலா சிவாயநம
பட்சம் வைத்தடி யோரைக் காப்பாய் சிவாயநம
தார்மேவு சண்முகத் தயாளா சிவாயநம
சரவண பாவாயா சிவாயா நமஸ்தே
(தெந்திநதி)

3. சரவண பவானந்தாபரனே சிவாய நம
சத்தியருள் பாலலெனும் குகனே சிவாயநம
திருமேவு செந்தில் வளர் சிவனே சிவாயநம
சித்தார்ப்ப சித்தர் தொழு சிவனே சிவாய நம
குறவர் குல வள்ளி மணவாளா சிவாயநம
கூறும்படியார் வினை தீர்ப்பாய் சிவாயநம
மறவா வரமெனக் கருள்வாய் சிவாயநம
வடிவேல் முருகா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

4. பன்னிரு வேல் குருபரனே சிவாயநம
பழனி மலையுறைபவனே சிவாயநம
கன்னி தெய்வானை மணவாளா சிவாயநம
கந்த முருகக் கடவுள் நாதா சிவாய நம
அன்னை குரு தெய்வமு நீ அரனே சிவாய நம
ஆறுமுகவேல்குருபரனே சிவாயநம
உன்னி மயில் மீதேறி வருவாய் சிவாயநம
ஓம் நமசிவாய நமஸ்தே
(தெந்திநதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வடிவேல் துலங்க மயில் வருவாய் சிவாயநம
வரும் அசுரர் சூலமதை மடித்தாய் சிவாயநம
கொடியதோர் சூரனை வதைத்தாய் சிவாயநம
குமாரவேல் முருகா குகனே சிவாயநம
அடியவர் செய்பிழை பொறுத்தாள்வாய் சிவாய நம
அரகர சிவானந்தா அரனே சிவாய நம
படி மீதில் மானிடர்க் கருள்வாய் சிவாய நம
பன்னிரு கை வேலா சிவாய நம
(தெந்திநதி)

6. ஓம் நமசிவாய வென் ஒளிவே சிவாயநம
உத்தண்ட மாருத்தத் தொளிவே சிவாயநம
வானவர் துதிக்கும் வடிவே சிவாயநம
வள்ளி தெய்வாணை மணவாளா சிவாயநம
கானமயில் மீதேறி வருவாய் சிவாயநம
காவடி மனோகரா சுவாமி சிவாயநம
ஆணைமுகத்துக் கிளையோனே சிவாயநம
இறைவனே முருகா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

### 1.6 திரௌபதி அம்மன் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

1. ஆதியாம் பரமசிவன் அருள் புரிந்ததனால்
அம்பிகை பராசக்தி வேண்டு திருவாக்கால்
நீதியாய் உலகமீதில் கற்பு நிலை தோன்ற
நின்நிலம் அறியவே நிமலன் அருள் கூர்ந்து
சேதியாமைந்து தருமுக மதில் தோன்றும்
சுடரான ஞான முனி துய் முனியாகி
போதியாய் நின்று திருவிளையாடல் செய்த
புராதியே அரகர அரகர சிவாய நமஸ்தே.
(தெந்திநதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. துய்ய முனியாகியே தொல்லுலகில் வந்து
தூய தவ முற்கல முனி தவப்பேற்றில்
வையமதில் முனிவனின் மகனாகி வரவே
மதுவுமை சக்திசுடர் மங்கை பாவகியாள்
பையரவளிந் தோனின் பரமனின் அருளால்
பாரில் நளராசன் தவம் பெற்றில் சிசுவாம்
தையல் நளராச புத்திரயாய் வந்த
சக்தி நாளா கன்னி பத்தினி நமஸ்தே
(தெந்திநதி)

3. உன்னத நளா கன்னியாகவே சிறந்தாய்
உற்ற பரஞான முனி தம்மையே மணந்தாய்
நன்னயமாய் கற்பு நிலை தன்னிலுமுயர்ந்தாய்
ஞான இந்திர சேனையென நாமம் சிறந்தாய்
பின்னே செந்தணலில் தவமது தொடர்ந்தாய்
பிரியாது நாயகன் வரமதையடைந்தாய்
அன்னையே உலகோரை ரெட்சிக்க வந்த
அரிய பதி விரதா நமஸ்தே நமஸ்தே.
(தெந்திநதி)

4. சீர்மேவும் நிலமங்கை தன் பாரமற்ற
சிவ பரனின் அருளினால் அவள் சுமை தவிக்க
பார்மீதில் முனிவரைப் பாண்டவர்களாக
பச்சைமால் மாயனையும் பார்த்தசாரதியாக
போர் மேவும் பாரதம் வேறு முடிக்கவே
புரியவே ஈசன் புகன்ற திருவருளாய்
ஏர்மேவும் ஈசனருளால் தணல் உதித்த
ஈஸ்வரி திரௌபதா பாதம் நமஸ்தே
(தெந்திநதி)

5. ஆதிசிவன் அருளினால் அக்கினி பிறந்தாய்
ஐவர்க்கும் மனைவியாய் அன்புடன் மகிழ்ந்தாய்
நீதியாய் உலகினில் நிலைமைகள் சிறந்தாய்
நித்தியானந்த நவ சக்தியென வந்தாய்
சோதியாய் மாதவன் துணையெனவே கொண்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லுலகில் பாரதப் போரதனை வென்றாய்
ஓதவே எங்கும் உன் நாமம் சிறந்தாய்
உத்தமி திரௌபதா பத்தினி நமஸ்தே
(தெந்திநதி)

## 1.7 காளியம்மன் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ

1. அரியாச்சரத் தீ திரிசூலி ஓங்காளி
அபிராமி மகமாயி ஆன கம்பீரி
திரிபுரி சிவானந்தி சம்மன் துரைப்பது
செழிக்க வரும் வீரபத்திர காளி மீது
தேரு தமிழ்க் காவியம் அன்பு செறி காவியம் இயற்ற
தெரு கருட கரிமுகமும் அழகமார் அழகும்
வரு கருட விகடதட மனைய குட வயிறன்
மலரடிகள் அனுதினமும் மனதில் மறக்கேனே
(தெந்திநதி)

2. ஆதி அந்தரி கௌரி வீரி கெம்பீரி
அகிலாண்ட நாயகி அரி சகோதரியாள்
சோதி சங்கரி துர்க்கை அரிசிங்க வாகனி
துய்ய மகுடாசுர தூய நடன மாரி
பாதி மதி சூடியுடன் ஆடும் மகமாயி
பரலோக சிவலோக நவலோக காளி
நீதியாய் சம்மாந் துறை செழிக்க வரும்
நேசமுயர் வீரபத்திர காளி தாயே
(தெந்திநதி)

3. இந்து மலர் சூடியுடனே சுடலை தனில்
இன்பமுடனே நடனமாடு மகமாயி
கந்தரோடு கரிமுகன் தனையருள் தேவி
காரணி வராகி கலையோது சிவகாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தை செறிமுக்கண்ணி வேத வேதாந்தி
விமலி திரிபுர கௌரி விழியாயிரத்தி
சந்தமிகு சம்பன் துரைப்பதுசெழிக்க வரும்
தாயான வீரபத்திர காளி தாயே
(தெந்திநதி)

4. ஈகையுடனே முப்பத்து முக்கோடி தேவரும்
ரிசி கிட்டிரா முனிவர் தென்திசை யுள்ளோரும்
தோகைஎன உன்னடி பணிந்து உனைப் போற்றி
சுருதியுடனே சுடலைதனில் நடனமாடும்
வாகையுடனே நெட்டு கரத்திலாயுதமும்
வகையாகவே எடுத்து அசுரரை வதைத்தாய்
தோகையே சம்பன் துரைப்பது செழிக்க வரும்
சூரிய பத்திர காளியே தாயே
(தெந்திநதி)

5. உம்பர் தொழ பகவதி பரம மனோன்மணி
உத்தாண்டி திரிசூலி வீரி ஓம் காளி
சம்புறு சுடர் சக்தி மாதங்கி திரிசூலி
சாலோக சாமீப சாயுச்ச தேவி நீ
நம்பினபேர்க்குதவு கௌரி நாரணன் வீரி
நளினமொடு விதயோக கமல காமாட்சி
கொம்பு குழல் சம்பன் துரைப்பது செழிக்க வரும்
கோயிலுறை வீரபத்திரகாளி தாயே
(தெந்தி நதி)

6. ஊழி காலத்தில் ஒளிவான சக்தி நீ
ஓங்கார முக்கோண மானசிவ சக்தி நீ
தாள் பணிபவர்க்கருள் கொடுத்த சிவ சக்தி நீ
சாருபமாக வேதமுத லிருந்த சக்தி நீ
வாழ் புலன் வாலை நீ மாயவன்
தங்கை யேனும் ஆதிசிவ சக்தி நீ
காளியே சம்பந்துறை கவரும்
சூரியே வீரபத்திர காளியே
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எண்ணெட்டு அறுபத்து நாலு கலை ஆன நீ
ஈஸ்வரியே வடகடலில் ஏகியே வந்தாய்
முற்றவே முவிநாங்கு சத்துருவானாய்
முறுகடல் ஏழையும் முன்னே குடித்த நீ
துஷ்ட பிசாசுகளை வெட்டியே கொண்ட நீ
சுடலைதனில் பேச்சி வடிவாகியே வந்தாய்
கட்டழகி சம்மாந் துறை செழிக்க வரும்
தாயான வீரபத்திரகாளி ஆனவளே
(தெந்தி நதி)

8. ஏக பானாரிட மிருந்தாய் நமோ நமோ
இடகோர்கள் பிணி தீர யாளவந்தாய் நமோ நமோ
நாக சடை தெரிய வந்தாய் நமோ நமோ
நாலு ரெண்டாயுதம் எடுத்தாய் நமோ நமோ
வாகலை யதுகையைக் கொண்டாய் நமோ நமோ
வரு பிணி துயரகல வந்தாய் நமோ நமோ
தோகையே சம்பந்துறைபதி செழிக்க வரும்
சூரியே வீரபத்திர காளி தாயே
(தெந்தி நதி)

9. ஐயனுட நேயினை யான சிவமருளன்
ஆடிவரும் காடேறி ஆதிவைரவனும்
துய்யனும் மிறுமண் வீரன் முண்டனோடு
பரிகமலன் சூறவே தற்கொலு மாந்தாயே
வையமிகு மானிடவர் பிணிநோய் அகற்றி விடி
மாபூசை பலிதனை உகந்தருள் செய் வாயே
தையலே சம்பந்துறைபதி செழிக்க வரும்
தாயான வீரபத்திர காளி தாயே
(தெந்தி நதி)

10. ஒளிவான முர சக்தியாக வந்தாயே
உலகோர்கள் பிணிதீர அருள் புரிந்தாயே
தெளிவான முக்கோண மீதுறைந்தாயே
சிவனாரிடப்பாக பேவி வந்தாயே
களிகூற உன் கிருபை காண வந்தாயே
கருணை தந்தெமை யாளவந்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிசமுது இசைபாடும் சம்பந் துறைபதி
செழிக்க வரும் வீர பத்திரகாளி தாயே
(தெந்தி நதி)

11. ஓதுமறை யானசிவ சோதீ சிவாய நம
உத்தண்ட மாருத தேவி சிவாய நம
வேத முடிவான சிவ சோதி சிவாய நம
விண்ணும் மண்ணும் புல்லு மானாய் சிவாய நம
நாத ஒளியான சிவசோதி சிவாய நம
நாலு ரெண்டாயுதம் எடுத்தாய் சிவாய நம
சோதியே சம்பந்துறைபதி செழிக்க வரு
(தெந்தி நதி)

12. ஓம் வவ்வும் சவ்வும் ஆன கோமாரி
அம்மை பத்திரகாளி வாள கெம்பீரி
உவ்வும் ரீங்காரமான சிவ பானும்
ஓதரிய கல்யாண வீரபத்திரனும்
மவ்வும் நவ்வுமான தமிழ்மாது மாலயனும்
மாதுமையும் வள்ளி காதலனும்
சவ்வும், நவ்வும், பவ்வுமான கனநகையும்
தாமலரும் மங்கையரு மேதுணை தாமே
(தெந்தி நதி)

13. அக்காளகம் பூண்டசிவ னாரிட முறைந்தாய்
அம்மை பத்திரகாளி யான கெம்பீரி
மிக்க புதன் வேதாந்த விமலி திரி சூரி
வின்னோர் துதித்தருளும் வேத வேதாந்தி
திக்கினிலே மானிடர்கள் செய் பிழை பொறுத்து
உற்ற வறுமை பிணி தீர அருள் செய்தாய்
தக்கன சம்பந்துறை தாயான
வீரபத்திர காளி தாயே
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

## I.8 மாரியம்மன் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ.

*1.* அரியாச் சரத்தினில் சூரியோம் தாயே
அகிலாண்ட நாயகி அரிசகோ தரியாள்
திரிபுர சிவானந்தி வேத வேதனந்தி
சீரான உடப்பு நகர் செழிக்க வரும் தாயே
ஏறு தமிழ் அன்பு சொறி காவியம் இசைக்க
ஏழு கருணை அறிய தமிழ் வளருமா வளரும்
இரு கருணை விகட கட மனயகுட கவரன்
மலரடிகள் அனுதினமும் மனதில் மறவேனே
(தெந்தி நதி)

126570
265489

*2.* இருள் அகற்றி மானிடங்கள் பிணி நோயகல
இன்பமுடன் உடப்பு நகர் பதிமீது அமர்ந்தாய்
வருமடியார் யாவர்க்கும் வரமருளவந்த
வாகான மாமாரி நாயகி யருளே
தேவியே சாரளா கம்பையிலிருந்து
ஜெயமான நளகமுத்து ஆசியிணையாரும் நேரம்
ஆண்மை செரினகளை மகள் உந்தன்க்கஞ்ச்சி
ஆரணிய மது தன்னில் அஞ்சி ஓடின்னே
(தெந்தி நதி)

*3.* சீர்மேவும் ஐங்கரக் கடவுள் தனை வாழ்த்தி
சேவடி தனைத் தொழுது செல்வி துதிபாட
கார்மேவும் கைலை மலை மீதினில் உதித்த
கந்த முருகக் கடவுள் வந்து அருள்புரிவார்.
போர் மேவும் ஆதி காமாட்சி தன் காவியம்
பேருலகிலே புகழ்ந்தே துதித்திடவே
ஆர்மேவும் களபமுலை வாலையும் அரியனும்
அம்பிகையும் முன் வந்து அருள் புரிவாயே
(தெந்திநதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அருள் புரியும் அம்மையே ஸ்ரீ ராமர் தங்கையென
அன்றுலக மீதுதனில் அன்பு வைத்தவளே
இருள் பெருகும் பூதப் பிரேதப் பிசாசும்
ஏற்றியே போற்றி செய்யும் ஈஸ்வரியும் நீயே
அருள்புரியும் வரை உனை அண்டும் அடியவர்கள் தம்மை
ஆளவரும் ஆதிசிவன் ஆனந்தி நீயே
பொருள் பெருகும் அம்மையே ஆதி காமாட்சி என
பேதமையகற்ற வரும் லோக நாயகியே
(தெந்தி நதி)

5. நாயகி உன் புதுமை நாவாலுரைக்க
நாவிலவும் ஒருவரால் முடியாது அடியேன்
காவியக் கரை தனில் காமாட்சி உன் புதுமை
கண்டும் காணாதபடி இதைக் கூறுகின்றேன்
மேவியே கண்ணர் தன்னை விட்டேகி
விமலனை வணங்கியே மணமகள் கொண்ட
தேவியே மணமகள் தனக்கு முத்தெறிய
சிந்தை மகிழ்வாகவே அன்பு வைத்தனளே
(தெந்திநதி)

6. அன்புடனே மகமாயி கங்கை நதி மூழ்கி
அரகர சிவாய வென்றே தவமிருக்க
இன்பமொடு சிவபரனும் அன்போடு தோற்ற
ஈஸ்வரியும் வாழ்த்தி முத்தெறிய வரமீந்தாள்
அன்புடனே காமாட்சி அரிய ஒரு முத்தை
அரனார் கை விரலிலே எறிந்திடவே
துன்பமுடன் தீவினை பொறுக்கமுடியாது
தோகையே காய்ச்சல் வினை தீர்த்தருள்வாயே
(தெந்திநதி)

7. தீர்த்தருளுமென்று நல் சிவனுரைக்க
தேவி காமாட்சியும் தீவினையை மாற்ற
பார்த்ததுமே நல்சிவபரனும் மானிடர் தமக்கு
பாவையே இத்துன்பம் நீ செய்திடாதே
போற்றியே அம்மனும் சிவபரனை வாழ்த்தி
புகழ் பெருகும் காராள பட்டணம் உறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியாய் மாரியும் முத்து விளையாட
நேசமோடு கைலை மகள் நாடியோடினளே
(தெந்திநதி)

8. ஓடியே கானகம் தன்னில் அவனேக
ஒப்பரிய காவிதனில் அப்போது அமைத்தார்
தாவியே அழுதுன்னை நினைக்கின்ற நேரம்
தாயே நீ வேசமது வேறுருவ மாகி
மேவியே அவன் முன்னம் ஏகியே நின்றாய்
இன்னபல நன்னபலி நன்னயம் அறிந்தாய்
ஆவிதரும் அம்மையே காரான பட்டணம்
அழியுலகல அம்மைமுன் உறைபகல உற்றாய்
(தெந்தி நதி)

9. உறைபலகாளும் அம்மையே மனதிலே நளகக்க
உச்சியை வகுத்து நீ இப்பார் ஏற்றாய்
கரை பெருகும் உணர்ச்சி தன்னையும் வகுந்து
தான் பார்த்து மேதரணி மீதினில் விழுந்தாய்
உரைபகலும் அம்மையே அவன் உயிர் எழுப்ப
ஒருகண் விழித்திட ஒளித்திட நினைத்தாய்
திரை பெருகும் ஆயிரம் கண்ணிருக்கையில்
தேசத்தில் ஓடிவிடலும் உன்னைவிடுவேனோ
(தெந்தி நதி)

10. உன்னை விடமாட்டேன் அம்மையும் உரைக்க
ஒன்றுக்கும் அஞ்சாதே என்றுமின் கூற
தன்னை ஒரு அன்பனாய் உன்னை காத்திடுவேன்
சத்தி சிவ புடை சூழ நிச்சயமாதாக
என்னை நீ ஆலயம் தன்னில் வைத்தே - பூசை
இன்பமொரு கும்பமோடு கங்கையில் நீ நிறுத்தி
அன்னையே உன்னை நினைத்த இடம் மெல்லாம்
காத்திடுவான் என்று வரமே கொடுத்தாய்
(தெந்தி நதி)

11. வரமது கொடுத்தபின் அரியமனம் மகிழ
வாழி சிவகாமியை மனதினில் நினைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமது படைத்திடும் காராள பட்டணம்
காணவென்றே மனதில் வேனிதமதாகி
சிரமது வளத்திடும்சிவகாமி கும்பமது
திட திட நிறுத்தியே செய்திட நினைத்தாய்
பரமனின் கிருபையால் சிவகாமி கும்பமது
பாங்குறவே வினிகள் நீங்க வைத்திடவே
(தெந்தி நதி)

12. வைத்தபின் கும்பமது துளிர்விட்டு எழுந்து
வடிவான கைமுத்து வாசமதுவாகி
மொய்த்த பின் மானிடர்கள் பிணிநோய் அகல
மோட்சம் கொடுத்தருளும் முத்துமா மாரி
மாட்சி எழுந்து நல் மாநிலம் மகிழ
மாமாரி ஆண்டிமுனை பதிதனில் எழுந்தாய்
காட்சி கொடுத்து கலிதீர்க்க வந்த சிவ
காமாட்சி ஏக மீனாட்சியானவளே
(தெந்தி நதி)

13. மீனாட்சியே கோடி காராள பட்டணம்
விடி விளக்காய் நின்ற மின்னொளி வாகி
தேனாட்சி உன் பாதம் அடியவர்க் கருள்வாய்
தேவாதி தேவர் புகழ் லோக நாயகியே
பானாட்சி பதினாறு லோகஞ் செழிக்க
பக்தியுடன் முத்து விளையாடியே உகந்தாய்
தானாட்சி உன் புதுமை தன்மையை நினைந்து
சித்தி காமாட்சியே நித்தம் மறவேனே
(தெந்தி நதி)

14. சித்த மறக்காமலே சிவனிடம் அமைந்தாய்
தேவாதி தேவர் புகழ் சிறந்திட உறைந்தாய்
சக்தி மக மாரி யென எத்திசை சிறந்தாய்
சர்வ உயிர் யாவர்க்கும் மெய்யருள் புரிந்தாய்
சித்தமொடு கண்ணருள் தன்னிலே அமர்ந்து
துன்ப வினை அகலாது அன்பருள் புரிந்தாய்
அத்தனை வணங்கியே நித்தி வரம் வேண்டும்
ஆதி காமாட்சி உன் அருளை மறவேனே
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆச்சி நீ அபிராமி யாகவும் வந்தாய்
ஐயனோடு பரிகலஞ் சூழ வளர்ந்தாய் நீ
பேச்சி நீ பெருமாளுடன் பிறந்தாய் நீ
பேரான ஆயிரம் கண்ணுடைய வளும் நீ
தமிழச்சி யொன்றில் லாத சர்வநாயகி நீ
சர்வ லோகங்களுக் கௌரியாய் அமைந்தாய் நீ
ஆட்சி நீ அடியாரை ரெட்சிக்க வந்த
ஆதி காமாட்சி உன் பாத மறவேனே
(தெந்தி நதி)

## I.9 ஸ்ரீ ராமர் காவியம்

தெந்திநதி நாதிநதி நாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ

1. அரிஹரி நமோ ராமா நமோ நமோ
அகிலாண்ட கோடி வடிவானாய் நமோ நம
பரிவுடன் அடியார்க் கருள்வாய் நமோ நமோ
பாற்கடல் மீதினில் துயின்றாய் நமோ நமோ
தரியவர்கள் பணியும் ஸ்ரீ நாதா நமோ நமோ
தாமோ தரானந்த சாமி நமோ நமோ
அரிஹரி கோவிந்த ஐயா நமோ நமோ
அச்சுதா அரி கிருஷ்ண தேவா நமோ நமோ
(தெந்திநதி)

2. அரி கிருஷ்ணதேவா எனை ஆள்வாய் நமோ நமோ
அயர் மேவு மங்கை மணவாளா நமோ நமோ
விரியும் மேனி உருவானாய் நமோ நமோ
விண்ணோர் தமக்கருளும் விமலா நமோ நமோ
வரும் வினைகள் அணுகாமல் காப்பாய் நமோ நமோ
மாதவா கோவிந்தா வடிவே நமோ நமோ
கரு மேக ஒளிவான கண்ணா நமோ நமோ
காயாம்ப ரூபா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காயாம்பூ மேனி ஒளிவானாய் நமோ நமோ
கம்சனை வதைத்த அரிநாதா நமோ நமோ
மாயாவுதாரனென வடிவே நமோ நமோ
மலை தனை குடை பிடித்தாய் நமோ நமோ
ஆயா முகுந்தா அரி அரி ராமா நமோ நமோ
அழகை முலையுண்டுயிர் குடித்தாய் நமோ நமோ
நீயே இரங்கி அருள் புரிவாய் நமோ நமோ
நீல நிறமாயா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

4. நீலநிறமாய் நின்ற வடிவே நமோ நமோ
நிமலனே யடியவர்க் அருள்வாய் நமோ நமோ
கோல நெடு மாயனே சுவாமி நமோ நமோ
கோவிந்தா கோபாலா ராமா நமோ நமோ
காலன் எனை அணுகாமல் காப்பாய் நமோ நமோ
காலன் கடாட்சன் எனும் கண்ணா நமோ நமோ
பாவம் பிழை பொறுத்தாழ்வாய் நமோ நமோ
பச்சை நிற மாயா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

5. அரிகரி ஓம் நமோ ராமா நமோ நமோ
அவர் மேவு மங்கை மணவாளா நமோ நமோ
பரிவுடன் அடியவர்க் கருள்வாய் நமோ நமோ
பார்கடல் மீதில் துதித்தாய் நமோ நமோ
தரியவர்கள் துதிய மணி வானாய் நமோ நமோ
தாமோதரானந்த சுவாமி நமோ நமோ
அரி கரி கோவிந்த ஐயா நமோ நமோ
அரி கிருஷ்ண தேவா நமஸ்தே நமஸ்தே
(தெந்திநதி)

## 1.10 வைரவ சுவாமி காவியம்

தெந்திநதி நாதிநதிநாதிநதி நானா
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ
தெந்திநதி நாதிநதி நாதிநதி நானதின
தினநாதி நாதிநதி நாதிநதி நானோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சீர் மருவு பேர் மருவு ஐங்கரக் கரிமுகன்
சேவடி தனைத் தொழுது அடியேனிசைக்க
கார் மருவு கயிலை மலை தன்னினிலமர்ந்த
கந்த முருகக் கடவுள் வந்தருள் புரிவார்
பொருள் பெருகும் வயிரவக் கடவுள் தன் காவியம்
பேருலகிலே தழைத் தாபமொடு பெருக
அருள் பெருகும் குங்கும களப முலை வாழையும்
அரியனும் அம்பிகையும் அருளை மறகேனே
(தெந்திநதி)

2. மறுக்காமல் அனுதினமும் வைரவக் கடவுளை
மனதிலே நினைத்தடியேன் மதுரைத் தமிழ் ஓத
திறமான தென் சேர்வை ராமேஸ்வரத்தில்
சென்று முதலாய் வரும் தீர்த்த மிவை யாவும்
குற மாதின் மணவாளன் கதிரேசன் பதி வாழும்
கொற்றவன் குரம்பனுடன் உற்ற துணையாக
திறமேகும் வைரவக் கடவுள் தன் காவியம்
செப்புமடியார் துயர் தீர்த்தருள்வாயே
(தெந்திநதி )

3. விஸ்தாரமாக வந்துதித்தவரும் நீரே
விண்ணோர் தனக்குதவி செய்தவரும் நீரே
கர்த்தா வெனப் பெருமை கற்பித்த நீரே
கதிரேச நாதருக்கருளான நீரே
சற்றாகிலும் தவசு தப்பாத நீரே
தம்பட்டமில்லாது தாளமுள்ள நீரே
வற்றாத வாவிதனில் வந்துறைந்தீரே
வைரவசுவாமி என வரும் தம்பிரானே
(தெந்திநதி)

4. பாதாள லோக முதலான உலகெங்கும்
படைத்தருளும் ஆதியாம் தம் பணிவதாலும்
வாதாடும் தூண்டி கறுருப்பனோடு காடேறி
வைரவனும் இருளனும் வண்ணாரப் பேயும்
வேதாளம் பூதமொடு பாதாள வைரவன்
வெண் சாமரை வீச அஞ்சலென வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் நீரல்லால் வேறோருமுண்டோ
அம்பிகை மகிழ்ந்துதவும் ஆதி வைரவனே
(தெந்திநதி)

5. ஆதி பரமசிவன் மகனாக வந்தாய்
அண்ட புவனங்கள் தொழ என்றுதவி தந்தாய்
சோதியாய் ஈரேழு பதினாறு உலகமும்
சுடர் போல அக்கினி மயமாகி நின்றாய்
வேதியர் போல ரூபமாகியே நின்று
வேதாந்த சுடலை தனில் நாதாந்த மானாய்
நிதியாய் உலகோரை ரெட்சிக்க வந்தாய்
நித்தனே வைரவர் சித்த மறவேனே
(தெந்திநதி)

6. கரிமேவும் அரியவினை வலு விருமையாலும்
கடிய நோய் பிணியாலும் அக மேலிந்தாலும்
கார்மேவும் இடதுபா கந்தனிலும்
கத்தரிவு வெங் கபாலம் தரித்தாலும்
பார்மேவு குரு ஞான பாலதே சிகனே
வைரவா மாறாத மதுரை வாசகனே
வீர் கபாலமது கைதனில் சூலம் தரித்து
நின்றாட வரும்திரி சூல வைரவா உனதடைக்கலமே
(தெந்தி நதி)

7. கச்சுசி கமண்டலம் கைதனில் புத்தகம்
காவி வஸ்திரம் இடைதனில் தரிக்கும்
உச்சித திருநீறு சிவ மணித் தாள்வடம்
உலகார்ந்த கபால மொடு கரமீதணிந்து
வச்சித குண்டலம் கரத்தினில் துலங்கவே
வடிவான திரி சூலம் முன் கைபிடித்து
அச்சுதன் மருகனே அச்சுதானந்தனே
ஆனந்த வைரவா அரிய வரமருள்வாய்
(தெந்தி நதி)

8. பூத கண நாதரும் பிரம ராட்சதரும்
புலி போல வருகின்ற பூதப் பிசாசும்
வாத புரி உதிரமா காளி வைரவியும், வாகான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்கை முதல் மாடன் கறுப்பன்
கோது பிலி சூனியக் கொள்ளிவாய் பேயும்
சூளிகளும் மற்றுமுள்ள பேய் வகைகளெல்லாம்
சோதி நெறி வைரவா உன் நாமம் துதிக்க
சூரியனைக் கண்ட பனிபோலகன்றிடுமே
(தெந்தி நதி)

9. அன்பு வியிலுள்ள வர்கள் தங்கள் துயர்தீர
அஞ்சவெனவே பணித் தென்புருகி நெஞ்சம்
நம்ப மடி யார்களுடன் துன்பம் அகற்றி
நாள் தோறும் உன் கருணை யாயுதவேனும்
தும்பி முகனாங் கந்தவேல் முருகர் தானும்
துணையாக உந்தனுக் கிணையாக வேதான்
இன்ப மொடு மானிடர்கள் தங்கள் துயர்தீர
ஏகாந்த வைரவா இனிய வரமருள் வாய்
(தெந்தி நதி)

10. அருள் மிகு வாயுன்னை அண்டு மடியார்க்கு
அன்பினோடு துன்ப வினை அகல ஓடிடவே
தருள் பெருகும் மதி முகத்தென வருவாய்
சத்திய அருள் பாலக நித்திய கல்யாணி
திரு மருவு தேவனே உனதருள் புரிந்து
சித்தம் வைத் தடியார்கள் சிந்தையில் இருந்து
கருமருவு கர்மவினை அணுகாமல் அருள்வாய்
கடவுளே வைரவா உனதடைக்கலமே
(தெந்தி நதி)

11. வல்லரும் வடுகரும் வருகராக் கிலிசபம்
மலை போலே வருகின்ற மாடன் கறுப்பன்
பட்டாணி காளி வைரவியும் ஏகாந்த
தன் துர்க்கை இனிய சாமுண்டி
சொல்லவும் முடியாத பேய் வகைகளெல்லாம்
துணையாக உந்தனுக்குக் கிணையாக வரவே
அல்லல் வினை யனகாமல் நல்ல வரமருள்வாய்
ஆனந்த வைரவா உனதடைக்கலமே
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கந்தமலர் திண்பயனே சிந்தை மகிழ்வாக
கைலாச பதிதனில் ஒளிவாகி நின்றாய்
சிந்தை யுடனே உலகில் உந்தனை வணங்க
நித பூசை பலிதனை நீயுகந் தருள்வாய்
விந்தை நெறி பூவுலகில் விடு ஏவல் சூனியம்
வினை பில்லி கண்ணூறு வேறு வினை தீர
வந்த பிணி யகல உந்தனருள் தருவாய்
வைரவ சுவாமி என வருதம் பிரானே
(தெந்தி நதி)

13. அன்னை குரு தெய்வமென உன்னை நித மெண்ணி
அன்புடனே உன் புதுனம் நெஞ்சதனி லெண்ணி
பின்னை யுனை உலகுதனில் கன்னியே யுகந்து
பேணியும் பாதமது புகழ்ந்திட நினைந்த
உன்னை நித மானிடர்கள் கர்ம வினைதீர
உன் பதமே பணிந்தன்பு பெற வேதான்
நன்மை பெற வுலகோர் என்னையே காப்பாய்
நாதனே வைரவா உன தடைக்கலமே
(தெந்தி நதி)

14. முப்பத்து முக்கோடி தேவரோ முகந்தாய்
மூர்த்தியே உன் மகிமை சாற்ற முடியாது
கற்பக பெருமா னாக்கணபதிக் கிளையோன்
காரண கடாட்சனே கருணை
செப்பு மடியார்கள் வினை தீர்த்தருள் வேணும்
தேவனே இனியுனது ஆதரவாக
எப்போது மடியாரை இரட்சிக்க வருவாய்
ஏகாந்த வைரவா இனிய வரமருள்வாய்
(தெந்தி நதி)

15. கந்த மொடு சந்தனம் பன்னீர் புனைந்த
கஸ்தூரி பொட்டுனதுநெற்றியி லணிந்து
விந்தை யொடு திரு நீறு மேனியில் அணிந்து
விதமான காவி வஸ்திரம் இடையில் தரித்து
சுந்தரப் பாத குற காலிலிட்டு
சூல மொடு கையில் கபாலம் பிடித்து
அந்தணர்கள் முனி வோர்கள் உந்தனருள் புரிய
அன்புடனே வருவாய் ஆதி வைரவனே
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. திட்ட மொடு அலை கடலில் மகரம் எடுத்தவா
தேவாதி தேவர் தோலும் தேவ தேசிகனே
கார் மேவு தொண்டையில் கட்டு கன்னப் பிளவை
கடிய வினை துன்பம் அணுகாமல் அருள்வாய்
பேர் மருவு வைரவா உனது திரு நாமம்
புகழ பிணி களதுஅகல ஓடிடுமே
(தெந்தி நதி)

17. ஓடு மேசுரமோடு பிணி செல் கறுப்பன்
உற்ற தொரு கோழை யோடு குத்து வலிப்பு
சாடுமே வருகின்ற சண்டாளப் பேயும்
சகல பிணி துன்பமொடு வஞ்சனைக ளெல்லாம்
நாடுமே வைரவா உனது திரு நாமம்
நாவினால் உரைக்க வினை நாடியோடிடுமே
பாடு பட்டோடவே நீ யருளவேனும்
பரமனின் முதல்வனே வரமருள்வாயே
(தெந்தி நதி)

18. வரமருள் மாயவர் விரு பில்லி சூனியம்
மாறா கொடிய நோய் வஞ்சனை களெல்லாம்
கார்மருவு கர்மவினை கொடிய காமாளை
கட்டுக் கரப்பனோடு கடிய பீ னிசமும்
கார்மருவு பிரமேக ககல விஷமுழுவதும்
சதிருடனே அணுகாமல் தயவு புரித்து
சீர்மருவு வைரவா உனது திரு நாமம்
செப்பு மடியாரகள் வினை தீர்த்தருள்வாயே
(தெந்தி நதி)

19. அரிய யனும் துன்ப வினை தீர்ப்பாய் சிவாய நம
அண்ட புவனங்களில் உறைந்தாய் சிவாய நம
பரி புர சிவானந்த பரனே சிவாய நம
பரம குரு புத்ரா பாலா சிவாய நம
கரிமேக மாயவன் மருகா சிவாய நம
கணபதிக் கிணை துணையாய் வந்தாய் சிவாய நம
வல்வினை யணுகாமல் அருள்வாய் சிவாய நம
வைரவ சுவாமி சிவாய நமோ நமோ
(தெந்தி நதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. அம்மன் எச்சரிக்கைகள்

## 2.1 திரௌபதியம்மன் எச்சரிக்கை

நானா நன்னன் நானா நன்ன
நானே நானா நன்னன் நானா

1. ஹரி ஓம் ஹரி நாராயணா அமலா நித்த நிமலா
பரி பூரண வடிவே மச்சமாலே எச்சரிக்கை

2. திருமேவு செங்கமலமீதே யுறைதேனே
அருள் மேவிய உமையாள் எங்கள் அம்மனே எச்சரிக்கை

3. அம்மனே பாஞ்சாலன் செய்த அரிய தவத்தினிலே
பெண்ணென தீயில் பிறந்தாய் அம்மா பூவையே எச்சரிக்கை

4. பூவையே பாஞ்சாலன் அருள் பொன்னின் கிளி மொழியே
பாவை மார்பிடை சூழ வரும் பத்தினி எச்சரிக்கை

5. பத்தினி மகா உத்தமி ஆதி பத்திர காளி சகோதரி
எத்திசை எங்கும் கீர்த்தி பெற்ற ஈஸ்வரி எச்சரிக்கை

6. ஈஸ்வரி பரமேஸ்வரி உலகெங்கும் ஒளியானே
பார்வதி பாஞ்சால பரஞ்சுடரே எச்சரிக்கை

7. சுடரே சுடர் ஒளியே சுந்தரமே செந்திருவே
கடல் சூழ் புவி மீதுறைந்தாய் கண்ணே எச்சரிக்கை

8. கண்ணே நவமணியே அரி கமலா சனத்தாலே
விண்ணோர் புகழ் திரௌபதியே விமலி எச்சரிக்கை

9. விமலி அருச்சுனனும் வில்லை வளைத்து மச்சமறுத்து
அமலி ஐவர் மணமுடித்தாய் அன்னையே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL
265471

10. அன்னையே ஐவர் தேவி என்று அவனி எங்கும் புகழ
நன்னியே அத்தினாபுரம் அமைந்தாய் நாரணி எச்சரிக்கை

11. நாரணி பரி பூரணி என்று நாள்திசை எங்கும் ஓத
பார்தனில் வினை தீர்ப்பாய் பரம்பொருளே எச்சரிக்கை

12. பொருளே திரெளபதியே உனைப் போற்றும் அடியவர்க்கு
அருளே கொடுத்தருள்வாய் ஐவர் தேவி எச்சரிக்கை

13. முன்னே நளாகன்னி என முனிவர் தமை மணந்து
நன்னயமாய் கற்பு நிலை சிறந்தாய் தாயே எச்சரிக்கை

14. பின்னே பெரிய தணலின் மீது பெரிய தவமிருந்தாய்
அன்னையே ஐவர் வரமடைந்த அம்பிகா எச்சரிக்கை

15. அம்பிகா சிவன் அருளால் சுடர் அக்கினி தனில் பிறந்தாய்
நம்பியே ஐவர் தமை மணந்தாய் நாயகி எச்சரிக்கை

16. நாயகி பிற தாயகி பதம் நம்பியவர்க்கு நேயகி
தூயகி துஷ்டர் தமையடக்கும் கந்தரி எச்சரிக்கை

17. எண்ணும்பகை முடித்தாய் இஷ்டமாய் கூந்தல்தனை முடித்தாய்
பண்ணும் செந்தணல் குளிர்ந்தாய் பராசக்தியே எச்சரிக்கை

18. சக்தி திரெளபதியே அன்பர் சாற்றும் தயா நிதியே
முத்தியருள் முகுந்தன் சகோதரியே எச்சரிக்கை

19. நத்தி திரு உடப்பு நகர் ஆலயத்திலுறைந்த
சித்தி புரிந்தழைக்க வந்த செவ்வியே எச்சரிக்கை

20. ஆளவே வந்து உடப்பு நகர் அமர்ந்து கொலு வீற்றிருந்து
வாழவே வரம் கொடுப்பாய் மகேஸ்வரி எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 காளி அம்மன் எச்சரிக்கை

நானா நன்னன் நானா நன்ன
நானே நானா நன்னன் நானா

1. அரி ஓம் ஐங்கரனார் அருளைத் தினம் துதித்து
பரி பூரண வடிவே பத்திரகாளி எச்சரிக்கை

2. ஆதி அபிராமி எனும் அம்மையே தயா பரியே
சோதி பத்திரகாளி திரிசூலி எச்சரிக்கை

3. இந்த நகர செழிக்க வந்த ஏக தயா பரியே
வந்த வினை தீர்க்கும் மகா காளி எச்சரிக்கை

4. ஈசனிடம் வாசமுடன் ஏகி நடனம் புரிந்தாய்
தேச நகர் செழிக்க வந்த தேவி எச்சரிக்கை

5. உம்பர் தொழு பகவதியே உச்சன மா காளி
சம்பந்துறை மீதுறைந்தாய் தாயே எச்சரிக்கை

6. ஊழி வினை அணுகாமலே உன் பதமே துதிக்க
காளி பகவதியே என்றும் காப்பாய் எச்சரிக்கை

7. எங்கும் எழில் நிறைந்த ஏக தயா பரியே
அங்கயற் கண் உமையே அபிராமி எச்சரிக்கை

8. ஏக பரனாரிட முறைறைந்த ஈஸ்வரி கங்காளி
பாக வினை தீர்க்கும் பத்திரகாளி எச்சரிக்கை

9. ஐயும் கிளிலும் என்றாகும் அட்சரம் தனிலுதித்து
வையகத்தோர் போற்றும் மகா காளி எச்சரிக்கை

10. ஒளிர்வான வேப்பிலை சூலமும் உகந்த கையில் வாளும்
தெளிவாய் சிம்மாசனம் உறைந்தாய் தேவி எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஓங்கார உற்பவமே எங்கும் ஒளிவான பொருளே
றீங்காசன முறைந்தாய் ஆதி லெட்சுமி எச்சரிக்கை

12. பார்வதி பரமேஸ்வரி பரலோகங்கள் தொழும் ஈஸ்வரி
சீர்மிகும் புவனேஸ்வரி சிங்கவாகினி எச்சரிக்கை

13. சத்திசிவமானாய் ஈன்ற தாய் தந்தையுமானாய்
மூர்த்தி முதலானாய் பத்திரகாளி தாயே எச்சரிக்கை

14. ஊழியில் வந்து தோன்றினாய் இந்த உடப்பினிலே
- வந்து ஆடினாய்
காளியாய் நாமம் சூடினாய் பத்திரகாளியே எச்சரிக்கை

15. வேப்பிலை கும்பம் மீதிலே பயிர் விளங்க, பூத்துக் காய்க்க
உப்புக்கரைக் கடல்மீதிலே சுடர் உவேந்தே
- விளக்கெரிய எச்சரிக்கை

16. ஆதி உமையவளே எங்கள் ஆதிசிவன் தேவியரே
வேண்டி உனைப்பாட பத்திர காளியே எச்சரிக்கை

17. ஆளவே வந்து உடப்பு நகர் அமர்ந்து கொலுவிருந்தாய்
வாழவே வரம் கொடுத்தாய் மகா காளியே எச்சரிக்கை

18. அந்தரி மகா சுந்தரி அரி அற்புதம் தந்து ஆதரி
முந்திடும் வினைதீர்த்தேறி பத்திர காளியே எச்சரிக்கை

19. அப்பன் நீ எங்கள் அம்மை நீ உயர் அற்புதமான தேவிநீ
இப்பொருள் நீ இந்து முத்து மணியும் நீ பத்திரகாளியே
- எச்சரிக்கை

20. நாரணி வரி பூரணி என்றும் நந்திகை எங்கும் திகழ
பார்வதி வினை தீர்ப்பாய் பத்திரகாளியே எச்சரிக்கை

21. சுடரே சுடரொளியே சுந்தரமே செந்திருவே
கடல் சூழ் புவி மீதுறைந்தாய் கண்ணே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கண்ணே நவ மணியே அரி கமலா சனத்தாளே
விண்ணோர் புகழ் கீர்த்தி பெற்ற விமலி எச்சரிக்கை

23. பத்தினி மகா உத்தமி என்றும் பாரினில் அவதரித்தாள்
எத்திசை எங்கும் கீர்த்தி பெற்ற ஈஸ்வரி எச்சரிக்கை

24. ஈஸ்வரி பரமேஸ்வரி உலகெங்கும் ஒளியானாய்
பார்வதி வினை தீர்ப்பாய் பத்திரகாளியே எச்சரிக்கை

25. கொல்லையாம் பேதி நோயினால் மக்கள் குலைந்தே
- கலைந்தோட
கொத்தக் கிழவனாய் வந்து தடுத்தே வரம் கொடுத்தாய்
- எச்சரிக்கை

26. சோதியே சுடர்ரோளியே சுந்தரமே செந்திருவே
ஆதியே உலகாண்டாய் எங்கள் அன்னையே எச்சரிக்கை

## 2.3 மாரி அம்மன் எச்சரிக்கை

நானா நன்னன் நானா நன்ன
நானே நானா நன்னன் நானா

1. ஆதி உமையவளே எங்கள் ஆண்டி முனை மாரி
வேண்டி உனைப்பாட முத்துமாரி எச்சரிக்கை

2. பார்வதி பரமேஸ்வரி பரலோகங்கள் தொழும் ஈஸ்வரி
சீர்மிகும் புவனேஸ்வரி சிங்கவாகினி எச்சரிக்கை

3. ஆளவே வந்து உடப்பு நகர் அமர்ந்து கொலுவிருந்தாய்
வாழவே வரம் கொடுத்தாய் முத்துமாரியே எச்சரிக்கை

4. மாயி மக மாயி மணி மந்திர சேகரி யாளே
ஆயி உமையவளே முத்துமாரியே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சமயபுரத்தாளே நல்ல சாம்பிராணி வாசகியே
சமயமிதில் வருவாய் முத்து மாரியே எச்சரிக்கை

6. அப்பன் நீ எங்கள் அம்மை நீ உயர் ஐயனுமான தேவிநீ
இப்பொன் நீ முத்து மணியும் நீ முத்துமாரியே எச்சரிக்கை

7. மாதா மகா மாரி இந்த மானினம் எங்கும் ஆனாய்
ஆதாரம் நீதானே எங்கள் மாரியே எச்சரிக்கை

8. அந்தரி மகா சுந்தரி அரி அற்புதம் தந்து ஆதரி
முந்திடும் வினைதீர்த்தேறி முத்துமாரியே எச்சரிக்கை

9. ஆதி அபிராமி எனும் அம்மையே தயா பரியே
சோதி முத்துமாரி திரிசூலி எச்சரிக்கை

10. இந்த நகர் செழிக்க வந்த ஏக தயா பரியே
வந்த வினை தீர்க்கும் மகா மாரி எச்சரிக்கை

11. எங்கும் எழில் நிறைந்த ஏக தயா பரியே
அங்கயற் கண் உமையே அபிராமி எச்சரிக்கை

12. ஏக பரனாரிட முறைறைந்த ஈஸ்வரி கங்காளி
பாக வினை தீர்க்கும் முத்துமாரியே எச்சரிக்கை

13. சத்திசிவமானாய் ஈன்ற தாய் தந்தையுமானாய்
மூர்த்தி முதலானாய் முத்துமாரி தாயே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.4 இராமர் எச்சரிக்கை

நானா நன்னன் நானா நன்ன
நானே நானா நன்னன் நானா

1. ஹரி ஓம் ஹரி நாராயணா ஆழி துயிலன்பே
கரி ஓலமென் றோத வன்னாத் நாத்தனதி நமஸ்தே

2. ஆதி மீதமாகி யன்று அரக்கனுடல் பீறி
வேந்தனை உலகோர்க்காக விதித் தான்பதம் நமஸ்தே

3. இன்பர் தமக் காகமலை ஏந்திக் கூர்ம மாகி
நம்புமடி யார்க்கி ரங்கும் நாதா எச்சரிக்கை

4. ஈரேழுல கெங்கும் நிறை இன்பே ஏனமாகி
பாரோர் கொம்பி லேந்தும் பரந்தாமா எச்சரிக்கை

5. உகர நர சிங்கமென உயிர் கொண்டுடல் பிளந்து
மிக்கும் பிரக லாதற் கருள் வேதா எச்சரிக்கை

6. ஊஞ்சல நவாகக் கரை யோதுங்கடல் மீதே
காஞ்சன் மலர் மாதுதிப் பாதா எச்சரிக்கை

7. எளியோனுன தடியேனாகி என்னாலும் உன் பதமே
விழியால் காண ஒளிவாய் தோன்றும் விமலா எச்சரிக்கை

8. ஏழுமரா மரங்கள் ஒரு வாளிதனிற் றுளைந்தே
ஆளும் கலிக் கிரையோன் பணி ஐயா எச்சரிக்கை

9. ஐவர் தமக்காக வந்தாள் அஸ்தினபுரி தூதாய்
மெய்யாய் விஸ்வ ரூபங்கொண்ட வேதா எச்சரிக்கை

10. ஒன்றாய் உலகெல்லாம் முந்த னுதரந் தன்னிலடக்கி
நின்றாய் நெடு மாலே திரு நிமலா எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஓதுமறை வேதமெல்லாம் உலகோர் நமக்கருளி
வாது புரி மாதுலனை வதைத்தாய் எச்சரிக்கை

12. ஔவை அலங்காரமதை அடக்கி அருள் புரிந்து
செல்வான் தனக்கம்மான் எங்கள் தேவா எச்சரிக்கை

13. அக்காளிங்கன் மீதே நட மாடி விளையாடும்
மைக்கார் மணி வண்ணா திரு மாலே எச்சரிக்கை

14. இராம அவதாரமென இராவணனை வதைத்தாய்
நேமமுடன் சிறை தவிர்ந்த நிமலா எச்சரிக்கை

15. பாரதப் போர் முடிக்கவென பாரில் அவதரித்து
காரணமாய் புவியுரைந்த கண்ணா எச்சரிக்கை

16. பத்து அவதாரமென பாரிலவதரித்து
வெற்றி விளையாடல் செய்த வேதா எச்சரிக்கை

17. சக்தி சிவமானாய் ஈன்ற தாய் தந்தையுமானாய்
முத்தி முதலானாய் மூலதாரா எச்சரிக்கை

18. ஆதி அந்த மானாய் புகழவதனி முலதானாய்
சோதிமய மானாய் பரஞ்சுடரே எச்சரிக்கை

19. வேதனை செய் காலன் எமன் விரட்டி உயிர் களைமூடி
சொதிதிருப் பதவி அருள் துணையே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. அம்மன் ஊஞ்சல்கள்

## 3.1 திரௌபதையம்மன் ஊஞ்சல்

தனை தனை தத்தோம் தானை
தனை தனை தத்தோம் தானை
தானை தனாதனம் தானை தனாதனம்
தானை தத்தோம் தனதானம்

1. சீர் புகழ் ஒளிவே புவிதனில்
சிறந்திடும் ஒளிவே ஐவர்
தேவி திரௌபதா நாயகி மீதில்
சிறந்த தமிழ் ஊஞ்சல் பாட
(தனை தனை)

2. பார் புகழ் ஒளிவே எங்கும்
பரம்பொருள் ஒளியே
பாவயர் நாவலர் யாவரும் போற்றிடும்
பாலகன் பதி துணையே
(தனை தனை)

3. சங்கரனருளால் செந்
தணல் தனிலுதித்தாய் புவி
தாவிய பாரதம் மேவியே முடித்த
சக்தி திரௌபதி துணையே
(தனை தனை)

4. மங்களம் பொங்கும் உனதருள்
எங்குமிலங்கும் திரி
மாதரி சோதரி என்னை ஆதரி
மைந்தன் தமிழ்க்கே அருள்வாய்
(தனை தனை)

5. கற்பக மலராய் திரு ஊஞ்சல்
உற்பவமாக வரும்
கரிந்திடுமடியவர் வருதுயர் தீர்த்திடும்
காரணியே ஆடிரு ஊஞ்சல்
(தனை தனை)

6. கற்பினில் உயர்ந்த ஞானக்
கனியே நன்மணியே புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினி புகழ்ந்திடும் வாசனை புகழ்ந்திடும்
கமலாசனியே ஆடிடு ஊஞ்சல்
(தனை தனை)

7. அருமறை மறவே புகழ்
ஐவரின் உறவே திகழ்
ஆணிப்பொன் மாணிக்கம் ஞானக்கண்ணாய் வந்த
அம்பிகையே ஆடிடு ஊஞ்சல்
(தனை தனை)

8. உருவினில் திருவே திகழ்
உம்பரின் உறவே புகழ்
உடப்பு மகா நகர்தனில் ஓங்கி எழுந்தருளும்
உத்தமியே ஆடிடு ஊஞ்சல்
(தனை தனை)

9. அஞ்சாமல் பெண் பிறந்து
அஸ்தினா புரியை
அரசது செய்து
ஐவரை மணம் முடித்தாள்
(தனை தனை)

10. மஞ்சள் நிற பட்டுடுத்தி
மன்னர் ஐவரை மணந்து
வந்தமர்ந்தாள் ஊஞ்சலிலே
(தனை தனை)

11. திருவள ஒலிவே எங்கும்
சிறந்திடும் மொழியே புகழ்
தேவர்கள் போற்றிடும் தேவி
திரௌபதா ஆடினாள் ஊஞ்சல் ஆடிடவே
(தனை தனை)

12. தார் மேடு பாண்டவர் ஐவரை மணந்தாள்
தாரணிய கற்பு நிலை சோதியாய் உலகமது
கற்பு நிலை தோன்றும் தூய
முனியாகி ஆடினாள் ஊஞ்சல்
(தனை தனை)

13. சீரருந்த முத்தினால் கால்கள் நாட்டி
சிறுப்பவள கொங்கையினால் வளையல் பூட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியாம் பரமசிவமருள் புரிந்ததனால்
அம்பிகை பராசக்தி ஆடிடும் ஊஞ்சல்
(தனை தனை)

14. முன்னை நளாயினாள் தம்மையென பிறந்தாயே
முனிய மௌக்கல்யனா தம்மை மணந்தாள்
பின்னேயே ஐந்து வரம் அடைந்த
திரௌபதேயே ஆடினாள் ஊஞ்சல்
(தனை தனை)

## 3.2 முத்துமாரி அம்மன் ஊஞ்சல்

தனை தனை தத்தோம் தானை
தனை தனை தத்தோம் தானை
தானை தனாதனம் தானை தனாதனம்
தானை தத்தோம் தனதானம்

1. திருவளர் ஒளிர்வே உலகெங்கும்
சிறந்த நல்லொளிவே புகழ்
தேவர்கள் போற்றிடும் தேவி காமாட்சி மேல்
சிறந்த தமிழ் ஊஞ்சல் பாட
(தனை தனை)

2. அருள் தரும் பொருளே - பரம்பொருள்
ஆனந்தப் பொருளே நமசிவ
ஆதியோம் குருவென அவனியிலெழுந்தோங்கும்
ஐங்கரனின் பாதம் துணையே
(தனை தனை)

3. ஆதி நல் பகவன் புவியீன்ற
அம்மை காமாட்சி புகழ்
அருந் தமிழ்க் கிரங்கி என் அடியேன் நாவில்
அருள் புரிவாய் அம்பிகையே
(தனை தனை)

4. சோதியும் நீயே சிவசக்தி
சொருபமும் நீயே உலகெங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமுமாய்ப் புகழ்ந்தேற்றவர்க்கே யருள்
துய்யமுது மாரி நீயே
(தனை தனை)

5. அரகதப் பொருளே உனதருள்
அன்பர்க்கருளே ஆதி
அரனிடம் வரம் வேண்டி பரமனை அடக்கிடும்
அம்மை முத்தே ஆடிரூஞ்சல்
(தனை தனை)

6. பராபரப் பொருளே பராசக்தி
பக்தற்கு அருளே
பரந்தாமன் தங்கையாய் பார்தனில் தோன்றிடும்
பச்சை நிற மெய்ப்பொருளே
(தனை தனை)

7. துஷ்டரை அடக்கும் வீர
சூர சம்ஹாரி என
துன்பநோய் தீர்ந்து நற்சுகம் நாயகி நீயே
சிவ சுந்தரி ஆடி ஊஞ்சல்
(தனை தனை)

8. இஷ்டமாய் உலகில்
எங்கு மாரி உறைந்து
ஈரேழு பதினாறு யோகமும் சிறந்து
எழுந்தருளும் மாரிமுத்தே
(தனை தனை)

9. இல்லற மாய்கை கொண்டு
ஏங்குகிறேன் பாவி முன்னம்
இக் கணம் வந்தெம்மை பட்சம் வைத்தருள்வாய்
ஈஸ்வரியே ஆடி ரூஞ்சல்
(தனை தனை)

10. நல்லறமான சுகதிரு
நலமான வாழ்வை உந்தன்
நயனுக்கிறங்கியே நல்வரம் கொடுத்தருள்
நாரணியே ஆடிரூஞ்சல்
(தனை தனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தேவரும் துதிக்க உன்னாமம்
மூவரும் மதிக்க உயர்
சிறக்க மெய்ஞ் ஞானங்கள் புகழ்ந்துற வாழ்ந்திடும்
செல்வ முத்து மாரி நீயே
(தனை தனை)

12. நாவலர் படிக்க சிவதுதி
நண்பர்கள் நடிக்க புகழ்
நலம் வளர் ஆண்டிமுனை நற்சன்னிதியில்
நாயகியே ஆடி ஊஞ்சல்
(தனை தனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. அம்மன் கும்மிகள்

## 4.1 முத்துமாரியம்மன் கும்மி

தந்தணித் தானை தன் நெய் தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம்

1. சீர் பெற்றிலங்கும் உடப்பு நகர்
ஆண்டிமுனை தன்னில் வந்தமர்ந்த
பேர் பெற்ற உத்தமி முத்துமாரி அம்மன்
பூரணி மேற் கும்மி பாடுதற்கு
(தந்தணித் தானை)

2. பார் புகழ் சங்கரன் தேவி அரும் தவப்
பாலகனாகிய என் குருவாம்
தாரணியோர் புகழ்ந்தேத்தும் அழகிய
தந்தி முகத்தவன் காப்பாமே
(தந்தணித் தானை)

3. அச்சுதன் தங்கையாள் ஆயன் சகோதரி
அம்பிகையே கும்மி பாடுதற்கு
பச்சைத் தளிர்மேனை வள்ளி தெய்வயானை
பாகனின் கைவேல் துணையாமே
(தந்தணித் தானை)

4. சிங்கத்தில் ஏறிய பூரணியே எந்தன்
செந்தமிழ்க்கே யருள் காரணியே
எங்கும் பிரக்யாதி பெற்றவளே தாயே
ஏழுலகம் கட்டி ஆண்டவளே
(தந்தணித் தானை)

5. ஐந்தெழுத்து உற்பனமானவளே மாரி
ஐம்பத்தோ ரட்சரத்துட் பொருளே
அந்தரி சுந்தரி ஆதி பராபரி
ஆயிரம் கண்ணி திரிசூலி
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. எட்டெழுத்து அட்சரத்துள்ளொளியே புவி
ஏக பராசக்தி அம்பிகையே
திட்டமுடன் கோண சக்தியரே
தேவி என் தாயே மகமாயி
(தந்தணித் தானை)

7. நாற்பத்து முக்கோண நாயகியே -வாலை
நவசக்தி பேச்சி மனோன்மணியே
நாற் பிரப்பங்கோல் பிடித்தவளே -அம்மா
நவகோடி சக்தி உமையவளே
(தந்தணித் தானை)

8. தீராத நோய் பிணி தீர்ப்பவளே மாரி
தீங்கொன்றும் வராமல் காப்பவளே
காரணி ஆதி அபிராமி கௌமாரி
காமாட்சி கறுப்பாயி
(தந்தணித் தானை)

9. கும்பத்தழகி கொலுவழகி தாயே
கொம்பானையே எங்கள் மாரிமுத்தே
அம்புவிக்கெல்லாம் அருமருந்தே அம்மா
அன்னை மீனாட்சி சிவகாமி
(தந்தணித் தானை)

10. குஞ்சரத்தானை மடியிருத்தி சக்தி
கொஞ்சும் குமரனை முத்தமிட்டு
நம்பும் உடப்போரைக் காக்க வந்த
அம்மனை எந்நாளும் போற்றுவோமே
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 திரௌபதியம்மன் மான்மியக் கும்மி

தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்

1 சீரார் உடப்பு நகரில் அமர்ந்திடும்
செல்வி பாஞ்சாலி மேல் கும்மி சொல்ல
பாரோர் புகழ்ந்திடும் தொந்தி விநாயகன்
பங்கயம் சீர்பாதம் தாள் துணையே
(தந்தணித் தானை)

2 அட்டாச் சரமும் நீ அடைந்தாய் - பாரில்
அம்பத்தோர் அட்சரம் தான் அடைந்தாய்
எட்டாய் இரண்டாய் வட்டமதாய் -தாயே
ஈரேழு உலகமும் தான் அடைந்தாய்
(தந்தணித் தானை)

3 மாதவனை திரு மது மணாளனை
மன்னவர் ஐவரைக் காத்தவளை
பூதல முற்றும் அளந்தவளை
பொற்பதமென்றும் மறவேனே
(தந்தணித் தானை)

4 கும்பமிலங்க குடமிலங்க
கும்பத்தின் மாவிலை தானிலங்க
சம்பந்தமாக திரௌபதா நாயகி
தாயார் வருவதைப் பாருங்களே
(தந்தணித் தானை)

5 மத்தள தாள முழங்கிட கத்தி
மாதவர் நின்று குரவையிட
நித்தம் அடியவர் கூடிடவே அம்மன்
நின் வீதி வாரதைப் பாருங்களேன்
(தந்தணித் தானை)

6 தம்பட்ட மேள முரசடிக்க அம்மன்
தாளினைப் போற்றிப் பதம் படிக்க
உம்பர் புகழ்ந்திடும் பஞ்சவர் நாயகி
ஒளிர்வாய் வருவதைப் பாருங்களேன்
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 மஞ்சள் நிறைகுடம் தேங்காயும் கொண்டு
மலரடி அர்ச்சனை செய்பவர்க்கு
தஞ்சமென்ற பேரைத் தற்காக்கும் நாயகி
தாயார் வருவதைப் பாருங்களே
(தந்தணித் தானை)

8 சாம்பிராணி வாசம் பரிமளிக்கக் கண்டு
தரணியோர்கள் மனம் களிக்க
பாம்புக் கொடியோன் துரியோன் முதலிய
பாவியைக் கொன்றாளைப் பாருங்களே
(தந்தணித் தானை)

9. வெத்திலை பாக்கு பழந் தேங்காய் கொண்டு
வேண்டிய அர்ச்சனை செய்வார்க்கு
புத்திர பாக்கியம் செல்வப் பெருமையும்
பூதல வாழ்வையும் தான் கொடுப்பாள்
(தந்தணித் தானை)

10. வீதிகளெங்கும் எழுந்தருளி அன்பர்
வேண்டும் வரங்களைத் தான் கொடுத்து
ஆதி மூலம் தங்கை தேவி திரௌபதி
ஆலயம் வாரதைப் பாருங்களே
(தந்தணித் தானை)

11. சர்ப்ப சயனத்தில் நித்திரை செய்வதும்
சதுர் முகன் உந்தியில் தோன்றுவதும்
அற்புதமான காண் காட்சிதனை
அன்புடன் சற்றே பாருங்களே
(தந்தணித் தானை)

12. கோபுரமிங்கே இலங்குது பார்
கோபாலர் ரூபம் இலங்குது பார்
சீர் பெரும் கிருஷ்ணன் வடிவின் பெருமையை
செப்பமுடியுமோ மாதர்களே
(தந்தணித் தானை)

13. மல்லிகை முல்லை யலரி முதலிய
வாசனை தாங்கியே பூமலர்கள்
சில்லென பூத்து விளங்குது பார்
தெப்பக்குளமும் இலங்குது பார்
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. கோபாலர் பொங்கலைத் தான் கொடுக்க இந்திரன்
மேவிய கல் மழை தான் தடுக்க
கோவர்த்தன மென்னும் குன்றெடுத்த கிருஷ்ணன்
கோலத்தைக் கண்டு வணங்குங்கடி
(தந்தணித் தானை)

15. முப்பழம் பால் நெய் பன்னீருடனே நல்ல
முற்றும் விளங்கு மிள நீரால்
அற்புதமான திரு மஞ்சனத் தீர்த்தம்
அள்ளி அருந்துவீர் மாதர்களே
(தந்தணித் தானை)

16 தேசுயர் கோபுர வாயில் வழியாக
சென்று நாம் சந்நிதி தான் அடைந்து
பாச மகற்றிடும் சுவாமி தரிசனம்
பண்ணுவோம் வாருங்கள் பெண்மணிகாள்
(தந்தணித் தானை)

17. முக் கண்ணில் வேர்வையிட் உதித்துக் கொடும்
மூர்க்கனாந் தக்கன் சிறந்துனித்து
உக்கிர வீர பத்திர சுவாமி இருக்கின்ற
உல்லாசம் பாருங்கள் மாதர்களே
(தந்தணித் தானை)

18. அன்புடனே தொழும் தொண்டர்கள் குற்ற
மநேகந் துயர்களைத் தீர்த்தருளும்
பண்புடைய வீரபத்திர சுவாமிக்கு
பால் பழம் வைத்து வணங்குங்கடி
(தந்தணித் தானை)

19. சர்ப்பக் கொடியும் விளங்கிடவே கண்ட
விற்பன்னர் கண்டு புகழ்ந்திடவே
அற்புதமான கொடித் தம்பத்தை கண்டு
அன்புடன் வாழ்த்தி புகழுங்கடி
(தந்தணித் தானை)

20. காராருங் சுழல் கண்ணிய மேயவர்
காரிபர் புத்திர ராயுதித்து
நாராயணருக்கு வாகனமாங் கரு
டாழ் வாரைத் தோத்திரம் பண்ணுங்கடி
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

21. பாம்பு விஷங்கள் வெலி விஷங்கள் கடற்
பட்டிடும் பொல்லாத மீன் விஷங்கள்
சோம்பல் இல்லா கருடாழ்வாரை மனதில்
சிந்திக்கில் மாறிடும் தோகையரே
(தந்தணித் தானை)

22. சுந்தரமான உடப்பு நகரோர்
துதித்து வணங்க எழுந்தருளும்
விந்தை பெருகும் கோவிந்தன் மகிமை
விளம்ப முடியுமோ மாதர்களே
(தந்தணித் தானை)

23. காரண னேகரு கணாகர னேகம
லாசனி போற்றிய வாசவனே
நாராயணனே யரி வாசு தேவாவென்று
நாமந் துதிக்கிறார் பாருங்கடி
(தந்தணித் தானை)

24. சீரணியு மணிமுத்து இரத்தின மாலை
சேர்ந்த பதக்க மிலங்கிடவே
தாரணி யோர்கள் வணங்குந் திரௌபதி
தாயாரை தோத்திரம் செய்வீரே
(தந்தணித் தானை)

25 உத்தம மானயிவ் வாலயத்தில் திரு
லெட்சுமி தேவி விளங்கி நின்று
நித்திடும் உத்தமர்க் கந்தனை செல்வமும்
நட்புடன் வாழ்வையும் தான் கொடுப்பார்
(தந்தணித் தானை)

26. தாயே திரௌபதி யம்மணியே யைவர்
தம்மை மணந்திடும் பெண் மணியே
மாயன் சகோதரி வச்சனையே கொடு
மாபாவந் தீர்ப்பாய் மகேஸ்வரியே
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 திரௌபதியம்மன் பூர்வீகக் கும்மி

தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்

*1.* மாதவசோதரி யாயுறைந்து ஐவர்
மங்கை திரௌபதா பாதமலர்
நீதமுடனே நமஸ்கரித்து நாமம்
நித்தமும் போற்றித் துதிப்போமே
(தந்தணித் தானை)

*2.* ஆதிசிவனின் திருவருளால் -சுடர்
அக்கினி தன்னில் வந்துதித்து
சோதி எனும் ஐவர் தம்மை மணந்த நற்
திரௌபதா என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

*3.* பத்தாவுக்கேற்ற பதி விரதைஎனப்
பாரினில் எங்கும் புகழ் விளங்க
கர்த்தரருளினால் தானுதித்த -நளா
கன்னி என வந்த பூமணியே
(தந்தணித் தானை)

*4.* பைரவ மணிந்தோன் அருளினால்
பாரில் நளராசன் செய்தவத்தில்
தையல் நளராச புத்திரியாய் வந்த
சக்தி நளகன்னி உத்தமியே
(தந்தணித் தானை)

*5.* உன்னதமாய் வந்த மௌத்கல்லியர் தம்மையே
உற்ற திருமணம் தான் புரிந்து
நன்னயமாய் செய்த கற்பின் பெருமையை
நவிலமுடியுமோ நாவாலே
(தந்தணித் தானை)

*6.* பின்னே தனவிற் தவமிருந்தாய் தம்மை
பிரியாத நாயகன் வரம் வேண்டி
அன்னையே ஐந்து வரமடைந்த சக்தி
அம்பிகா என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அக்கினி தன்னில் உதித்தெழுந்தாய்-புவி
ஐவர் தமையே மணம் புரிந்தாய்
திக்கிலுள்ளோர்கள் புகழ்ந்தேற்ற வந்த
தெய்வமே என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

8. எண்ணும் பகை தனை தான் முடித்தாய் -புகழ்
இஸ்டமாய் கூந்தல் தனை முடித்தாய்
மண்ணும் தணல் தனில் தான் குளித்தாய் -பரா
சக்தியே என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

9. துஷ்டர்கள் தம்மை அடக்க வந்தாய் -பாரில்
துன்பநோய் தீர்த்திட வந்தமர்ந்தாய்
இஷ்டமாய் உடப்பூரில் வாழும் தரு ஓங்கும்
ஈஸ்வரி என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

10. தாயே திரௌபதி அம்மணியே -ஐவர்
தம்மை மணந்திடும் பெண்மணியே
மாயன் சகோதரி வஞ்சனையே கொடு
மாபாவம் தீர்ப்பாய் மகேஸ்வரியே
(தந்தணித் தானை)

11. கோவில் வலமாக வாருங்கடி - யந்தக்
கோபுரத்தைக் கண்ணால் பாருங்கடி
கோவில்கள் வஸ்திரம் மாதவங் வாங்கியே
கோலத்தைப் பாருங்கள் பெண்ணினங்காள்
(தந்தணித் தானை )

12. கற்பக் கொடியுறம் விளங்கிடவே கண்ட
விற்பன்னர் கண்டு புகழ்ந்திடவே
அற்புதமான கொடிஸ்தம்பத்தைக் கண்டு
அன்புடன் வாழ்த்திப் புகழுங்களே
(தந்தணித் தானை)

13. கோபுர மிங்கு விளங்குதுபார் - இந்த
கோபாலன் தங்கையின் கோலத்தைப்பார்
கோதையின் வஸ்த்திரப் மாதவன் தந்திட்ட
கோலத்தைப் பாருங்கள் பெண்ணிளங்காள்
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## 4.4 ஸ்ரீ திரௌபதையம்மன் மாலையிடும் கும்மி

தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய் தானம்

1. சீர் மேவும் ஐங்கரன் பாதம் பணிந்துமே
செல்வி திரௌபதி மீதில்
பார் மீதில் பஞ்சவர் மாலையிடும் கதை
பாடுவன் வேயவர் துணையாக
(தந்தணித் தானை)

2. போர்மேவும் மாயவள் இந்த நல்ல
பேருலகெங்கும் புகழ்ந்திடவே
பார் மேவு வாலை சரஸ்வதியே நாவில்
பாங்குடன் வந்து அருள் புரிவாய்
(தந்தணித் தானை)

3. எங்கும் புகழ்ந்திடும் திரௌபதி அம்மனின்
இசைந்த கும்மி புகழ்ந்திடவே
அங்கையற் கண்ணி திரிசூலி சிவ
அஷ்டலெட்சுமி துணையாமே
(தந்தணித் தானை)

4. மங்கை திரௌபதி தன்மை அருச்சுணன்
வந்துமே மாலை இடும் கதை
செங்கமால் மாயன் துணையாக நானும்
செப்புவேன் தேவர் அருளாலே
(தந்தணித் தானை)

5. பார்ப்பாள வடிவாய் அருச்சுணன் வந்து
பாங்குடன் வில்லை மிக வளைத்து
தீர்ப்பாக குனிந்து பாய்ச்சலடித்துமே
திட்டமுடன் மச்சம் தானறுத்தான்
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பார்ப்பாருக்கு பெண்ணைத்தான் கொடுத்தாள் இந்த
பாருலகத்தார் நகைப்பார் என்று
தீர்ப்பாகக் கூடிப் பிறந்திட்ட மாலையை
செல்வி திரௌபதி கைக்கொடுத்தார்
(தந்தணித் தானை)

7. தந்தை கொடுத்திடும் மாலையை வாங்கியே
சக்தி திரௌபதியேது சொல்வாள்
எந்தனுக்கிசைந்த குந்தி தன் மைந்தனை
ஏகியே பார்த்து விழுந்திட என்றான்
(தந்தணித் தானை)

8. சிந்தை மகிழ்ந்துமே வீசிடு மாலையும்
சீக்கிரமாய் சபை தான் பார்த்து
வந்து வில் வளைந்த பார்ப்போன் கழுத்தினில்
மாலையும் வந்து விழுந்ததுவே
(தந்தணித் தானை)

9. சத்திய பாமையும் ருக்மணிதேவி
சமேதராயிங்கு அமர்ந்திருந்து
நித்தந்து திக்கு மடியார் துயர்களை
நீக்கிப் பரகதி தான் கொடுத்தாரே
(தந்தணித் தானை)

10. பாஞ்சாலரசன் தவத்திலுதித்திடும்
பத்தினியின் புகழ் செப்புதற்கு
பூஞ்சாலி வாழஸ்தினா புரத்தில் ஐவர்
பூவையே சொற்குற்றம் தீர்த்தருள்வாய்
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 காளியம்மன் கும்மி

தந்தணித் தானை தன் நெய் தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்
தந்தணித் தானை தன் நெய்தானம் தானை
தந்தணித் தானை தன் நெய்தானம்

1. கங்காதரனுடன் மங்கையும் முன்னாளில்
கானகம் தனில் கருவுருவாய்
சங்கோதம் போற்றிடும் ஐங்கரன் பொற்பாதம்
சார்ந்து கும்மி அடிப்போமே
(தந்தணித் தானை)

2. மங்களம் பொங்கும் உடப்பு நகர் தனில்
வாகாய் உறைந்து எழுந்தருளி
சங்காரம் பொற்றோங்கும் மாகாளி
தாயார் மேல் சாந்த கும்மி உரைப்போமே
(தந்தணித் தானை)

3. வேலைக் கருகினில் ஆலயத்தில்
மேவும் பரமேஸ்வரியாய் உறைந்து
ஞாலத்தில் உள்ளோர் தமை காக்க வந்த
நாயகி என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

4. கும்பம் இலங்க குடம்மிலங்க அம்மன்
கும்பத்தில் வேப்பிலை தானிலங்க
நம்பும் அடியார் தமை காக்க வந்த
நாயகி என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

5. தருகா சூரனைச் சஞ்சலித்தாய் அன்று
சஞ்சலந் தீர்த்திட வந்தமர்ந்தாய்
பாருலகுள்ளோர் தமைக்காக்க வந்த
பத்திரகாளி பாதந்துணையே
(தந்தணித் தானை)

6. எங்கும் புகழ்ந்திடும் ஈஸ்வரியே கும்பத்தை
ஏற்றியே யாவேரும் போற்றிசையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கை பொருந்திடும் தாயார் மகிமையை
சாற்றியே போற்றி கொண்டாடுவோமே
(தந்தணித் தானை)

7. ஆதிபகவனால் வந்துதித்தாய் தில்லை
அம்பலத்தில் நடனம் புரிந்தாய்
சோதி பரமன் வரமடைந்தாய் அன்பர்
துன்ப நோய் தீர்த்திட வந்தமர்ந்தாய்
(தந்தணித் தானை)

8. நீதியாய் எங்கும் புகழடைந்தாய் புவியில்
நினைத்த வரங்களும் தானடைந்தாய்
பாதி மதியை அணிந்தோன் அருளினாய்
பத்திரகாளி நாமம் தான் புனைந்தாய்
(தந்தணித் தானை)

9. அட்டாட்சரம் மிக அடைந்தாய்-புகழ்
ஐம்பத்தோர் அட்சரம் தானடைந்தாய்
எட்ட இரண்டாக வட்டமைந்தாய் - புவி
ஈரேழு யோகமும் தானமைந்தாய்
(தந்தணித் தானை)

10. துஷ்டர்களின் தமை அடக்க வந்தாய் - பாரில்
துன்ப நோய் தீர்த்திட வந்தமர்ந்தாய்
இஸ்டமாய் உடப்பூரில் எழுந்தருளி - ஓங்கும்
ஈஸ்வரி என்றைக்கும் காப்பாமே
(தந்தணித் தானை)

11. ஆதியிலே அந்த நாளையிலே -முன்னோர்
அன்பர் கொண்டாடும் வேள்வியிலே
சோதி என வந்த காளி புதுமையை
சொல்ல முடியுமோ நாவாலே
(தந்தணித் தானை)

12. கங்கைக் கடல் நீரால் விளக்கேற்றி - முன்னோர்
காளியின் உண்மையை தோத்தரிக்க
பங்கமில்லாத விளக்கெரிய அருள்
பார்வை புரிந்த பரஞ்சுடரே
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கும்பத்து வேப்பிலை பூத்ததம்மா
குழந்தைகள் அறியவே காய்த்ததம்மா
பாலர் அறியவே பழம் உதிர்ந்திட
பார்வை புரிந்த பராசக்தியே
(தந்தணித் தானை)

14. காரணமால் வளர் கும்பத்தின் வேப்பிலை
காசி நீயோர் அதிசயிக்க
பூரணமாய் பூத்து காய்க்க அருள் செய்த
பூமணியே சிவ மாமணியே!
(தந்தணித் தானை)

15. முன்னோர் காலத்தின் மூன்றாம் நாள்
கழிச்சலில் மூழ்கித்து மாந்தர்கள் மோசம்முற
அதற்கு மருந்தாக காளி வரமேதான்
ஸ்ரீகாத்தருள வந்த நாயகியே!
(தந்தணித் தானை)

16. வாலைக் கடியன் இம்பிசை பூச்சினால்
வந்த வருந்தத் தனை நிறுத்தி
நாளது தோறும் காக்கின்ற காளியை - நாடி
கும்மி அடியுங்களே, பாடி கும்மி அடியுங்களே
(தந்தணித் தானை)

17. மட்முட னேஉடப்பூரில் யாவர்க்கும்
பத்திர காளி மன மிரங்கி
இட்டமுடன் திரு வாய் மொழிந் தவாக்கு
என்றைக்கும் காப்பேன் எனக் கொடுத்தாள்!
(தந்தணித் தானை)

18. முன்னம் கொடுத்த திருவாக்கால் -வந்து
மூழ்கியே பேதி நோய் வாராமல் -நித்தம்
தவறாமல் காக்கின்றாய் எங்கள்
ஈஸ்வரி என்றைக்கும் காப்பாளே!
(தந்தணித் தானை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.6 கலியடி கம்பு கும்மிப்பாடல்

தாயே தயவு பாரம்மா காளிகா தேவி
தயவு வைத்து எம்மை ஆளம்மா
தாயே தயவுபாரா தஞ்சமே உன் பாதம்
நெஞ்சில் நிறைந்தவர்க்கு நீ அருள் செய்ய வேண்டும்
(தாயே)

வெண்ணீறு பூசிய வேப்பிலை கைகொண்டு
வீதியில் வந்தவளே -என்னம்மா
கண்ணூறு பாராமல் காக்கும் காளிகா தேவி
காரண செளந்தரியே-என்னம்மா
பொன்னிறம் போற்றும் எங்கும் நிறைந்திருக்கும்
பொருந்தும் மானிடர் அரி துயரம்
தன்னலம் கொண்டு உடப்பன் கரையில் வந்து
சந்தோசமாகவே அமர்ந்து கொலுவிருந்தாய்
(தாயே)

காரணம் விளங்கவே கலியுகம் தன்னிலே
கண்கண்ட தெய்வமம்மா -உன்னைப்போல்
வேறான வேறொரு தெய்வம் சிலகாலத்தில்
காணவும் போகிறமோ
நேராக மானிடர் தம்மையும் இரட்சித்து
நேசம் பிரியங்கொண்டு தாரணி ஆளவந்த
(தாயே)

*****

அடடா வெளியே புறப்படடா இல்லை ஆனாற்
சீதையை விட்டு விடடா-தொடரும் வீண்
பழி தேடிக் கொண்டாயே முன்னால்
தூதன் வருவதைக் கண்டாயோ
ஜெய வீராய்வந்த ரகவீரர் விடவந்த
தூதன் தூதன் தூதன் வேட்க முண்டானால்
(அடடா)

நினைவு வராமல் நித்தியே நீயார் என்றென்னைப் பற்றியே
ஒற்றைத் தனது வழிகோட்டிச் சுற்றிலே -இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணி எல்லாம் தாவி வெற்றியே கொண்ட
சினவாளி வாலி புத்திரன் நானடா -உனக்கோடு
சேதி சொல்ல வந்தேன் கேளடா
ஸ்ரீராமர் தேவியைத் திருடாகக் கொண்டு வந்த
திருடா திருடா திருடா வெட்க முண்டானால்

(அடடா)

அரசுமுன் கொழுத் திருச் சட்டமும் -நாளை
அழியப் போகுதே உந்தன் திட்டமும்
தருவேன் என்றால் உனக்கு இஷ்டமும் -நாளை
தரச் சொல்வாயோ சிங்கப் பட்டமும்
துரச்சுக்கிரனோடு கிட்டியே இராமர்
சூழ்ந்து வடக்கு வாசல் கிட்டியே
வில்லை வளைப்பேன் என்றும் தலையைத்
துணிப்பேன் என்றும் சொன்னார் சொன்னார்
சொன்னார் சபதமுண்டானால்

(அடடா)

அடிக்கத் தடிக்க உயிர் போக்கவும்
தங்கை சூர்ப்பனகை மூழியாக்கவும்
படை எடுத்த கருமமதைத் தாக்கவும் -தம்பி
இளையவர் அவருயிர் காக்கவும்
தடுக்கவே வழி தப்பி போனாலும் -அவர்
சமுத்திரம் வழிவிட்டுப் போனாலும்
தளத்தோடு வாராமல் ஒழித்தாயோடா
சண்டி சண்டி சண்டி வெட்கமுண்டானால்

(அடடா)

*****

பெருச்சாளி வாகனத்தில் பவனி எழுந்து வாற
பெருமையைப் பாரும் பாருமே -பூலோகில் உள்ளோர்
பெருமையாய்ப் பாரும் பாருமே -உரிச்சா
நெடுங்குளத்தில் ஓங்காரமாய் அமைந்த
உமையாள் பாதத்தை நாடி இமையோர்
பாதத்தைத் தேடி

(பெருச்சாளி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மதிப்பும் இரு புயமாம் ஒரு மூன்றும் தோத்திரமாம்
திருப்பொலிவும் திருக்கரமாம் தேவர் புஷ்ப மலர் சொரிய
என்றும் துதிக்க என்றும் துதிக்க - ஓ...
கிட கிட தகுவென கஜமுக முரசுற
கட கட வென கணபதி அடி தொழ
இராக இராகவா இரகுவென ஏழிசை பாட - அர்த்த
ராத்திரியில் ஏழிசை பாட
தாக்குத்தா தாக்குத்தா தாக்குத் தகுவென
தெய்யத் தெய்யதா தெய்ய தெய்யவென
(பெருச்சாளி)

உன்னைத் தவிர - அம்மா
உடப்பினிலே ஏது இன்பம்
இருக்கும் வரை தொடர்ந்திடுவேன் - உன்
பல விழியினிலே எங்கும்
இடறுகளைத் தடுத்திடுமே தாயே
ஏழு பிறப்பினிலும் உனதன்பு
யாருமில்லா பிள்ளைகட்கும் - நீ
நலங்காக்கும் எங்கள் மாரி
வரும் வினை தொடரமுன்பே - நீ
வந்தவருக்கு அருள் கொடுப்பாய்
விண்ணிலும் மண்ணிலும் நடமாடும்
அன்னையே என்றும் துணை வருவாய்
*****

தெந்தந்தினா தினதெந்தினா தின்னா தெந்தி நானா
நாதேந்தின நாதேந்தின நாதேந்தின நானா
(தெந்தந்தினா)
தங்கத்தினால் சதங்கை கட்டி தரையில் விட்ட சாவல்
தரையில் விட்ட சாவல் தன்னை திருடிச் சென்றவர் யாரோ
(தெந்தந்தினா)
வெள்ளியினால் சதங்கை கட்டி வெளியில் விட்ட சாவல்
வெளியில் விட்ட சாவல் தன்னை விரட்டிச் சென்றவர் யாரோ
(தெந்தந்தினா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துவினால் சதங்கை கட்டி முன்னே விட்ட சாவல்
முன்னே விட்ட சாவல் தன்னை மூடி மறைத்தவர் யாரோ
(தெந்தந்தினா)

பவளத்தினால் சதங்கை கட்டி பறக்க விட்ட சாவல்
பறக்க விட்ட சாவல் தன்னை பார்த்துச் சென்றவர் யாரோ
(தெந்தந்தினா)

மூணுநாளா குறுநா போட்டு நான் வளர்த்த சாவல்
நான் வளர்த்த சாவல் தன்னை நஷ்டமிட்டவர் யாரோ
(தெந்தந்தினா)

நாளுநாளா குருநா போட்டு நான் வளர்த்த சாவல்
நான் வளர்த்த சாவல் தன்னை நாக்கறுத்தவர் யாரோ
(தெந்தந்தினா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 சித்திரை செவ்வாய் விழாவில் கும்மி

1. முந்தி முந்தி விநாயகரே
முக்கண்ணர் தன் மகனே
கந்தருக்கு முன்பிறந்த
கற்பகமே முன்னடவாய்
வேலவர்க்கு முன் பிறந்த
விநாயகரே முன் நடவாய்
செல்வக் கணபதியுன்
சீர் பாதம் நான் மறவேன்
மாரியம்மன் தன் கதையை
மனமுகர்ந்து நான்பாட
நெஞ்சில் குடியிருந்து
நீ எமக்கு அருள்புரிவாய்

2. செவ்வாயில் எருளடுத்து
சிவந்த சித்திரக் கோலமிட்டு
கோலமிட்டு குரவையிட்டு
குங்குமத்தால் நீராடி
நீராடித் துகிலுடுத்து
நீல வர்ணப் பொட்டுமிட்டு
பொட்டுடனே பூமணங்கள்
பூமணங்கள் பளபளக்க
பாய்ந்து அடிங்கடி சித்திரப் பெண்காள்

3. சித்திரை மாதத்திலே
சிவந்த செவ்வாய்க் கிழமையிலே
பங்குனி மாதத்திலே
பாரச் செவ்வாய்க் கிழமையிலே
வெள்ள விளாம்பழமாம்
காயோடயும் பூவொடயும்
முட்ட முருங்கக்காய்
முகிழ் அழியாக் கத்தரிக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காய் ரெண்டு துண்டு
கருவாடு மூணு துண்டு

*****

1. சிந்தாமல் சிதறாமல்
வளர்த்தேனம்மா முளைய
தீர்த்தம் ஆற்றம் கரைதனிலே
போராயம்மா முளைய
வாடாமல் வதங்காமல்
வளர்தேனம்மா முளைய
வைகையாற்றங் கரைதனிலே
போராயம்மா முளைய

2. தங்கத்தினால் சலங்க கட்டி
தரயில் விட்ட சாவல் -நான்
தரயில் விட்ட சாவல்
தரயில் விட்ட சாவல் தன்ன
சாச்சுக் கொண்டது ஆரோ

3. பொன்னினால சலங்க கட்டி
போகவிட்ட சாவல்-நான்
போகவிட்ட சாவல்
போகவிட்ட சாவல் தன்ன
புடிச்சடச்சது யாரோ.

4. வெள்ளியினால் சலங்க கட்டி
வீதியில் விட்ட சாவல் -நான்
வீதியில் விட்ட சாவல்
வீதியில் விட்ட சாவல் தன்ன
வெரசா அழைச்சது யாரோ.

5. பவள மணி சலங்கை கட்டி
பார்த்துவிட்ட சாவல் -நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துவிட்ட சாவல்
பார்த்துவிட்ட சாவல் தன்ன
பதுக்கிக் கொண்டது யாரோ .

6. முத்துமணி சலங்க கட்டி
முன்னே விட்ட சாவல் -நான்
முன்னே விட்ட சாவல்
முன்னே விட்ட சாவல் தன்ன
மூடிக்கொண்டது யாரோ.

*****

1. ஓரா நாள் முளை எழுந்து
ஓங்கி வளருமாம் மாரிமுளை
2. ஈராம் நாள் முளை வளர்ந்து
இரட்டனம் கொட்டுமாம் மாரிமுளை
3. மூன்றாம் நாள் முளை வளர்ந்து
முத்தம் கொடுக்குமாம் மாரிமுளை
4. நாலாம் நாள் முளை வளர்ந்து
நையாண்டி கொட்டுமாம் மாரிமுளை
5. ஐந்தாம் நாள் முளை வளர்ந்து
கொஞ்சி விளையாடுமாம் மாரிமுளை
6. ஆறாம் நாள் முளை எழுந்து
அணைத்து எழுப்புமாம் மாரிமுளை
7. ஏழாம் நாள் முளை வளர்ந்து
ஏளனம் செய்யுமாம் மாரிமுளை
8. எட்டாம் நாள் முளை வளர்ந்து
எட்டிப்படருமாம் மாரிமுளை
9. ஒன்பதாம் நாள் முளை வளர்ந்து
ஒய்யாரம் கொட்டுமாம் மாரிமுளை
10. பத்தாம் நாள் முளை வளர்ந்து
பற்றிப்படருமாம் மாரிமுளை

*****

1. வேதான வேதக்காரியோ தொண்டியம்மா
வேத முக்காடு போட்டு வாராளோ மாரித்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முக்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா
மூன்று பொறியால் முத்தளப்பாலோ மாரித்தாயே
3. நாற்காலின் மேலிருப்பாளோ தொண்டியம்மா
நாலு பொறியின் முத்தளப்பாளோ மாரித்தாயே
4. சேறாலே முத்தளப்பாளோ தொண்டியம்மா
தேசமெல்லாம் சுற்றிவருவாளோ மாரித்தாயே
5. பட்டுக்குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா
பட்டினமேல்லாம் சுற்றி வருவாளோ மாரித்தாயே
6. முத்துக்குடைகள் பிடித்து வருவாளோ தொண்டியம்மா
மூதவரை காத்து வாராளோ மாரித்தாயே

*****

1. கூடையைப் பிடித்திழுத்தீர் கூவு, கூவு வடியம்மே
கொள்ளப் போரும் என்கணவர் கூவு, கூவு வடியம்மே
தாடையிலே சாம்பல் வாரி கூவு, கூவு வடியம்மே
தலை மயிரைப் பிடித்திழுத்தீர் கூவு, கூவு வடியம்மே

2. பார்சபையில் விரித்ததொரு கூந்தலடி யம்மே
படுகளத்தில் முடிபெனேன்னு போனாள் வனவாசம்
உங்கள் சபை தனில் விரித்த கூந்தலடி யம்மே
யுத்தமதில் முடிபெனேன்னு போனாள் வனவாசம்

3. நானொருத்தி யல்லோடி தலைவிரித்து நின்றேன்
இந்த உலகெல்லாம் தலை விரித்து ஆச்சுதென்று போனாள்
வந்தனைகள் செய்ததொரு மன்னரை எல்லாம்
ரணகளத்தி முடிப்பெனேன்னு போனாள் வனவாசம்

4. பத்தினியாள் விரித்ததொரு கூந்தலடி யம்மே
பரலோகம் விரிக்குமேன்று போனாள் வனவாசம்
அருந்ததியாள் விரித்ததொரு கூந்தலடி யம்மே -நாளை
அனைவரும் விரிப்பாரென்று போனாள் வனவாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பதினெட்டாம் நாளையிலே படைபொழுதும் சண்டை
பார் மன்னர் மார்மேலே முடிப்பாள் தலை கூந்தல்
அவனுடைய உதிரத்திலே அள்ளி தலை வீசி
அவனுடைய மார்பெலும்பை சிறப்பாக வாந்து
பக்கக்குடல் பதினாலும் பத்தினியாள் எடுத்து - நாளை
படுகளத்தில் வாரிதலை முடிப்பாளோடி கூந்தல்

6. நூற்றோருவர் பூமி முடியை நோருங்கடித்த பின்பு
வேற்றுமைகள் தொலைந்ததென்று வருவாள் பாஞ்சாலி
பங்காளி தலைகளெல்லாம் பற்றறுந்த பின்பு பத்தினியாள்
தலை முடித்துப் பாராள வருவாள்

7. அன்றோடே முடியும் ஐவருட சபதம்
அரசான வந்திடுவா ராணங்கள் கேளும்
இந்த மட்டுஞ் சொன்ன குறி பிசகாதம்மே
ஈஸ்பரனார் ஆணையென்று இருந்தாள் குறத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.8 திரௌபதி அம்மன் விழாக்கும்மி

1. கும்பமிலங்கா குடமிலங்க
கும்பத்தின் மாவிலை தானிலங்க-அம்மா
கும்பத்தின் மாவிலை தானிலங்க
சம்பந்தமாக திரௌபதா நாயகி
தாயார் வருவதைப் பாருங்களேன்

2. மத்தள தாள முழங்கிட சுத்தி
மாதர்கள் நின்று குரவையிட அம்மா
மாதர்கள் நின்று குரவையிட அம்மா
நித்தம் அடியார்கள் கூடிடவே -அம்மா
நீள்வீதி வாரதைப் பாருங்களேன் -அம்மா
நீள் வீதி வாரதைப் பாருங்களேன்.

3. சீரான பாஞ்சாலி எக்கியத்தில் வந்த
செல்வியர் கும்பி பாட்டுரைக்க
காரானை பா முகன் சங்கரன் சக்தி
கலைமகள் வேலவர் பரண் துணையே!

4. ஆயர் குலத்தில் அவதரித்து ஆளும்
அரசர் குலமழிந்து
சேயர் என்னும் பஞ்சபாண்டவர்க்கு - முடி
செய்திடும் பாதம் சிரம் வைத்தோம்

5. சிரித்த முகமும் எரியும் நுதலும்
திரு நீறு காப்பு திலகமென்ன
வரத்தைக் கொடுக்கும் பராபெரி சிந்தையாய்
வருவதைப் பாருங்க தோழி பெண்ணே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.9 பாரதக் கும்மி

1. அந்தமிகு அத்தினாபுரத்தில் பாண்ட
வர்க்கும் கௌரவர்க்கும் நடந்த
விந்த தனைக் கும்மிப் பாட்டா லுரைக்க
விக்கின விநாயகன் காப்பாமே

2. முச்சக மெச்சவே பாரதச்சண்டை
முடிந்த கதையை பொழிந்திடவே
கெச்சையணியு மலர்ப் பதத்தாள் திருச்
செந்தூர் முருகன் பதந்துணையே

3. ஆதியில் மேன்மை மிகப் படைத்த நல்ல
அத்தி நகரந் தனை யாண்ட
நீதி பெருகும் மதி குலந்தான் மது
நீதி புகழுந் குரு குலத்தான்

4. நாட்டிற் புகழுஞ் ஜெய வீரன் திருத
ராட்டிரன் பெற்ற சூர பாலன்
தா சுற்றில மானலந் நூற்று வரில் மூத்த
தமையனாந் துரியோதணனும்

5. குற்ற மில்லாத குணமுடையான் பரி
சுத்தவான் மான நெறியுடையான்
சிற்றரசன் பாண்டு மகா ராசன் பெற்ற
சத்திய வான் தர்ம புத்திரனும்

6. வீமன் விஜெயன் நகுலனுடன் பல
வேத முணர்ந்த சகா தேவன்
பூமன்னனாம் பஞ்ச பாண்டவரும் மிகு
பொறாமை கொண்ட நூற்றுவரும்

7. காரண மாய்க் குந்தி தேவியர்க்கும் செங்
கதிரவனுக்கும் அவதரித்து
தாராளமாகக் கொடுங் கர்ணனோடு
சந்தோசமாய் வாழ்ந்திடும் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சாஸ்திர வேத நெறியுடையான் தனுர்
சாஸ்திர தனிற் குறிப்புடையான்
ஏந்து நற்குரிய நற்குருவாய் பிரம்ம
கோத்திரமான துரோணரிடம்

9. வேத புராண மனு முறைமை தனுர்
வித்தை களெல்லாம் படித்த பின்பு
தாதை எனுந் திரித ராட்டிரனானவர்
சகல போரையும் தான் அழைத்து

10. படித்த கல்வித் திறம் பார்த்துச் செணாம்
பங்கயம் போல முக மலர்ந்து
பிடித்த வில் விஜெயன் கர்ணன் இருவரும்
பெருஞ் சரியேற்று தானு றைத்தான்

11. உறைத்த வாசகம் கேட்டவுடன் வீமன்
ஓங்கி எழுந்து புலியது போல்
துரைத்தனனா சேய விஜெயனுக்கு ஒரு
சூதன் மகன் கர்ணனுஞ் சரியோ

12. என்று புய பல வீமன் சொல்ல திரி
யோதனன் கண்கள் நெருப்பெனவே
வெற்றி மிகும் கர்ணன் தன்னையும் நீ இந்த
வேந்தர் சபையில் வசை யுரைத்தாய்

13. எந்தனுக் குற்ற துணையான கர்ணனை
இந்த சபையில் தூசித்ததினால்
முந்த நமக்கு பகையாளர் நீயென்று
பொழிந்தானே துரியோதணனும்

14. பாவி துரியோதணன் பகர்ந்திடும் சொல்லிலே
பாரதம் நேர்ந்து முடிந்திடவே
பூவின் நீல மங்கை பாரதச் சுமை நீங்கி
புகழ்ந்து மகிழ்ந்து துலன்கினளே

15. காரணமாய்த் திரு மாலினருளினால்
காசினிப் பாரதம் வெற்றிகொண்டு
பூரண மாகவே பாண்டவரனை வரும்
பொற்புடன் நற் புவியாண்டனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. தவசி நிலைப் பாடல்கள்

## 5.1 தவசிப் பாடல் 1

*1.* காளியம்மன் கோயில் வாசலில்: கணபதி காப்பு:

விருத்தம்

ஓங்காரத்துள்ளே உதிக்கும் பரம்பொருளே
நீங்காது நெஞ்சத்தில் நீர் இருந்து- பாங்காக
என்னையே காப்பாய் -ஈஸ்வரியாள் தன பாலா
உன்னையே துதிப்பேன் என் உள்ளத்தில்

*2.* காளி அம்மன் துதி

**பல்லவி**

காளி கௌரி கங்காளி கன்னி குமரி ஒண்டொடி
ஆழி ஊழி சுந்தரியே அடியார்க்கிரங்கி வழிகாட்டி
ஊழி வினைகள் அணுகாது உனது பதமே துணையாக
வாழும் வரத்தை வேண்டுகின்றேன் வந்தால் எனை
- ஆதரிப்பாயே

சங்கரி கௌரி சடாட்சரி பொங்கிய பாலி கிருபா கடாட்சரி
பூலோக சக்தி எங்கும் நிறைந்த நீ
ஈரேழுலகையும் இரட்சியம்மா மங்களேஸ்வரியே
உச்சனமா காளியான வட பத்திர காளி உமையே

*3.* மோகினி மறிப்பு - ஏல கன்னி மறிப்பு:
இடம்: சின்னச் சந்தி

**ஸ்ரீ ராமர் தோத்திரம்:**

சீர் மேவும் ஆழ்வார்கள் பன்னிருவர் பகர்
செய்யும் ராம ஜெயமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடிக் கண்பாராய் செல்வமும் கீர்த்தியும்
முத்தி தரு ராம ஜெயமே
கார் மேக வண்ணனே திரௌபதி யன்னையை
காத்திட்ட ராம ஜெயமே
கரி யாதி முயமென ஓலமிட முதலையைக்
கண்டித்த ராம ஜெயமே

பார் மீதில் உன் பாதம் தூள் பட்டு எழுந்து
பரிவான ராம ஜெயமே
பங்காட வேடன் மறுமறுவென பதவி
பறித்திட்ட ராம ஜெயமே
ஆர்தான் உரைக்க அறிவார் உன் மகிமை
அனுதினமும் ராம ஜெயமே
ஐயனே எனையாளும் மெய்யனே ஸ்ரீ மத
ராமானுஜாய நமவே

**பல்லவி**

கங்கையணி சடையானை கருத்தில் மிக
நினைந்துருகி கானகம் தன்னில்
மங்கையரே நான் நடக்கும் வழிதனியே நீ
ஒருத்தி மறித்து நின்றாய்
தங்கையுமாய் நீ எனக்கு பாதை விட்டு
அப்பால் தள்ளி நில்லாய்
நங்கையரே அமரர் தொழும் சிவன் தன் பாதம்
நமஸ்கரித்து அடியேன் நாடுவேனே

4. ஏல கன்னி மறிப்பு (ஏழு கன்னியர் மறிப்பு ):
இடம்: பெரிய சந்தி

**விருத்தம்**

வாழி நீ காமி நீ மால் சிவனும் மயனும் நீ
மகிமை பெறும் காமாட்சி நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை சிவகாமி நீ மாயவன் தங்கை நீ
மண்ணுரு வங்கி வெளி நீ
கோமா ரூபநீ இரவு நீ பகலும் நீ
குரு நமசிவாயமும் நீயே
கூத்தாடு மீசனோடு கூத்தாடும் காளி நீ
குலவு பரமசிவமும் நீயே
ஓம் மந்திர ரூபி நீ சிங்காரி ரீங்காரி
ஓங்காரமான பொருளே
ஒரு கையில் சூலமும் ஒருகையில் கபாலமும்
உகந்து வந்தே யருளுவாய் இந்த
பூமி தன்னில் அடியார்கள் வினைதீர்த்து வாழ்வருளும்
புண்ணிய பெருஞ்செல்வியே பூங்காவில் நீயுறையும்
ஓங்கார சக்தியே பூங்காவனக் காளியே

5. பேராண்டச்சி மறிப்பு
இடம்: திரௌபதி அம்மன் முற்றவெளி

**பல்லவி**

சிவனிரு பாதம்போற்றி தெரிவையே ஏகலுற்றேன்
இவனியில் மறித்தாய் நீயும் என்னுடன் பிறந்தாயாரும் பாவம்
அகல் யோகியானேன் பாவமே வழிவிடம்மா
தவமது செய்வதாக தனிவழியேருவேனே

மோசங்கள் செய்யும் மூடர் குலங்கள் முழுவதையும் ஏம
பாசம் கொண்ட பட்டணம் விசர பதினை செவ்வாய்
நேசம் புனைந்தடியார்க்கு உதவி செய்வாய் நீல கண்டி
வாசம்புகழும் உச்சன மா காளியான வட பத்திர காளியுமையே

**பேராண்டன் வருதல்**

மதிவழி சிவன் தாள் என்றும் வணங்கிடும் யோகியானேன்
சடுதியில் உன் மனைவி வந்து தையலாள் மறித்து நின்றாள்
இது வல்லால் வேறொன்றில்லை இளந்தலைப் படாதே நீயும்
உன் விதி வழி பிழைத்துப் போவாய் விடு வழி ஏதுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மதி கேட்டு நீயும் பெருவழக்கு தனில் வந்தாய்
நன்மதி கேளாயானால் ராட்சதப் பிறவி யாரும்
வில் வளைத்திடும் வீரன் விசயன் என அறிந்திடாயோ உன்
கண்மதி கெடவே நானோர் கணையினால் எய்குவேனே

**பேராண்டனை உயிர்ப்பித்தல்**

தவசிக்கே ஏகிடினும் தையலாள் ஏங்கி நின்றாய்
புவனியில் கீர்த்தியில்லை புத்திர வறிதே யாரும்
சிவனிரு பாதம் போற்றி தெளிந்தே வழியுமேகி
இவனுயிர் எழுப்பித் தந்தேன் ஏகுவாய் ஏகுவாயே

6. தவசி மரத்தடியில் - அருச்சுணன் படிக்கட்டில் ஏறுதல்:

**விருத்தம்**

நாட்சதுர மூலத்தின் கணபதிக்கும்
நல்லறிவு தந்திடும் பிரமாவுக்கும்
திருபாற்கடலில் பள்ளி கொள்ளும் திருமாளுக்கும்
பன்னிரண்டு மேனி முதிர்ந்திருக்கும்
தீர்க்கமாய் இலங்கிய செஞ்சடைக் குள்ளே
மேலான சதா சிவத்திற்கும் போற்றி போற்றி

**பல்லவி**

வெற்றி பெறவே கையிலை தனில்
விரும்பி தவசு நிலை நாட்டி
சித்தி பெறவே விநாயகரை
சிந்தையில் எண்ணி நமஸ்கரித்தே
அத்தி மரத்தை மூணு தரம்
தொந்தி வைத்தோன் துணையாக
உற்ற தவசி மரம் ஏற
உகந்தே வரம் தந்தருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மரமேறுதல் (பத்துப் பாட்டு)

**பல்லவி**

சீரார் கைலைக் கரசன் எனவே
திகழும் தேவே மாமதியம்
நீரார் கொன்றைச் சடை மீது
நின்றே இலங்கும் கோமானே
நேரார் வஞ்சம் தனை யழிக்க
நின்றால் போற்றி வரம் பெறவே
ஓராம் படியில் காலை வைத்தேன்
உகந்தே வரம் தந்தருள்வாயே

அருந்த வானோர்க் கமுதிய
வந்தே நஞ்சை மிகவூட்டி
பொருந்த கிருபை மதிசூடும்
பொன்னே அமரர்க்கோர் மணியே
வருந்து நாங்கள் வாடிடச் செய்
மாற்றார் கூட்டம் அதனை வெல்ல
திருந்து மீரார் படியில் வந்தோர்
தேவா வரந் தந்தருள்வாயே

சார்ந்தோருள்ளம் தனில் வாழும்
சம்போக கங்கை அணிந்தவனே
வான்தோய் மேகம் தவமாட
மணி சேர் ரத்ன நகர் இழந்து
கான் தோய்ந்திடச் செய்
கட்டையளிக்க கணை வேண்டி
மூன்றாம் படியில் காலை வைத்தேன்
முதல்வா வரம் தந்தருள்வாயே

காலால் காலன் தனை உதைத்த
கண்ணே அமரர்க் கொலுவிருந்தே
ஆலாலத்தை அள்ளி உண்ட
அரனே தேவர் துயர் தீர்த்தவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலால் அறிய பாசுபதம்
வேண்டி தவத்தை நாடி வந்து
நாலாம் படியில் காலை வைத்தேன்
நாதா வரம் தந்தருள்வாயே

தித்தோமென்றாடி நின்ற
தேவே அமுதே உளத்தமுதே
செந்தீ தனிலுதித்த மங்கை
தேம்பச் சபையில் சீர் குலைத்தோன்
வெந்தேயழிய பாசுபதம்
வேண்டி தவத்தை நாடி வந்து
ஐந்தாம் படியில் காலை வைத்தேன்
அரனே வரம் தந்தருள்வாயே

நீறாய் அரக்கர் அழியவென்றே
நினைத்துச் சிரித்த கோமானே
வேறாய் அரக்கு மாளிகை தனில்
வேக எங்கள் தமை விடுத்தே
மாறா துயரம் மூட்டி வைத்த
மாற்றார் தம்மைக் கொல்லவென்றே
ஆறாம் படியில் காலை வைத்தேன்
ஐயா வரம் தந்தருள் வாயே

தாளால் உலகம் தனையளந்தோன்
தங்கைக் கிசைந்த கோமானே
ஆளாத அரசைப் பறித்துமெங்கள்
அல்லல் பலவும் விளைத்து நகர்
வாளா தெம்மையே ஒட்டி வைத்த
மாற்றான் கூட்டமழிக்க வென்றே
ஏழாம் படியில் காலை வைத்தேன்
ஈசா வரம் தந்தருள்வாயே

மாட்டார் கொன்றை மதி சூடும்
மங்கைக் கிசைந்த கோமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாற்றெங்கள் தமை விடுத்து
நலியச் செய்த நன் நயர்கள்
பட்டேயழியப் பாசுபதம்
பாணம் தனை மிக வேண்டி
எட்டாம் படியில் காலை வைத்தேன்
ஈசா வரம் தந்தருள்வாயே

அன்பால் உந்தித் துதிப்போர்க்கு
அகத்தில் நடனம் புரிவோனே
வன் பூதத்தை எமக்கேவி
மாள வென்றே மிக நினைத்து
தும்பார் கடலும் தோய்ந்திறங்க
துய்யா பாசுபதம் வேண்ட
ஒன்பதாம் படியில் காலை வைத்தேன்
உகந்தே வரம் தந்தருள்வாயே

ஆத்தா உலகெங்கு நிறை
அன்புக்குரிய அருங்கடலே
சுத்தா வரியனும் தேட
சோதி வடிவாய் நிறைந்தவனே
நித்தா யோகத்தமர்ந்தனங்கள்
நீறச்செய்தன்றளித்தவளே
பத்தாம் படியில் காலை வைத்தேன்
பரனே வரம் தந்தருள்வாயே

*8.படி உச்சி மீதினில் இருந்து பாடுவது: - சிவனை நினைத்துப் பாடுதல்*

**பல்லவி**

காலை மடித்துக் கரம் குவித்து
கதிரோன்தனை மிக வேண்டி
சில மறந்தேன் செயல் அழிந்தேன்
சிந்தை தளர்ந்து அறிவழிந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூல முதலே முழு முதலே முத்துக்
குவிக்கும் முக்கண்ணே
ஆல மடர்ந்த அம்பலவா
அலையா வண்ணம் அருள் செய்வாயே

ஒன்றைப் பார்த்து புலன் கலங்கி
உரோமம் சிலிர்த்து உடல் கசிந்து
நின்ற காலின் பெருவிரலை
நிலத்தில் ஊன்றி நினைப்பேனே
மன்றடி தொழுதேன் பதமேற
வானோர் சூழ வருபவனே
அண்டாக் குதவும் அற்புதனே
அலையா வண்ணம் அருள் செய்வாயே

கற்றைச் சடையாளா கங்காளா
கபாலமேந்தும் கண்ணுதலே
சித்தர் முனிவர்க் குரியோனே
தேவர் சூழ வருபவனே
பற்றற்றவர்கள் பார்த்ததற்கும்
பத்தே பத்தும் தெளிவோனே
அற்றைக்குதவும் அற்புதனே
அலையா வண்ணம் அருள்வாயே

சோதி மணியே சுடரொளியே
சூடும் கோலமுடையோனே
பாதி மதி சூடுகின்ற
பவளப் பொருளே பசுபதியே
பூத நாதா கணக்காளா
புனித மூர்த்தி பெருங்கடலே
ஆதிப் பொருளே அற்புதனே
அலையா வண்ணம் அருள் தருவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபெருமான் விருத்தம்:**

மங்கும் மனிதர் எலும்பை யெல்லாம்
மார் மேல் நிறையப் பூண்டு கொண்டு
அங்கம் வளர்க்கப் படும் பாடு யார்தான் அறிய போறார்கள்
சங்கு கரத்தோனே தரித்த சூலம் பிடித்தோனே
எங்கும் நிறைந்திருக்கும் இறைவா எனையே வந்து ஆள்வாய்

**பல்லவி**

அத்தா அமரர் கோவே அடியேன் உமையே நம்பி
சித்தியாய் உமையே நம்பி சிவனடி தொழுதெய்யா
பத்தியாய் ஏற்றவர்க்கு பாசுபதம் அருளல் வேண்டும்
நித்தமே உன் பாதம் நின்றேன் நீரே அருளல் வேண்டும்

9. மரத்தின் கீழ் சிவன் உமை காட்சி அருளல்

**பல்லவி**

சொமசுந்தரனே சொக்கலிங்கேசா
காமனை காத்தோம் கண்ணுதற் பொருளே
நேமமுடனே நெஞ்சினில் நின் நாமம் துதிக்கிறேன்
அருள் புரிவாய் எம்பிரானே

நாராயணா போற்றி நரசிம்ம ரூபா போற்றி
ஆரணனே போற்றி போற்றி அன்பர்க்கு இரங்குவாய் போற்றி போற்றி

கல்லோ மரமோ துணை எனக்கு
காடோ செடியோ துணை எனக்கு
புல்லோ மரமோ துணை எனக்கு
புவோ பூண்டோ துணை எனக்கு
வள்ளோர் புகழும் பெருமானே
வைகுந்தா அடைக்கலமே

நாராயணா போற்றி நரசிம்ம ரூபா போற்றி
ஆரணனே போற்றி போற்றி அன்பர்க்கு இரங்குவாய் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2 தவசிப் பாடல் 2

*1. காளியம்மன் கோயில் வாசலில்: கணபதி காப்பு:*

அத்தனார் சுதனே ஐங்கராதம்பிரானே
சுத்தனே சுவாமி நாதா சுந்தரா இந்தவேளை-
உற்றதோர் துணையாய் வந்து உதவி செய்தருள வேண்டும்
கர்த்தனே எனையாளும் கணபதி துணை செய்வாயே

*2. காளி அம்மன் துதி*

**விருத்தம்**

சங்கரி கௌரிசடாச்சரி பொங்கிய பாளி கிருபகடாச்சரி
பூலோகசக்தி நீ எங்கும் நிறைந்த நீ
ஈரேழு உலகையும் ரச்சியம்மாமங்கள ஈஸ்வரியே
உச்சனம்மா காளியான வடபத்திர காளி உமையே

உருக்கொண்ட கரகத்தில் வீற்றிருப்பவள் நீ
உம்பர் தொழும் அம்மை நீ
ஒதண்ட பிண்டம் நீ
ஆயிரம் கண்கொண் உத்தமத் தெள்ளமுது நீ
தெருக்கொண்ட அடியார்கள் தெரிசனம் நீ
கொடுக்கின்ற தெம்பான திரிசூலி நீ
திகழ் சொக்கலிங்க மகள் தேவி
சுக்கிர வார திரை வீர தாதரவும் நீ
இருள் கொண்டவராகினோம் ஈடேற
நின் கருணையிது இது இல்லையம்மா
ஏழையான் இத் துயர் பாருதல் என்று தொலையும்
அருள் கொண்ட சக்தியே ஆனந்த வல்லியே
அன்பாக அமைந்த மயிலே அம்ப
நிலமொடு தாழமுக உடப்பங்கரை
அமர் பத்திரகாளி உமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JPL

3. மோகினி மறிப்பு - ஏல கன்னி மறிப்பு:
இடம்: சின்னச் சந்தி

**நாராயணன் எதிர் கொள்ளும் போது**

ஆயனே மாயா அரிகிருஷ்ண தேவா போற்றி
நேயமாய் என்னை ஆண்ட நியனே நிமலா போற்றி
காயமே பிரிந்திடாமல் காத்த நாராயணனே போற்றி
மாயனே உந்தன் பாதம் மலரடி போற்றி போற்றி

ஆயனே நந்த கோபாலா அச்சுதான் பச்சமானே
மாயமாய் வந்து நின்ற வாசுதேவனே போற்றி என்றும்
நேயமாய் எம்மையாண்ட நெடியமால் துணை செய்வாயே
கோகுலம் தன்னில் வாழ்ந்த கோபாலனே போற்றி போற்றி

**பல்லவி**

கங்கையணி சடையானை கருத்தில் மிக
நினைந்துருகி கானகம் தன்னில்
மங்கையரே நான் நடக்கும் வழிதனியே நீ
ஒருத்தி மறித்து நின்றாய்
தங்கையுமாய் நீ எனக்கு பாதை விட்டு
அப்பால் தள்ளி நில்லாய்
நங்கையரே அமரர் தொழும் சிவன் தன் பாதம்
நமஸ்கரித்து அடியேன் நாடுவேனே

சிவநெறு பாதம் போற்றி தெருவையே
ஏகலுற்றேன் இவனில் மரித்தாய் நீயும்
என்னுடன் பிறந்தவளேயாரும் பாவை மகளே
யோகியானேன் பாவையே வழிவிடம்மா
தவமது செய்வதாக தனவழி ஏகுவேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காளியை வேண்டி**

விதி தனக்கு எட்டாத விமலதூயன் வென்றலையும்
மாலும் ஒரு மலுவும் ஏற்றி துதி பெறும் உந்தன்
அடியார் பாதம் சேர தெல்லுலகளா உயிர்திச் சுருக்கி வாழ்க
பரதனியாம் தில்லை மண்ணில் நின்றாடும் என்முன்னே
எதிர் நோக்கி மதிமுகம் சேர் சுந்தரி சௌந்தரியால்
வடபத்திர காளி வந்தருள்வாயே

4. ஏல கன்னி மறிப்பு (ஏழு கன்னியர் மறிப்பு ):
   இடம்: பெரிய சந்தி

**விருத்தம்**

வாழி நீ காமி நீ மால் சிவனும் மயனும் நீ
மகிமை பெறும் காமாட்சி நீயே
மங்கை சிவகாமி நீ மாயவன் தங்கை நீ
மண்ணுரு வங்கி வெளி நீ
கோமா ரூபநீ இரவு நீ பகலும் நீ
குரு நமசிவாயமும் நீயே
கூத்தாடு மீசனோடு கூத்தாடும் காளி நீ
குலவு பரமசிவமும் நீயே
ஓம் மந்திர ரூபி நீ சிங்காரி ரீங்காரி
ஓங்காரமான பொருளே
ஒரு கையில் சூலமும் ஒருகையில் கபாலமும்
உகந்து வந்தே யருளுவாய் இந்த
பூமி தன்னில் அடியார்கள் வினைதீர்த்து வாழ்வருளும்
புண்ணிய பெருஞ்செல்வியே பூங்காவில் நீயுறையும்
ஓங்கார சக்தியே பூங்காவனக் காளியே

5. பேராண்டச்சி மறிப்பு
   இடம்: திரௌபதி அம்மன் முற்றவெளி

**திரௌபதாதேவி விருத்தம்:**

கரை எங்கும் முத்தினம் பவளமோடு குலாவியே
கடல் அலைகளால் ஒதுங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதங்கு முகிலினம் வருள் சிறப்பதனால் பயிர்கள்
வாடாது செழித்து நிற்கும்
தரை எங்கும் மல்லியும் முல்லையும் தாளையும்
தளிர்ந்து நல் மலர்ந்திருக்கும்
உர பங்கும் உடப்பு நகர் தனில் வாழ் உத்தமி
ஒளிவான திரௌபதா உந்தன் அருளே

அருள் பழுத்தொழுகும் விழித் திரௌபதியே
அழல் வருமொரு மரகதமே
இருள் பழுத்தொழுகும் மழைக்குழனங்கே
எழில் கொள் பாஞ்சாலி என்னம்மா
மருள் பழுத்தொழுகும் வழி விடாதெம்மை
வழி வழி அடிமை கொண்டென்றும்
தெருள் பழுத்தொழுகும் கல்வியும் சீரும்
செல்வமும் தந்து காத்தருளே

பூமேவும் அளகமும் திலகமிடுதலும் புனைந்த
பொற் குழையழகும்-புனித முறு நாசிகா பரணமும்
புன்னகை பொலிந்த செம்பவள வாயும்
தூமேவும் முத்தமணி வச்சிரப் பதக்கமும்
துலங்கு பட்டாடையும் சுடர் விடு சிலம்பினோடு சண்டைகள்
இசைத்திடும் துய்ய மலரடியினைகளும்
மாமேவு மரகதம் போலொளிரு மேனியும் மகிழ் பயவரதகனரமும்
வளரருள் பார்வையும் கொண்டடியேனுனது
வடிவினைக் காண அருள்வாய்
தேமேவு பூவன நெருங்கு தெங்கம் பொழில் திகழ்
உடப்பங்கரை அமைந்தென் சித்தமிசை குடிகொண்ட
பாஞ்சாலி அம்மையே சிற்சத்தியான உமையே

வருமூல சக்தி நீ சிற்சக்தி சுத்த மருவிய மகா சக்தி நீ
வளர் பரா சக்தி நீ உற்பத்தி சக்தி நீ
வாம ரட்சனி சக்தி நீ
ஒரு புனித சங்கரா சக்தி நீ நித்த முற்றோங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சா சக்தி நீ உரை செய் கிரியா சக்தி நீ
யோக சக்தி நீ உயர் போக சக்தி நீ
சருவமும் தரு ஞான சக்தி நீ ஒரு துருவதன் புரி
மகத்துதித்த சர்வ குணம் பெற்ற ஐவர் பத்தினி நீ
தழல் வடிவ உத்தமியும் நீ
தரும வர்த்தனி நீ என தேவர்கள் புகழ்கின்ற தரணிபுரிகிரி
ஷண புரிவாழ் தரணி சேர் மகிழம்மை ஊருளோர் தொழ
நன்மை தரும் திரௌபதி அம்மையே

**பல்லவி**

மோசங்கள் செய்யும் மூடர் குலங்கள் முழுவதையும் ஏம
பாசம் கொண்ட பட்டணம் விசர பதினை செவ்வாய்
நேசம் புனைந்தடியார்க்கு உதவி செய்வாய் நீல கண்டி
வாசம் புகழும் உச்சன மா காளியான வட பத்திர காளியுமையே

**பேராண்டன் வருதல்**

மதியணி சிவந்தால் என்றும் வணங்கிடும்
யோகியனே சடுதியில் உன் மனைவி வந்து
தையலாள் மறித்து நின்றாள் இதுவல்லால் வேறொண்டுமில்லை
இடஞ்சலை படாதே நீயும் உன் விதிவழி
பிழைத்துப் போவாய் விடுவழி ஒருவனே

**பேரண்டனை வதம் செய்தல்**

பெண்மணி கேட்டு நீயும் பெருவழக்கதனில் வந்தாய்
நன்மதி கேளானாகி இராட்சத பிறவியறும்
வில் வளைத்தும் வீரன் விஜெயனென்று அறிந்திடாயோ
உன் கண்மதி கெடவே யானேன் கணையினால் கொல்லுவேனே

**பேராண்டனை உயிர்ப்பித்தல்**

அத்தி மா முகனே போற்றி ஆதாரப் பொருளே போற்றி
சத்தி புத்தி ராயா போற்றி சண்முகன் அண்ணா போற்றி
சித்தியும் கொடுப்பாய் போற்றி சிறக்கும் ஐங்கரனே போற்றி
முத்தியும் கொடுப்பாய் ஞான மூர்த்தியே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவசிக்கே ஏகடினும் தையலாள் ஏங்கி நின்றாய் புவனியில்
கீர்த்தியில்லை
புத்திர வனிதேயாகும் சிவனென்று பாதம் போற்றி
தேருவயே ஏகலுற்றேன் இவன் உயிர்
எழுப்பித் தந்தேன் ஏகுவாய் ஏகுவாயே

6. தவசி மரத்தடியில் - அருச்சுணன் படிக்கட்டில் ஏறதல்:

அரிஹரி ராமா போற்றி அரிகிருஷ்ண தேவா போற்றி
கரிதனை காத்தாய் போற்றி கம்சனை வதைத்தாய் போற்றி
விரிகடல் துயில்வாய் போற்றி விழாக்கனி எரிந்தாய் போற்றி
கெடுவினை வென்றாய் போற்றி ஸ்ரீ கிருஷ்ண தேவா போற்றி

வெற்றி பெறவே கையிலைதனில் விரும்பித் தவசி மரம்நாட்டி
சித்தி பெறவே விநாயகனை சிந்தைதனில் தியானித்து
சுற்றி மரத்தை மூன்று தரம் தொந்தி வயிற்றோன் துணையாக
உற்ற தவசி தனில் ஏற உகந்த வரம் தந்தருள்வாயே

7. மரமேறுதல் (பத்துப் பாட்டு)

வானோர் புகழும் கைலையிலே வடிவா யெழுந்து தனுவாகி
சீராய் வளர்ந்து தெளிவாகி தில்லை மண்ணுள் நின்றாடும்
பாரோர் புகழும் ஐவருக்காய், பாசு பதத்தையே வேண்ட
ஓராம் படியில் திருக் காலை உன்னி வைத்து கடப்பேனோ

இரண்டாம் படியை மிக வேண்டி எனது பாதம் தனையூன்றி
மண்டே நடனம் புரியவரும் வானோர்கரசே வல்லவனே
இன்றே பாசுபதம் வேண்ட இரண்டாம் படியிற் திருக்காலை
கண்டே காட்சி பெற வந்தேன் கர்த்தா வரந்தருள் வாயே

வானோர் புகழும் தில்லையிலே வாகாய் ரிஷிகள் கண் காண
தானே நடனம் புரியவரும் தயா பராவுன் பாதம் நாடி
மூன்றாம் படியில் திருக்காலை முன்னே நிறுத்தி பணிந்து நின்றேன்
யானா தில்லை சிதம் பரனே அரனே வரந்தருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலா கிரியை வில்லாக சரமேல் ஏக நாணாக
கால சூழும் முப்புரத்தை தகனமிட்ட கர்த்தா உன் பாதமதை
நாலாம் படியிற் திருக்காலை நன்றாய் பாசுபதம் வேண்ட
மேலா எளுந்து நான் வாரேன் விமலா வரந்தருள் வாயே

பஞ்சாட்சரத்தை கருத்திலுண்ணிபாரத் தவசி பண்ண வந்தேன்
நஞ்சாங் கொடிய பாவியவன் நாடு மீள இக்காளில் வந்தேன்
துஞ்சா வாழும் அடியேங்கள் கேட்கா வரமும் வேண்ட எண்ணி
அஞ்சாம் படியிற் காலை வைத்தேன் அரணே வரந்தருள்வாயே

ஆறா தாரப் பொருளெனவே அவ்வுவ் சவ்வு மாணவனே
வேறாதாரமில்லாமல் விரும்பி உனது பாதம் நாடி
கூடுதாரப் பொருளெனவே கொன்றை சூடும் பெருமானே
ஆறாம் படியிற் காலை வைத்தேன் அரணே வரம் தந்தருள்வாயே

கால கால என்னும் நாமம் கருதிப் படைத்த கர்த்தவனே
ஆர மகிழும் வான வர்க்காய்நன்றாய் ஆல முண்டேனே
கோலாகாலப் பெருமானே கொன்றை சூடும் பெருமானே
ஏழாம் படியிற் காலை வைத்தேன் எனக்கோர் வரந்தருள்வாயே

கட்டாம் பெரிய ராவணனுக்காக கனவாழ்வும் தேருயிருந்தாய்
இட்டத்துடனே தேவருக்காய் எண்ணப்படாத நஞ்சையுண்டாய்
வட்டக்கடலில் மகரமென வந்தோன் தனக்குத் தந்தையரே
எட்டாம் படியிற் திருக்காலை வைத்தேன் ஈசா வரந்தருள்வாயே

அன்பும் தயவும் உடையவர்க்கு அதிக வாழ்வு கொடுப்பவனே
வன்பு முடையோர் தங்களையும் மடிவிப்பவந்த மைத்துனனை
என்பால் இரங்கி அரவுயற்றோன் அன்னப்படாதன் தனை வதைக்க
ஒன்பதாம் படியிற் ஊன்றிக் காலை வைத்தேன் நாதா வரந்தருள்வாயே

சப்த ரிஷிகள் வானோர்கள் தானே அறிய நஞ்சூட்டி
சுத்த ஊருக்கு கயிறு கொடு துக்கப்படாமல் கட்டிவிட்ட
மத்த துரியோதணன் சேனை மாள மூழும் அழிவு செய்ய
பத்தாம் படியிற் காலை வைத்தேன் பாசுபதமே தந்தருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. படிஉச்சிமீதினில் இருந்து பாடுவது: - சிவனை நினைத்துப் பாடுதல்

காலை மடித்துக் கரம் குவித்து கதிரோன்தனை மிக வேண்டி
சீல மறந்தேன் செயல் இழந்தேன் சிந்தை தளர்ந்து மெய் மறந்தேன்
மூல முதலே முழு முதலே முத்துக்குவிக்கும் முக்கண்ணனே
ஆல மடந்தாய் அம்பலவா அலையா வண்ணம் அருள் செய்வாயே

ஒன்றைப் பார்த்துப் புனல் கலங்கி ரோமம் சிலிர்த்து
உடல் மெலிந்து நின்ற காலில் பெரும் விரலை நினைவேனை
மன்றாடி தொழுதேன் பாதம் ஏற வானோர் சூழ வருபவனே
அண்டர் தொழும் அற்புதனே அலையா வண்ணம் அருள்
செய்வாயே

கற்கைச் சடையாளா கங்காளா கபாலம் ஏந்தும் கண்ணுதலே
மற்றத் தேவர்க்குரியவனே வானோர் சூழ வருபவனே
பக்தர்க் கிரங்கும் பசுபதியே பத்தே பத்தும் நீயானால்
அண்டர் தொழும் அற்புதனே அலையா வண்ணம் அருள்
செய்வாயே

சோதி மணியே சுடர் ஒளியே சூடும் கோலம் உடையவனே
பாதி மதியை சடையில் அணிந்த பவளப் பொருளே பசுபதியே
பூத நாதா கங்காளா புனித மூர்த்தி பெருங் கடலே
ஆதிப் பொருளே அற்புதனே அலையா வண்ணம் அருள் செய்வாயே

கங்கையை சடையில் அணிந்தாய் போற்றி
கரியுரி துயில் உடுத்தாய் போற்றி
மங்கையை பாகம் வைத்தாய் போற்றி
மான் மழுவும் கரத்தில் ஏந்தி நின்றாய் போற்றி

சங்கரனே சதாசிவனே போற்றி
சக்தி உமை பாகனனாய் வந்தாய் போற்றி
மங்கையோர் பங்காளா சிவனே உந்தன் மனம் கனிந்து
அலையாய் வண்ணம் அருள் செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் தேவோர் வானோரும்
முதல் ரிஷிகள் தானோரும்
விண்ணோர் புகழும் பாற்கடலை
இமயைக் கிரியை மத்தாக பன்னாகத்தை
கயிறாக பாரோர் அறிய வடம் பூட்டி அந்நாள்
அமுதம் கடையயிலே அன்றே
பெரும் ஆல மதை உன்னால் உலகம் அறிவதற்கு
உடனே ஆலம் உண்டவனே
அண்ணாமலை தரித்தோனே
அலையா வண்ணம் அருள் செய்வாயே

கங்கைதனைச் சடையிலேந்தி கபால மேந்திக்
கைதனிலே மானும் ஓடு மழுவும் ஏந்தி
மங்கைதனை இடப்பாகம் தனிலே வைத்து
மதியணிந்து அரவமதை மாலைபூண்டு
கங்கை பெரும் தில்லை மண்ணில்
காளியோடு தாண்டவமாடும் தவமே மெஞ்ஞான
அங்கையற் கண்ணியாலையும் மைந்தன் அடியனைப் பூண்டு
கொண்டேன் அடியேன் ஏழை
மங்கையோர் பங்காளா சிவனே உந்தன் மனம் கனிந்து
அலையா வண்ணம் அருள் செய்வாயே

கத்தி கையிலை பதில்தனில் நாடி தவமிருக்கும்
இந்நாள் பக்தி நிறையச் செய்தவனே
பார் மகனும் வாதுரைத்து
முத்தி பெரும் நற் சிவனே
முன்னால் வரும் மன்மதனே
நெற்றிக் கண்ணால் எரித்தோனே
நிமலா நீயும் வந்தருள்வாயே
அர்த்தனே அமரர் கோவே
அடியேன் நான் உம்மை நோக்கி
பக்தியால் உனையே நம்பிப் பாசுபதம் அருள எண்ணி
சித்தியால் உமது பாதம் சிவனடி தொழுதேனய்யா
கர்த்தனே என்னை யாண்ட கடவுளே துணை செய்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவுருவான தேவா அம்பிகை பாகா போற்றி
திருவுருவான தேவா சிவபெருமானே போற்றி
குருபர வடிவே எங்கும் குவலயம் நிறைந்தாய் போற்றி
வந்தருள் செய்வாய் போற்றி
மலரடி போற்றி போற்றி
அக்கினி உன் பாதம் கண்டேன் கைலைகண்டேன்
ஆயிரங்கால் மண்டபமும் அழகும் கண்டேன்
பொற்றுனின் சேர் வளங்கள் கண்டேன்
தெரு வீதி கண்டேன் செந்தாமரைப் பூ பாதம் கண்டேன்
புலியுரி கண்டேன் திக்கில்லா பாதம் அடையாளம் கண்டேன்
சிவ சிவா உன் பாதம் தொழுது கொண்டேன்
கொக்கிறது புனைந்திருக்கும் கோலம் கண்டேன்
கும்பிட்டேன் அடி வணங்கி கும்பிட்டேனே

**சிவ தோத்திரம்**

**பல்லவி**

காயா மரத்தின் கனியாகி கனியிற் கோட்டை யுள்ளாகித்
தாயா ஈரேழுலகும் தந்தையுமான தயாபரனே
மாயா மறைநூல் தனை வகுத்த வரனே உந்தன் அடைக்கலங்கான்
பேயா எங்கள் பெருமானே பித்தா என்னை யாளாயோ

அரவம் பணியாயணிவோனே வரனே யடியார்க் கினியோனே
மருவின் கொழுந்தின் வாசனை போல் மாயாமருளே மகா தேவா
குருவைச் சீடன் தனைத் தேடி குடி கொண்டுள்ளத்திருப்போனே
இரவும் பகலுமுனைப் புகழ்வேன் ஈசா எனையாளாயோ

மட்டர் குழலி தனைக் கூடி மாயா வயிற்றிற் கிரை தேடி
பட்டாங் கடித்துப் பரஞ்சோதி பாதங் காண வேணுமென்றே
கட்டாச் சுரபி கன்றது போல் காசி எங்கும் திருத்தடியேன்
எட்டாக் கொம்பை எட்டி நின்றேன் ஈசா என்னை ஆளாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்குன் றெடுத்துவளர்த்த பெண்ணை வைத்தாயுந் தனியிடப்பாகம்
சினக்கும் புலித் தோல் தரித்தோனே சிவனே எங்கள் பெருமானே
நினைக்கும் பொழுது அடியேன் முன் நிமலாவந்து நில்லாயோ
எனக்கும் முனக்கும்போகாதீசா என்னை யாளாயோ

கொல்லுங் களிறை யுரித்தோனே குடிகொண்டுள்ளத்தி லிருப்போனே
சொல்லுந் தளத்தி லிருந்தென்ன சிவனேயடியேன் படமாட்டேன்
அல்லும் பகலும் உனைப் புகழவே னையாயுந்தன் அடைக்கலங்கான்
இல்லும் பிறப்பும் இனி வேண்டேன் ஈசா என்னை யாளாயோ

வருவதும் போவதும் இனி வேண்டேன் வாழ்வும் புவியும் வேண்டேன்
தருவதேனக்கு உன் பாதஞ் சர்வஜித் தயாபரனே
குருவுப தேசம் நீதந்து குடிகொண்டுள்ளத்தி லிருந்தடியே
நறுவினை யறுத்தே எனையாண்ட வரனே எளியோன் முன் வாராயோ

நில்லா வாழ்வை சதமென்று நேரியானடக்க மாட்டாமல்
நல்லார் பொல்லா ரேன்றரறியாமல் நமன் போல்
நடுங்கித்திரிந்தாலும்
அல்லார் குழவாள் உமை பாகா வரனே யடியார்க் கெளியோனே
எல்லாம் பொறுக்கபரமுனக்கே ஈசா எனையாளாயோ

பொங்குகடல் சூழலாக மெங்கும் புவியேழு புவனமெல்லா
மெங்கு முந்த னொளியன்றோ இறைவா எங்கள் பெருமானே
அங்கந் தளர்ந்து மிக மெலிந்து வடியேன் வயிற்றுக் கிரைதேடி
எங்குந் திரிந்து வுழாமல் லீசா எனை யாளாயோ

பொய்யும் மெய்யும் தானுரைத்துபுலிமேல் வாழ்வைச் சதமென்று
கையுஞ் சலித்துக் கால் சலித்துக் கர்த்தாவுன்றன் செயலன்றோ
செய்யுந் தொழிலையு மெய்யென்று சிவனே யடியேன் படுவானேன்
எய்யுஞ் சிலை யுந்தனை எரித்த ஈசா எனையாளாயோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவபெருமான் விருத்தம்:**

பெற்ற தாயும் பிதா என் பிதாவைப் பெற்ற
பெரியவனும் உரிய தாயும்
பிறவிப் பெரும் பிணிக்கொரு மருந்து
பெரிய பிழைகள் எல்லாம் பொறுத்து
கொற்றவனும் நல் தவப் பயனும் மிக வரமும்
கொடுத்திடும் பெரு வள்ளலும்
குறைவற்ற செல்வமும் நிறைவற்ற மெய்ஞ்
ஞான குருவும் என் குல தெய்வமும்
மற்றுமுள்ள சித்தியும் சுத்தமு நீ
அன்று வந்தடைந்தென்னை அருள்வாய்
மலர்க் கரம் கொண்டு பரமானந்தமுதூட்டி
மதலை எனையே காப்பாய்
கற்றவர்கள் உள்ளத்தில் உற்றவரும்
நேசனே கைலாய கிரி வாசனே
காசி விசுவனானந்த சொரூபமே
கருணா பதி தெய்வமே

9. மரத்தின் கீழ் சிவன் உமை காட்சி அருளல்

**பல்லவி**

கல்லோ மரமோ துணை எனக்கு
காடோ செடியோ துணை எனக்கு
புல்லோ மரமோ துணை எனக்கு
புவோ பூண்டோ துணை எனக்கு
வள்ளோர் புகழும் பெருமானே
வைகுந்தா அடைக்கலமே

நாராயணா போற்றி நரசிம்ம ரூபா போற்றி
ஆரணனே போற்றி போற்றி அன்பர்க்கு இரங்குவாய் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. அம்பாப்பாடல்கள்

## 6.1 குழுவாகப் பாடல்:

| மண்டாடி | மற்றவர்கள் | மண்டாடி | மற்றவர்கள் |
|---|---|---|---|
| ஏகாங் | ஐயா | ஏலோ ஈலோ | ஈலோ |
| ஏகாங் | ஐயா | ஏலோ ஈலோ | ஈலோ |
| அரிஹரி | ஏலோ | நாராயணா | ஏலோ |
| அச்சுதனே | ஏலோ | பச்சமலை | ஏலோ |
| பச்சமலை | ஏலோ | பவள மலை | ஏலோ |
| பைங்குறவர் | ஏலோ | பாடும் மலை | ஏலோ |
| ஓடா | ஏலோ | கடலைவைத்தான் | ஏலோ |
| ஓடாவி | ஏலோ | கப்பல் வைத்தான் | ஏலோ |
| கப்பல் | ஏலோ | உடையவனே | ஏலோ |
| கண்கலக்கம் | ஏலோ | தீர்த்தவனே | ஏலோ |
| தீர்த்தமடா | ஏலோ | மச்சானே | ஏலோ |
| செல்வமடா | ஏலோ | தனிக்கோடி | ஏலோ |
| தனித்தார் | ஏலோ | குலகரையார் | ஏலோ |
| தங்கினார் | ஏலோ | அம்பலத்தே | ஏலோ |
| அம்பல | ஏலோ | வெளிதனிலே | ஏலோ |
| ஆசை தந்த | ஏலோ | மானாரே | ஏலோ |
| மாரித்தா | ஏலோ | வல்லகியே | ஏலோ |
| மகராணி | ஏலோ | காரும்மா | ஏலோ |
| | | | |
| ஓடி | ஏலை | ஏலை | ஏலை |
| ஓடி | ஏலை | ஏலை | ஏலை |
| ஓடி | ஏலை | ஏலை | ஏலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.2 தனித்துப் பாடல் – தொகையறா:

கடலை முகம் பாரம்மா  என் தாயே
கடன் காரனைக்கண்பாரம்மா
கண் பாரு பெற்றவளே  தாயே
காலு தலை நோகாமல்

மற்றவர்கள்
ஏலை ஏலை ஏலாம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை

## 6.3 எதிர்த்தம்பா பாடல்

ஒருவர்: வேணுமென்று காரடியோ  ஏலை ஏலை
மற்றவர்கள் வெப்பம் சிலையாளே  ஏலை ஏலை

மற்றவர்: சிலை போலே முகவடிவா  ஏலேலம் ஏலை
சித்திரம் போல் நடையானே  ஏலேலம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை

ஒருவர்: சித்திரை மாதத்தில்  ஏலை ஏலை
சிவன் பொறந்த நாளையிலே  ஏலை ஏலை

மற்றவர்: நாளான நாளையில  ஏலேலம் ஏலை
நல்ல வெள்ளிக் கிழமையில  ஏலேலம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை
ஏலை ஏலை ஏலாம் ஏலை

*****

ஒருவர்: ஊராயம் ஏலேலம்மானதொரு  ஏலேலை ஏலை
புதன் கிழமை ஏலேலம் சண்டையில  ஏலேலை ஏலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்: சண்ட ஏலேலம் வருகுதடா — ஏலேலை ஏலை
சண்டான ஏலேலம் கைவிடு — ஏலேலை ஏலை

ஒருவர்: கைவிடு ஏலேலம் காப்பவிடு — ஏலேலை ஏலை
கைகாப்ப ஏலேலம் சோரவிடு — ஏலேலை ஏலை

மற்றவர்: போரு ஏலேலம் வருகுதடா — ஏலேலை ஏலை
புத்தியுள்ள ஏலேலம் தருமருக்கு — ஏலேலை ஏலை

*****

ஒருவர்: தருமருக்கு நேர் கிளைய — ஏலேலம் ஏலோ
தடம் பெரிய போர்வீமன் — ஏலேலம் ஏலோ

மற்றவர்: வீமன் ஒரு சண்டையில — ஏலேலம் ஏலோ
வில்லெடுத்தான் கண்டீரோ — ஏலேலம் ஏலோ

ஒருவர்: கண்டமான் விடுவதில்லை — ஏலேலம் ஏலோ
காயம் பட்ட மான் எதுவோ — ஏலேலம் ஏலோ

மற்றவர்: அண்டா நெருப்படியோ — ஏலேலம் ஏலோ
அடங்காத செந்தணல் — ஏலேலம் ஏலோ

ஒருவர்: செந்தணலை மூட்டியம்மா — ஏலேலம் ஏலோ
செழித்து அரசாளையில — ஏலேலம் ஏலோ

மற்றவர்: வந்த வழி தூரமடா — ஏலேலம் ஏலோ
வயிற்று வலியே கொடுமை — ஏலேலம் ஏலோ

*****

ஒருவர்: ஏலோடி ஏலோ
மற்றவர்: ஏலை வலை ஏலோ
ஒருவர்: யாலாடி யாலா
மற்றவர்: யாழிவலையாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: ஆலமரத்தடியே
மற்றவர்: அம்மாதாயே
ஒருவர்: அவசரமாக அழைத்துக்கொண்டாயே
மற்றவர்: அம்மா தாயே
ஒருவர்: வேணும் மென்று காரும்மா
மற்றவர்: தாயே
ஒருவர்: வேதனைகள் தீரும்மம்மா
மற்றவர்: அம்மா தாயே

*****

ஒருவர்: காவேலா வாருமையா ஏலே
கள் வருட ஐயாவே ஏலே
ஐயா பெரியவரே ஏலே
அதிகப்படித்தவரே ஏலே
தீரப்படித்தவரே... ஏலை ஏலை
தெளிவறிந்த செங்கடரே.. ஏலை ஏலை

*****

ஏலேலம் ஏலை ஏலவலை ஏலை
ஏலேலம் ஏலை ஏலவலை ஏலை

ஒருவர்: செங்கோல ஏலை நாட்டியம்மா ஏலை ஏலோ
செழுத்தியரசு ஏலை ஆளையிலே ஏலை ஏலோ

மற்றவர்: சந்நியாசி ஏலை ரூபங்கொண்டு ஏலை ஏலோ
சாகிரண்டி ஏலை தன்னால ஏலை ஏலோ

ஒருவர்: உன்னால ஏலை பஞ்சவரும் ஏலை ஏலோ
ஊரிழந்து ஏலை பதியிழந்து ஏலை ஏலோ

மற்றவர்: நாடிழந்து ஏலம பஞ்சவரும் ஏலை ஏலோ
நல்லவனம் ஏலை சென்றார் ஏலை ஏலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: சென்றுருண்டை ஏலை விழியாலே ஏலை ஏலோ
செல்வகுந்தி ஏலை மருமகளே ஏலை ஏலோ

மற்றவர்: மருகநல்ல ஏலை இறக்கி வைத்து ஏலை ஏலோ
மனங்கொள்ளடி ஏலை மாரிமுத்தே ஏலை ஏலோ

*****

ஏலேலம் ஏலம ஏலைவலை ஏலம்
ஏலவாலே ஏலம் ஏலவாலே ஏலம்

ஒருவர்: மாரிவந்தாள் மழை பொழியும் ஏலேலம்
தேவி வந்தாள் தேன் சொரியும் ஏலேலம்

மற்றவர்: தெவிட்டாத ஏலம் தெள்ளமுதே ஏலேலம்
தெளிவறிந்த ஏலம் செங்கமரே ஏலேலம்

ஒருவர்: ஆதி நல்ல ஏலம் உடையவளே ஏலேலம்
ஆத்தாளே ஏலம் வரும்மம்மா ஏலேலம்

மற்றவர்: ஆத்தா இன்று ஏலம் கனித்தாளம்மா ஏலேலம்
அன்றொரு நாள் ஏலம் தங்கிருந்தாள் ஏலேலம்

*****

ஏலைவலை ஏலோ தண்டு ஏலோ ஏலம்மா
ஏலேலையா ஏலேலையா ஏலோ ஏலம்மா

ஒருவர்: தங்குவேன் எங்கேயம்மா ஏலோ ஏலம்மா
தரிப்பேன் வட மதுரை ஏலோ ஏலம்மா

மற்றவர்: பொங்குவேன் எங்கேயம்மா ஏலோ ஏலம்மா
புனியமா சோலையிலே ஏலோ ஏலம்மா

ஒருவர்: சோழமழையழகா ஏலோ ஏலம்மா
சொக்கநாதா உன் காவல் ஏலோ ஏலம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்: காவல் பயணமடா ஏலோ ஏலம்மா
கட்டழகா வீரபத்திரா ஏலோ ஏலம்மா

*****

ஒருவர்: ஏலவலை ஏலேல ஏலே தண்டு ஏலாவலை ஈலோ
ஒவேலம்மா ஓலை ஒவேலம்மா ஏலாவலை ஈலோ

மற்றவர்: வாராளே ஏலேலம் வாராளம்மா ஏலாவலை ஈலோ
வாகுதலை ஏலேலம் வாராளம்மா ஏலா வலை ஈலோ

ஒருவர்: கொடியான ஏலேலம் பெருக்க ஏலாவலை ஈலோ
கொற்றவளை ஏலேலம் எங்கிருக்க எலாவலை ஈலோ

மற்றவர்: நெய்மீனுக்கென்று ஏலேலம் வளைந்தோமே
ஏலாவலை ஈலோ
நெஞ்சுருகி ஏலேலம் பாடுகிறோம் ஏலாவலை ஈலோ

ஒருவர்: பாரைபட ஏலேலம் வேண்டும் என்று ஏலாவலை ஈலோ
பரத்திவலை ஏலேலம் வலைவளைந்தோம்
ஏலாவலை ஈலோ

*****

ஒருவர்: ஏலாவலை ஏலதண்டு ஏலாடி ஏலை
ஓவலையா ஓவலைம்மா ஏலாடி ஏலை

மற்றவர்: செவ்வலாய் வாராயோ எலாடி ஏலை
திரண்ட பொரிகெழுரே ஏலாடி ஏலை

ஒருவர்: வண்ணப் பொரிகெழுரே ஏலாடி ஏலை
வானரிய ஒராவே ஏலாடி ஏலை

மற்றவர்: பன்னாப்படுவலையாம் ஏலாடி ஏலை
பகம் பெற்றநூல் மடியாம் ஏலாடி ஏலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: எண்ணிப் பகிரயில	ஏலாடி ஏலை
எடுத்தேனொரு ஓராவே	ஏலாடி ஏலை

மற்றவர்: பார்த்திருந்துதான் பறித்தான் ஏலாடி ஏலை
பாவிப்பட மண்டாடி	ஏலாடி ஏலை

ஒருவர்: மண்டாடி வளைத்தவலை	ஏலாடி ஏலை
மனையாட்கள் தான் வாழ	ஏலாடி ஏலை

மற்றவர்: எல்லோரும் வாழவம்மா	ஏலாடி ஏலை
என் மகளார் பார்த்திருக்க	ஏலாடி ஏலை

ஒருவர்: பார்த்த முகங்கள் எல்லாம்	ஏலாடி ஏலை
பல்லுருவாய்த்தோனுதையா	ஏலாடி ஏலை

*****

ஒருவர்: ஏலையா ஏலவலை	ஏலை ஏலை ஏலோ
ஓவலையா ஓவலையா ஏலை	ஏலைஏலோ

மற்றவர்: மூளியாக் கண்டவுடன்	ஏலை ஏலை ஏலோ
முறை முறை வாமீனே	ஏலை ஏலை ஏலோ

ஒருவர்: மீனம்மா உன் சுரூபம்	ஏலை ஏலை ஏலோ
வெடுக்கெடுத்து வீசுதடி	ஏலை ஏலை ஏலோ

மற்றவர்: அனலம்மா உன் சுரூபம்	ஏலை ஏலோ ஏலோ
அண்டமுடி கூடுதில்லை	ஏலை ஏலோ ஏலோ

ஒருவர்: அண்டாநெருப்பையம்மா	ஏலை ஏலோ ஏலோ
அடங்காத செந்தனலே	ஏலை ஏலோ ஏலோ

மற்றவர்: செந்தணலை மூட்டியம்மா	ஏலை ஏலோ ஏலோ
செழுத்து அரசாளையில	ஏலை ஏலோ ஏலோ

ஒருவர்: ஆளப்பிறந்தாயோ	ஏலை ஏலோ ஏலோ
அரசாளவந்தாயோ	ஏலை ஏலோ ஏலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்: குடியில் பிறந்தாயோ ஏலை ஏலோ ஏலோ
குடியாளவந்தாயோ ஏலை ஏலோ ஏலோ

ஒருவர்: வந்தாரை வாழவைக்கும் ஏலை ஏலோ ஏலோ
சிங்கார உடப்பங்கரை ஏலை ஏலோ ஏலோ

*****

ஒருவர்: ஏலவலை ஏலொ ஏலேதண்டு ஏலோ
ஓவலையா ஏலோடி ஓவலையா ஏலோ

மற்றவர்: வீராதி ஏலோ வீரனடா ஏலோ
விசயனடா ஏலோ உன் தகப்பன் ஏலோ

ஒருவர்: சூராதி ஏலோ சூரனடா ஏலோ
சுப்பிரமணிய ஏலோ வேலனடா ஏலோ

மற்றவர்: வேலவனார் ஏலோ கோயிலில ஏலோ
வேலோ நல்ல ஏலோ அடையாளம் ஏலோ

ஒருவர்: கதிரவனார் ஏலோ கோயிலில ஏலோ
கதிரோநல்ல ஏலோ அடையாளம் ஏலோ

மற்றவர்: அடையாள ஏலோ காரியரேஏலோ
அம்மமுத்து ஏலோ மாரியரே ஏலோ

ஒருவர்: மாரித்தாய் ஏலோ வல்லகியே ஏலோ
மகராசி ஏலோ காருமம்மா ஏலோ

*****

## 6.4 நீட்டம்மாப் பாடல்

| தனியாள் | மற்றவர் |
|---|---|
| ஏலேலோ | ஏலேலோ |
| ஐயாட | யாலயாலாடே |
| யாலாடே | அம்மம்மா |
| முத்துமாரி | தாயாரே |
| தாயாரே | முகத்திரக்கம் |
| முகத்திரக்கம் | கண்பாரம்மா |
| கண்பாரம்மா | பெற்றவளே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

| | |
|---|---|
| பெற்றவளே | காலுதலை |
| காலுதலை | நோகாமலே |
| வனவாநல்ல | வனங்கடந்து |
| வனங்கடந்து | வாரார் |
| வாராரே | மாயவரும் |
| மாயவரும் | ஊரான |
| ஊரான | ஊர்கடந்து |
| ஊர்கடந்து | உடைப்பநல்ல |
| உடப்பநல்ல | கரைகடந்து |
| கரைகடந்து | பேரான |
| பேரான | பேர்கடந்து |
| பேர்கடந்து | பெரியவத்த |
| பெரியவத்த | புளிக்கரைச்சான் |
| புளிக்கரைச்சான் | சாண்கடந்து |

*****

ஏலைவாலை ஏலோ தண்டு ஏலேலம்
ஒலேலம்மா ஒலேலம்மா ஏலேலம்

| | | |
|---|---|---|
| ஒருவர்: | வாராள வாராளம்மா | ஏலே லேம் |
| | வடிவேல் சன்னதியில் | ஏலே லேம் |
| மற்றவர்: | இருந்தா பெருந்த பசு | ஏலே லேம் |
| | ஏழிலங்க சோதிமின்ன | ஏலே லேம் |
| ஒருவர்: | அன்னம் விளையாடுது | ஏலே லேம் |
| | அஞ்ச வர்ணப் புள்ளாடுது | ஏலே லேம் |
| மற்றவர்: | கட்டாக் கடிக்குதடா | ஏலே லேம் |
| | கடலை உழக்குதடா | ஏலே லேம் |
| ஒருவர்: | ஒராப் படுவலையாம் | ஏலே லேம் |
| | ஒரு தோணி மீன்படுமா | ஏலே லேம் |
| மற்றவர்: | கீலாங்கடுவலையாம் | ஏலே லேம் |
| | சீராட்டி கரவலையாம் | ஏலே லேம் |
| ஒருவர்: | மண்டாடி வளைச்ச வலை | ஏலே லேம் |
| | மட்டதல பொறுக்க வைத்தாள் | ஏலே லேம் |
| மற்றவர்: | மூட்டுப்பட்ட சம்மாட்டிக்கு | ஏலே லேம் |
| | மூன்று மடி மீன் படவே | ஏலே லேம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6.5 விருத்தம்பா

சமுத்திரதேவியாரே என் தாயே
இரங்குமம்மா
ஏழை முகத்தையம்மா என்தாயே
ஏறிட்டுப் பாருமம்மா.

**விருத்தம்:**

என்டா சின்னவேடா எனக்கொன்றும் புரியவில்லை
கண்னதோர் காட்டிலே காளியோ பூதந்தானோ

*****

ஒருவர்: ஏலாடி ஏலவலை ஏலேலம்
ஓவேலை ஒவலம்மா ஏலேலம்
மற்றவர்: நானோடிப்போகுதடா ஏலேலம்
நடக்க வேணும் தென் மதுரை ஏலேலம்
ஒருவர்: பொழுதோடிப் போகுதடா ஏலேலம்
போகவேணும் தென்மதுரை ஏலேலம்
மற்றவர்: போகட்டோ தாயாரே ஏலேலம்
போய்வரட்டோ மாலைவனம் ஏலேலம்
ஒருவர்: மால வசங்காது ஏலேலம்
மஞ்சல் முகம் வாடாது ஏலேலம்
மற்றவர்: வட்டாளம் பூவாலே ஏலேலம்
போட்டாளே தோள் மால ஏலேலம்
ஒருவர்: பூவாட வீசவம்மா ஏலேலம்
புலவர் கவி பாட ஏலேலம்
மற்றவர்: பாடும் புலவருக்கு ஏலேலம்
பாட்டோல ஆனைம்மா ஏலேலம்
ஒருவர்: எழுதும் புலவருக்கு ஏலேலம்
ஏட்டோல ஆனைம்மா ஏலேலம்
மற்றவர்: ஆனையிருந்தபடியே ஏலேலம்
அரசாளும் மண்டபத்தே ஏலேலம்
ஒருவர்: பூனை இருந்தபடியே ஏலேலம்
புலப்பிரனே பொய் கொடியாய்ஏலேலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்: பொய்யாது பொய்யாது ஏலேலம்
பூமலரும் பொய்யாது ஏலேலம்
ஒருவர்: நாவிலிருந்து பொய்த்தாலும் ஏலேலம்
நாயகியே கண்பாரம்மா ஏலேலம்
மற்றவர்: கண்பாரு வீரசக்தி ஏலேலம்
காலுதலை நோகாது ஏலேலம்

*****

ஒருவர்: ஏலலை ஏலோ ஏலோ தண்டு ஏலே ஏலோ
ஓவலையா ஏலோ ஓவலையா ஏலே ஏலோ

மற்றவர்: வாழை நல்ல ஏலோ பழமேயத்தா ஏலே ஏலோ
வலது கையில் ஏலோ சர்க்கரையே ஏலே ஏலோ

ஒருவர்: ஈச்சம் ஏலோ பழமேயத்தா ஏலே ஏலோ
இனி மறக்க ஏலோ கூடுதில்லை ஏலே ஏலோ

மற்றவர்: வண்ண நல்ல ஏலோ கரும்பெயத்தா ஏலே ஏலோ
வாகரும்பே ஏலோ தொழிதனம் ஏலே ஏலோ

ஒருவர்: தோளுருக தோடசைய ஏலே ஏலோ
தோழியிட ஏலோ மார்பசைய ஏலே ஏலோ

மற்றவர்: மாரழகு ஏலோ தண்ணியில ஏலே ஏலோ
மண்ணி மண்ணி ஏலோ போறவளே ஏலே ஏலோ

ஒருவர்: மானும் ஏலோ களையுமங்கு ஏலே ஏலோ
மருகி நன்கு ஏலோ விளையாடலில் ஏலே ஏலோ

மற்றவர்: ஆடிடும் ஏலோ மயிலுமிங்கு ஏலே ஏலோ
அசைந்தாடும் ஏலோ பொற்சிலையே ஏலே ஏலோ

ஒருவர்: சிலைபோல ஏலோ ஒர்நடையா ஏலே ஏலோ
சித்திரம் போல ஏலோ தானடையாம் ஏலே ஏலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்: நடையாளல்ல ஏலோ நடக்கிறோமே ஏலே ஏலோ
நயினார் ஏலோ கோயிலுக்கு ஏலே ஏலோ

மற்றவர்: கொண்டு வந்து ஏலோ தாரேனடி ஏலே ஏலோ
கோமளமே ஏலோ நானுனக்கு ஏலே ஏலோ

*****

## 6.6 ஏனையவை

ஒருவர் : மற்றவர்
சின்ன சின்ன ஏலேலோ வேத்திலயாம் ஏலேலோ
சின்னத்தங்கம் ஏலேலோ நித்திரையாம் ஏலேலோ
நித்திரைக்கோ ஏலேலோ நீயழுதாய் ஏலேலோ
சித்திரைப்பூ ஏலேலோ தொட்டிலிலே ஏலேலோ
தொட்டில் ஏலேலோ பணிந்தாட ஏலேலோ
தோழிமார் ஏலேலோ ஆராட்ட ஏலேலோ
ஆராட்டும் ஏலேலோ பாராட்டும் ஏலேலோ
ஆண்டவனே ஏலேலோ நீ தருவாய் ஏலேலோ

*****

கரவல ஏலேலோ பொழப்பும் வேண்டாம் ஏலேலோ
காசி ஏலேலோ பொழப்பும் வேண்டாம் ஏலேலோ
கரவல ஏலேலோ பொழப்பும் ஒரு ஏலேலோ
கற்ற ஒரு ஏலேலோ வித்தையம்மா ஏலேலோ
கரவலய ஏலேலோ காட்டினவன் ஏலேலோ
கண்கெட்டு ஏலேலோ போயிடுவான் ஏலேலோ
நீர்பாட்ட ஏலேலோ காட்டினவன் ஏலேலோ
நெஞ்சடச்சு ஏலேலோ செத்திருப்பான் ஏலேலோ
சூடு ஏலேலோ பொறுக்குதில்ல ஏலேலோ
சுடு மணலும் ஏலேலோ ஆறுதில்ல ஏலேலோ

*****

காதல் நல்ல ஏலேலோ மணவாளா ஏலேலோ
வாழ நல்ல ஏலேலோ குருத்தது போல ஏலேலோ
வாடுறனே ஏலேலோ பெண்கிளியே ஏலேலோ
கிளி வளத்தான் ஏலேலோ மொழி பேச ஏலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளியும் மொழி ஏலேலோ பேசுதில்ல ஏலேலோ
அணில் வளத்தேன் ஏலேலோ மொழி பேச ஏலேலோ
அணிலும் மொழி ஏலேலோ பேசுதில்ல ஏலேலோ
உம்மயின்றி ஏலேலோ வேறெனக்கு ஏலேலோ
உத்ததுண ஏலேலோ இல்லையம்மா ஏலேலோ
கொஞ்ச நல்ல ஏலேலோ முகம் தருவேன் ஏலேலோ
குழந்த வந்தா ஏலேலோ என்ன செய்வேன் ஏலேலோ
புடிக்க நல்ல ஏலேலோ முல தருவேன் ஏலேலோ
புள்ள வந்தா ஏலேலோ என்ன செய்வன் ஏலேலோ
கண்ணான ஏலேலோ கண்ணாளா ஏலேலோ

*****

மாரியம்மன் என் தாயே - அம்மா
மனமிரக்க உள்ளவளே

முத்துமாரி தாயாரே - அம்மா
முகத்திரக்கம் பாருமடி

மாரியட வாசலிலே - ஏலோ
மடியேந்தி நிண்டனம்மா

மாரி எறங்கி அம்மா
மனமெரங்க வேணுமடி

மாரியம்மா என் தாயே
மக்களையே காக்க வந்தாய்
மாரியிட பேரைச் சொன்னா
மனமும் எளகி விடும்

கல்லோ தான் ஒன் மனசு
கரையலையோ எள்ளளவும்
இரும்போதான் ஒன் மனசு
எளகலையோ எள்ளளவும்

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கு இரங்கு ஆண்டவரே
ஏழை உந்தன் அடியவனுக்கு
ஏழை முகம் பார்த்து
ஏழைக்கு இரங்குமம்மா

தாயே இரங்குமம்மா
சமுத்திரா தேவியரே
தேவி மகமாயி
தேசமெல்லாம் ஆளவந்தான்

செட்டை ஒடுக்கி சிறகு ஒடிக்கி
வா மீனே.....!
மீனா மிதந்து வர
வெள்ளம் போல் ஓடிவர
காவல் பயணமையா
கடல்கா வீரபத்திரா
வீராதி வீரரெல்லோ
வீரத்தை காட்டுமையா

பேரான பெரிய பத்தை
புலிக் கரைச்சான் தாண்டி வந்து
வானமா வனம் கடந்து
வாராரோ மாயவரும்
காளிகா தேவியரே
கண்பார்வை பெற்றவளே
பெற்றார் ஒருத்தியம்மா
பெயருமிட்டாள் தெய்வகன்னி
காற்றே கடும் காற்று
கப்பலோ சீர் கப்பல்
கப்பல் உடையவளே
கண்கலக்கம் தீர்த்தவளே

மண்டாடி வளைத்த வலை
சொன்றாலும் குறுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையை வளைத்துப் போட்டு
வட்டலாட்டம் போடுறாண்டா
வாங்கியது பத்து ரூபா
வட்டி முதல் ஏறுதடா
ஏறு பொழுது ஆகுதடா
சோறு வர தாமதமடா

முக்காடு போட்ட பெண்ணே
மூனு பணம் கேட்டவளே
நாக்கு சிவந்த பெண்ணே - நான்
தாண்டி உன் கணவன்

காலருவான் தேடிது கடலோடு
போவுதடா ராக்கப்பா
அடியருவான் தேடிது ஆத்தோடு
போவுதடா ராக்கப்பா

ஐவரைக் காத்தது போல்
அடியவரையும் காருமம்மா
பாண்டவர்களைக் காத்தது போல்
பாலகரையும் காருமம்மா
என்றும்
சூரியனவரே ஆண்டவனே
வாருமையா
மாரிமுகமாய்
மனமிறங்கி தாருமம்மா

கணவனை இழந்த பஞ்சம்
கைக் குழந்தை ஆனேனம்மா
பிள்ளையை இழந்த பஞ்சம்
பெரும் பஞ்சம் மானேனம்மா
உடப்பங்கரைதனிலே
உழைத்து உழைத்து வாழ்ந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சாண் வயிற்றுக்காக
உழைத்து மாளுகின்றேன்
நெருப்பினிலே பெண் பிறந்தாள்
நீல வர்ணம் தங்கையரே
அனலிலே பெண் பிறந்தாள்
அருங்கிளியே துரவதம்மா
பத்தினியாள் பெண் பிறக்க
பாலர் மழை பெய்யுதம்மா
உத்தமியாள் பெண் பிறக்க
உத்திர மழை பெய்யுதம்மா
சென்றுருண்டை பிறியவளே
செல்வி குந்தி மருமகளே
கண்டா வள மெலிந்த
காளையுட தேவியரே
ஐவரும் உண்ணாலே
அரசனாவதும் உன்னாலே

ஐவரை காத்தது போல் தாயே
வண்ணமகளே திரௌபதை நாயகமே
அனைவரையும் காருமம்மா
பஞ்சவரைக் காத்தது போல் தாயே
வண்ணமகளே திரௌபதை நாயகமே
பாலகர்களையும் காருமம்மா

ஏடு தவறாமல் எழுந்த குரல் கம்மாமல்
நாவு தவறாமல் நடந்ததம்மா உன் கதையே
குரலில் குடியிருந்து கொஞ்சுமம்மா பெற்றவரே
திருவிளக்கு மீதிருந்து திரு நட்டம் ஆடுமம்மா
பூவிளக்கு மீதிருந்து போருதுமம்மத பாரதத்தை
கைவிளக்கு மீதிருந்து கண்பாரும் வீரசக்தி
காக்கக் கடனுனக்கு கண்ணனிட தங்கையரே
பார்க்கக் கடனுனக்கு பார்த்தனிட தேவியரே
கேளம்மா உன் தாயே கிளியேந்தும் கையாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடைதனில் செந்நெல்லு கொட்டலிலே அம்மே
கொம்பனையே எம்மனைக்கு கொண்டு நானடப்பேன்
எட்டொரு நாளாச்சுதடி யிகுதேருவே வந்து
என் கணவன் என்னைத் தேடி இங்கு வருவாண்டி
பத்தொரு நாளாச்சுதடி வீட்டை விட்டு வந்து
பத்தாவு மெனைத்தேடி வருவாரடி பெண்ணே

*****

மல்லிகை சூடி மணத்த என் கூந்தல்
மண் மேல் புரலுதே தெய்வமே
கண்ணாளர் தொட்டு களைத்ததன் கூந்தல்
கடையன் தொடலாமோ தெய்வமே
சம்பங்கி எண்ணெய் தடவிய என் கூந்தல்
தரை மேல் புரளுதே தெய்வமே
சீப்பிட்டு வாரி திரளுமென் கூந்தல்
தெருவில் புரளுதே தெய்வமே
ஐயையோ பாவி தெய்வமே இந்த
அநியாயம் தானுண்டோ தெய்வமே

**கரைவலை**

**கடகயிற்றிலிருந்துதலவலைவரைபடிக்கப்படுவது.**

ஏலாடி.... ஏலந்தண்டு...ஓவேலம்மா...ஓவேலம்மா...

ஆதி நல்லவைரவனே ஆண்டவனே வாருமையா
ஆண்டவனே உன்னை நம்பி ஆழிகடல் வலைவளைச்சோம்
ஆழி திரும்புமம்மா அலைகடலும் மீன் திரும்ப
காளியம்மா என் தாயே கண்பாரும் பெற்றவளே
மாரியம்மா என் தாயேமன மிரக்கம் உள்ளவளே
காளியிட பேரைச் சொன்னா கஸ்டமெல்லாம் தீருமம்மா
தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பாய் காளியம்மா
கங்கைக் கரையோரம் மக்கள் படும்பாடு
மக்களைப் பெற்றவளே மகராசி வாருமம்மா
மக்கள் படும்பாடு மாதாவே கேட்களையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைபடும் பாடு பெத்தவளே கேட்களையோ
பெத்த மனம் பித்து மம்மாபிள்ளை மனம் கல்லாமோடி
கல்லான உங்கள் மனம் கரையலையோ எள்ளளவும்
எல்லளவு உள்ளமம்மா கடலளவு வெள்ளமடி
காக்க வேணும் காளியரே கண்ணூரு பார்க்காமல்
மாதா துணையிருக்க மக்கள் பயம் ஏனம்மா
தாயார் தலை பிடிக்க தகப்பன் கழுத்தறுக்க
கண்ணே கணியமுதே கண்மணியே நித்திரையோ
நித்திரையோ பாலகா நீ சித்திரைப்பூ தொட்டிலிலே
தொட்டில் பணிந்தாட தோழிமார் ஆராட்ட
ஆராட்டும் பாராட்டும் சிரிப்பும் விளையாட்டும்
விளையாடி வீட்ட வந்து வெண்ணைக்கு நிண்டழுதா
அழுதா முளைதருவேன் அந்திபட்டாபால் தருவேன்
பாலும் அடுப்பிலையோ பாலகனும் தொட்டிலிலே
பாலும் தான் நான் தருவேன் பாலகனே கண்ணுறங்கு

வாராளே சோறு கொண்டு வாய் காஞ்ச நேர மெல்லாம்
சோத்தடுப்பு கத்தரிக்கா பார்தெடுக்க நேரமில்ல
நேரங்கண்ட நேரத்தில ஊரவிட்டு தூரத்தில
ஊரவிட்டு போனீங்கண்டா நான் யாரைவிட்டு கூப்பிடுவேன்
கூப்பிட்டுகேள்மகளே யார் மேலகுற்றமென்று
குற்றமில்லா என் மகனை கொள்வதற்கு நீதியுண்டோ
நீதியும் மாதாவேநீகேளும் தாயாரே
தாயில்லா வாட்டமடி தகப்பனில்லா தள்ளாட்டம்
தள்ளாடி தள்ளாடி வந்தாரே மாயவரு
மாயா முகுந்தா நீ வரவேணும் இந்தமுகம்
எந்தமுகம் போனாலும் இந்த முகம் வாருமம்மா
வருவேன் சடுதியிலே வந்து நிற்பேன் சந்தியிலே
சந்தியில மாரடிக்க சம்மதமோ பெண்ணுனக்கு
பெண்ணே உனது மனம் பொறுக்களையோ எவ்வளவு
பொல்லாத காலமம்மா சொல்லாம வந்ததிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன சொல்லு தவணையாச்சி தோழன் வார நாளுமாச்சி
நாளான நாளயில நல்ல வெள்ளிக்கிழமையில
வெள்ளிக்கிழமை தோழா விடிஞ்சா சனிக்கிழமை
சனிக்கிழமை முழுகு முறைதப்பாதடி தாய்குறல
அம்மாதப்பிப் பிழைத்தேன் என்றால் தாய் பேரைச் சொல்லிடுவேன்
அம்மா ஓடிப்பிழைத்தேன் என்றால் உன்பேரைச் சொல்லிடுவேன்.
தோளழகு வாழையம்மா தொடையழகு கற்றாளை
கற்றாளை நாற்றமையாக முகெல்லாம் பூ நாற்றம்
கற்றாளை நாற்றம் போக அத்தர் மேலேபூசுமம்மா
அத்தர் மனக்குதடா அதிமயக்கம் கொள்ளுதடா
கொள்ள வெள்ளிப் பணம் கொடம் நிறைந்த தங்கப்பவுன்
தங்கந்தான் மேனியென்று தடவி வளர்த்தேனடா
பொன்னான மேனியென்று போர்த்தி வளர்த்தேனடா
போகவிடை கொடம்மா போர் வாளாகை கொடம்மா
கையில் தரகாசு மில்லகடன் தருவார் யாருமில்ல
யாரோ ஒருவன் மகன் வாவென்று அழைக்கிறானே
வார போற நேரமெல்லாம் வம்புச் சண்டைகேட்கிறானே
சண்டை வரப்போகுதப்பா சண்டாளாகையை விடு
கையை விடு காப்ப விடு கைகாப்ப சோற விடு
சோத்தால வாடயிலே சொல்லால வாடுறேனே
கஞ்சால வாடயிலேஅம்மா கவலையினால் வாடுறேனே
காவேலா வாருமையா கடவுளடா ஐயாவே
ஐயா பெரியவரே அதிகம் படித்தவரே
அதிகம் படித்தேன் நானே அடக்குடா ஒந்தன் வாயை
வாயால சொல்லலாமோ வடிவேலன் தன்கொடுமை
கொடுமை நமக்கு வந்து கொலைக்குள்ள ஆக்குதப்பா
ஆகாசகுன மென்பேன் அந்நியரை பஞ்சமென்பேன்
பஞ்சமா பாதையில என் நெஞ்செல்லாம் நோகுதையா
நெஞ்சில் நினைந்தொரு நினைவெல்லாம் உன்மேல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரில் நினைந்ததொருமன தெல்லாம் உன்மேல
உன்னைவிட வேறெனக்கு உற்ற துணையாருமில்ல

**தலைலையிலிருந்து மடி வரைபடிக்கப்படுவது**

ஏலம்மா ஏலேலோ ஏலதண்டு
ஓவேலம்மா ஏலேலோ ஓவேலம்மா
ஒருவர்: ஆதி நல்ல ஏலேலோ வைரவனே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆண்டவனே ஏலேலோ வாருமையா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆண்டவனே ஏலேலோ உன்னை நம்பி
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆழி கடல் ஏலேலோ வலை வளைச்சோம்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆழி ஏலேலோ திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: அலைகடலும் ஏலேலோமீன் திரும்ப
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: புள்ளும் ஏலேலோ திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: புறங்கடலும் ஏலேலோ மீன் திரும்ப
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: மீனவனே ஏலேலோ ராசாவே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: மிக்கதுணை ஏலேலோ மந்திரியே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: மந்திரியோ ஏலேலோ என் தலைவன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: மாண்டானோ ஏலேலோ கானகத்தில்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: காணல் ஏலேலோ உறைக்குதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கையால் ஏலேலோ குடை பிடிச்சா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: குடை பிடித்து ஏலேலோ நான் வருவேன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: குடை மகனே ஏலேலோ சீதாளா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சீதைபோறா ஏலேலோ தோகை வனம்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சிம்மாசனம் ஏலேலோ ஆளுவென்று
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சீதை ஏலேலோ வனவாசம்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சென்றதுமே ஏலேலோ எக்காலம்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: எல்லை ஏலேலோ கடந்தவனே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: எம்பெருமான் ஏலேலோ வாறுமையா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஐயா ஏலேலோ பெரியவரே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆறுமுக ஏலேலோ வேலவரே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேலவனார் ஏலேலோ கோயிலிலே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேலோ ஏலேலோ அடையாளம்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: அடையாள ஏலேலோ காரியரே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: அம்மமுத்து ஏலேலோ மாரியரே
ஏனையவர்கள்: ஏலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: மாரியென்றால் ஏலேலோ மழை பொழியும்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: தேவியென்றால் ஏலேலோ தேன் சொரியும்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஆத்தாடி ஏலேலோ ஒன்புருசன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கூத்தாடி ஏலேலோ வாரானம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஒன்புருசன் ஏலேலோ வண்டிக்காரன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: எட்டுமணி ஏலேலோ வேலைக்காரன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேளை இது ஏலேலோவேலையம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: விளையாட்டு ஏலேலோ வேலையம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேர்த்து ஏலேலோ களைக்கிறேனே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேலையெப்ப ஏலேலோ விடுவானென்று
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: விடுவிடு ஏலேலோ கையை விடு
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வேசையிடம் ஏலேலோகாசைவாங்கு
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வாங்கி ஏலேலோ முடிமகனே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: வரவிட்டு ஏலேலோ பார் மகனே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கண்ணான ஏலேலோ கண்மணியே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கண்ணிலே ஏலேலோ வருத்தமென்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: உன்னைக் கண்ட ஏலேலோ நாள் முதலா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கண்ணுறக்கம் ஏலேலோ இல்லையம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: நான் இருந்து ஏலேலோ வாடுகிறேன்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: நாக மர ஏலேலோ சோலையிலே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: பூ இருந்து ஏலேலோ வாடுதம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: புன்னை மர ஏலேலோ சோலையிலே
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: கோணள ஏலேலோ அறிதென்று
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சொல்லுதையா ஏலேலோ பள்ளியொன்று
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஒன்றோ ஏலேலோ இரண்டோஅம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: ஒருகடனா ஏலேலோ சொல்லியழ
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சொல்லி ஏலேலோ அழுதாலும்
ஏனையவர்கள்: ஏலேலோ
ஒருவர்: சோகரியம் ஏலேலோ தீராதம்மா
ஏனையவர்கள்: ஏலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாளைவலைஅம்பாப்பாடல்

தலவலையிலிருந்து மடிவரும்வரைபடிக்கப்படுவது.

ஒருவர்: ஏலோதண்டு ஏலேலோ ஏலோதண்டு
மற்றவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஏலோதண்டு
மற்றவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஓவேலம்மா ஏலேலோ ஓவேலம்மா
மற்றவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஓவேலம்மா
மற்றவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஆதிநல்ல ஏலேலோ வைரவனே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: வைரவனே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஆண்டவனே ஏலேலோ வாருமையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: வாருமையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஆண்டவரே ஏலேலோ உன்னை நம்பி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: உன்னைநம்பி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஆழிகடல்ஏலேலோவலைவளைச்சோம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: வலைவளைச்சோம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ

ஒருவர்: ஆழி நல்ல ஏலேலோ திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: அலைகடலும் ஏலேலோ மீன் திரும்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மீன் திரும்ப
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: புள்ளு நல்ல ஏலேலோ திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: திரும்பவம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: புறங்கடலும் ஏலேலோமீன் திரும்ப
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மீன் திரும்ப
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மீனவனே ஏலேலோ ராசாவே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ராசாவே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மிக்க துணை ஏலேலோ மந்திரியே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மந்திரியே
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ராசாவே ஏலேலோ கண்டீங்களோ
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: கண்டீங்களோ
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ராஜ்யங்கள் ஏலேலோ ஆண்டீங்களோ
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ஆண்டீங்களோ
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ராசாவேஏலேலோ உன்னை நம்பி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: உன்னைநம்பி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ரோசாப்பூ ஏலேலோ காத்திருக்கு
ஏனையவர்கள்: ஏலலஏலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: காத்திருக்கு
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: ராசா வரும் ஏலேலோ நேரமெல்லாம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: நேரமெல்லாம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ

ஒருவர்: ரோசாப்பூ ஏலேலோ வாடுதையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: வாடுதையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: எப்ப நல்ல ஏலேலோ வருவாரடி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: வருவாரடி
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: என் ஆசை ஏலேலோ தீர்ப்பதற்கு
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: தீர்ப்பதற்கு
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: தீராத ஏலேலோ நோயைத் தந்து
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: நோயைத் தந்து
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: திண்ணயில ஏலேலோ தங்க வைச்சான்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: தங்க வைச்சான்
ஏனையவர்கள்: ஏலல ஏலோ
ஒருவர்: அந்தியிலும் ஏலேலோ சந்தியிலும்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: சந்தியிலும்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: அழகான ஏலேலோ பொம்பிளையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்: பொம்பிளையா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: பொம்பிளையே ஏலேலோ மெச்சிப்பார்த்தேன்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: மெச்சிப் பார்த்தேன்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: பொலப்பு ஒன்னும் ஏலேலோ கிட்டுதில்ல
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: கிட்டுதில்ல
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: கெட்வனே ஏலேலோ எட்டிநட
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: எட்டிநட
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: கெட்டதடா ஏலேலோ உன்தேசம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: உன்தேசம்
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: தேசமெல்லாம் ஏலேலோ இழந்தேனம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: இழந்தேனம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: தெருவிழந்தேன் ஏலேலோ உன்னால
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: உன்னால
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: நாடெல்லாம் ஏலேலோஇழந்தேனம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: இழந்தேனம்மா
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: நகர் இழந்தேன் ஏலேலோ உன்னால
ஏனையவர்கள்: ஏலலஏலோ
ஒருவர்: உனனால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | ஊரெல்லாம் ஏலேலோ இழந்தேனம்மா |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | இழந்தேனம்மா |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | உறவிழந்தேன்ஏலேலோஉன்னால |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | உனனால |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | உன்னைவிடஏலேலோவேறெனக்கு |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | வேறெனக்கு |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | உற்றதுணைஏலேலோயாருமில்ல |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | யாருமில்ல |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | யாரோடுஏலேலோசண்டைசெய்து |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | சண்டைசெய்து |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | ஆருவனோஏலேலோதேறுவனோ |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | தேறுவனோ |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | ஊரவிட்டுஏலேலோபோனீங்கண்டா |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | போனீங்கண்டா |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | யாரைவிட்டுஏலேலோ கூப்பிடுவேன் |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |
| ஒருவர்: | கூப்பிடுவேன் |
| ஏனையவர்கள்: | ஏலலஏலோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தாலாட்டுப் பாடல்கள்

## 7.1 உடப்பூர் தாலாட்டு – 1

ஆராரோ ஆரிவரோ ...ஆராரோ ஆரிவரோ
என்கண்ணே நீ கண்ணுறங்கு ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய் கண்ணே நீ கண்ணுறங்கு
அத்தை அடித்தாளோ அல்லிப்பூ தண்டால
அண்ணன் அடித்தானோ அணைத்தெடுக்கும் கையாலே ...
மாமன் அடித்தானோ மகிழ்ந்தெடுக்கும் கையாலே ...
பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே ...
பால்குடிக்க சங்குகளாம் பழம் கொடுக்க குட்டனாராம்...
நெய் குடிக்க கிண்ணிகளாம் நிலம் பார்க்கக் கண்ணாடி ...
கண்ணுறக்கம் பொன்னாலே காற்சிலம்பு முத்தாலே ...
முத்து குத்தி சோறாக்கி முலைப்பாலால் கறிசமைத்து ..
பெற்றால் பிராமணத்தி பெருமிட்டாள் தெய்வகண்ணி ..
பட்டாலே தொட்டிலாம் பவள நல்லோர் பூமலராம்...
பூமாலை கேட்டல்லோ பொருமி நீ அழுதியோ
பாலும் அடுப்பிலே பாலகனும் தொட்டிலிலே
கூழும் அடுப்பினிலே குழந்தை பசி தீர்த்திடவே
கண்ணா நீ கண்ணுறங்கு கண்மணியே மயிலுறங்கு
நித்திரைக்கோ நீயழுதாய் சித்திரைப்பூ தொட்டிலிலே
தொட்டில் பொன்னாலே தொடுகயிறோ முத்தாலே
முத்தோ உடன் முன்னே மோதிரகை ஜோதிமுன்னே
நீ பட்டோ பவளமோ மங்கை பெற்ற பூச்சரமோ
மானே மரகதமே மகிழ்ந்தாடும் பாலகனே
என் பிள்ளை விளையாட புள்ளிமான் கொண்டுவாறேன்
என் மகிந்தன் விளையாட மான் வேட்டை ஆடிவாறேன்
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ

*****

## 7.2 உடப்பூர் தாலாட்டு – 2

ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ
என் கண்ணே நீ கண்ணுறங்கு ஆராரோ ஆரிவரோ
மாரியம்மா தாயாரே மனமிறக்கம் கொண்டவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

மனமிரக்கம் கொண்டு இந்த மைந்தனை காரும் அம்மா
மாரி வந்தா மழை பொழியும் மக்களெல்லாம் காக்க வந்தாய்
தேவி வந்தா தேன் சொரியும் தேசம் எல்லாம் காக்க வந்தாய்.
மாரித்தாய் வல்லவியே மகமாயி காரும் அம்மா
வேணும் என்றோ காரும் அம்மா வேப்பம் சிலையாளே
வேப்பிலை காரியம்மா வினை தீர்ப்பாய் மாரிமுத்தே
வேப்பிலை உள்ளிருக்கும் உன் வித்தைதனை யார் அறிவார்
பச்சிலை உள்ளிருக்கும் உன் பக்திதனை யார் அறிவார்
தஞ்சம் என்று வந்தோரை தக்காப்பாய் மாரியம்மா
அபயம் என்று வந்தோரை ஆதரிப்பாய் மாரியம்மா
மாரியம்மா வாசலிலே மடி ஏந்தி நின்றேனம்மா
மடிப்பிச்சை தான் தந்து மனக்கவலை தீர்த்தாயம்மா
காளி அம்மா வாசலிலே கையேந்தி நின்றேனம்மா
கைப்பிச்சை தான் தந்து கவலை எல்லாம் தீர்த்தாய் அம்மா
பாலன் வருந்துவது உன் பற்சிலைக்குகேட்கலையோ
குழந்தை வருந்துவது உன் கோவிலுக்கு கேட்கலையோ
மைந்தன் வருந்துவது உன் மாளிகைக்கு கேட்கலையோ
கோயில் அடிமையம்மா குலதெய்வம் நீயம்மா
ஆராரோ ஆரிவரோ ஆராரோ ஆரிவரோ

## 7.3 உடப்பூர் தாலாட்டு – 3

ஆராரோ ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆராரோ ஆரிரரோ - ஆராரோ

உடப்பில் பிறந்த கண்ணே
உயர்வு செல்வம் தந்த மகன்
ஊரான ஊர் பேரை
உயர்வடையச் செய்திடுவான்

கண்ணே நவமணியே - என்
கற்பகமே கண் உறங்கு
பிள்ளையில்லா வாசலிலே - என்
கண்ணே நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கலி தீர்க்கவந்தா!
மைந்தனில்லா வாசலிலே - என்
மன்னன்கலி தீர்க்க வந்தான்
என் தொட்டில் பணிந்தாட - என்
தோகைமயில் சூழ்ந்தாட
பால்குடிக்க சங்குண்டு - என்
நல்லகண்ணே பழம்படிக்க
குட்டானுண்டு.
நெய் குடிக்க சங்குண்டு - உன்
முகம் பார்க்க கண்ணாடியுண்டு

முத்தான தொட்டிலிலே
நித்திரைக்கு போமகனே - நான்
தவமாத்தவமிருந்து - என்
நல்ல கண்ணே,
தனஞ்சியத்தைப் பெற்றனடா - என்
நல்லகண்ணே
வரமாவரமிருந்து
நான் வையகத்தே பெற்றனப்பா!
என் கண்ணே கண்மணியே - என்

கற்பகமே கண்ணுறங்கு
நான் என்ன தவம் பண்ணியப்பா
ஏந்திழையைப் பெற்றனடா!
கட்டுகரும்பே - என்
கலிதீர்க்கும் - செங்கரும்பே
பிள்ளை இல்லையோன்றிருந்து
தில்லைவனம் போய் இருந்தேன்
மலைமாசி போலையல்லோ - என்
வயிற்றில் நீ தரித்தாய்
கொடிமாசி போலையல்லோ
என் கண்ணே நவமணி - என்
வயிற்றினிலே நீ பிறந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை நிறைய முத்தையள்ளி
காணிக்கை போடனப்பா!
நான் நேர்ந்து தவமறிந்து
என் கண்ணே நவமணியே!
நெய்யா விளக்கெரித்து - என்
நல்ல கண்ணைப் பெற்றனடா
நான் வரமா வரமிருந்து
வையகத்தில் பெற்றனடா!

கந்தன் உதவி உண்டு நமக்கு
கதிரேசன் காவல் உண்டு
நித்திரைக்கு போமகனே!
நித்திரைக்கு போமகனே!!
வெண்ணிலா தொட்டிலிலே
என் கண்ணே நவமணியே
நீ பொய் உறக்கம் கொள்ளுகிறா!
தங்கத்தினால் தொட்டினிலே
என் கண்ணே நவமணியே
என் கற்பகமே கண்ணுறங்காய்!

ஆச்சி அடித்தாளோ
என் கண்ணாளா
அல்லிக்கொடி நொருங்கிடும்
என் கண்ணே நவமணியே!
பேத்தியவள் அடித்தாளோ
பொப்பங் கோடி நொருங்கிடும்
நித்திரைக்கு போமகனே
என் கண்ணாளா! சீராழா!
நித்திரைக்கு போமகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. ஒப்பாரிப் பாடல்கள்

## 8.1 உடப்பூர் ஒப்பாரி – 1

என்ன பெத்து வளர்த்த அம்மா அப்பா
நாங்கள் இருந்து மயங்குகின்றோம்
நாங்கள் நிண்டு தவிக்கிறமே
நாங்கள் பாவத்தை செஞ்சமாடா
என்ன பெத்த அம்மா அப்பா...

நாங்கள் தேரோடு நிண்டோம்மா!
இப்போ தெருவிலே அலையுறமே
நாங்கள் நிண்டு மயங்கிறமே
நாங்கள் யாருமற்ற பாவியப்பா
நாங்கள் தேடுவோர் அற்ற பணம்
நாங்கள் அண்ணனிழந்த பாவியம்மா
நாங்கள் படும் தாபந்தலையே மிஞ்சமொன்று

நாங்கள் யாருமற்ற பாவியம்மா
நாங்கள் அம்பலத்தில் நிற்கிறமே!
எம்பெருமான் எங்களுக்கு
பாவத்தை செய்தானோ

நாங்கள் தேடுவோர் அற்றபணம்
நாங்கள் எண்ணி விசாலமிட்டு
நாங்கள் ஏங்கி போய் நிற்கிறமே!

எங்களுக்கு அண்ட மரமில்ல
எங்களுக்கு பிடிக்க ஒரு கொப்புமில்ல
நாங்கள் நம்பி இருந்தனம்மா
எங்களை நட்டாட்டில் விட்டாயம்மா!
நாங்கள் யாரத்தான் சனங்களேன்போம்
நாங்கள் அந்நியரை தஞ்சமென்போம்
என்னை வளர்த்த அம்மா அப்பா
நாங்கள் நிண்டு தவிக்கிறம்மா
நிலமரம் போல் வாடுகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னாரும் எண்ணியம்மா
எம் பொறப்பே என்துணையே!
நாங்கள் நம்பி இருந்தனம்மா
எங்களை நட்டாட்டில் விட்டாயம்மா

எங்கள் முத்துபோல் கண்ணாளா?
உங்களை மொகமெல்லாம் சோரவிட்டா
எங்கள் பவளம் போல் தண்ணீரே
என்னப்பா என் துணையே
நாங்கள் பக்கமெல்லாம் சோரவிட்டா
நான் வளர்த்த கண்ணாளா! சீராழா!
நாங்கள் இருந்து மசங்கிரமோ
உன்னைப்போல் வீராதி வீரனில்லை
உன்னைப் போல் வில்பிடிக்க மன்னனில்லை!

தங்கக் கொடமெடுப்பான்
தரையில் போடுடைப்பான்
எங்களுக்கு பொன்னு கொட மெடுப்பான்
நான் வளர்த்த கண்ணாளா! சீராழா!
நான் நம்பி இருந்தனடா
எங்களை நட்டாட்டில் விட்டாயடா!
எல்லாரும் எண்ணியடா
நாங்கள் இருந்து மயங்குகிறோம்
செப்பு கடன் தொடுவா!
நான் வளர்த்த கண்ணாளா சீராழா
எங்களுக்கு செப்பு செலமதிப்பான்

எங்களுக்கு பாடைக்கு ஏத்தகம்பு
பாத்தொடி கொண்டு வருவான்
நேருக்கு ஒத்த கம்பு
என்னைப் பெத்த அம்மாப்பா
என் தொணையே!
நான் இருந்து மயங்குறேனே
யாருமத்த பாவியடா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. கோலாட்ட பாடல்கள்

## 9.1 ஒற்றை மல்லி – கோலாட்டப்பா

**பல்லவி**

தாயே தயவு பாரம் மா - காளிகா தேவி
தயவுவைத் தெனையா எம்மா - என்னம்மா (தாயே)

**ஓட்டம்**

தாயே தயவு பாரா தஞ்சமே யுன் பாதம்
நெஞ்சில் நிறைந்தவருக்கு நீ யருள் செய்ய வேண்டும் (தாயே)

**பாட்டு**

வெண்ணீறு பூசியே வேப்பிலை கை கொண்டு
வீதியில் வந்தவளே - என்னம்மா
கண்ணூறு படாமல் காக்குங் காளிகாதேவி
காரண சுந்தரியே

**ஓட்டம்**

பொன்னிறம் பொற்புவி எங்கும் நிறைந்திருக்கும்
பொருந்தும் மானிடர்கள் வருந்தும் துயரங்கண்டு
தன்னிறங் கொண்டு உடப்பங்கரைதனில் வந்து
சந்தோஷமாக அமைந்து கொலு விருந்த (தாயே)

**பாட்டு**

சிதம்பரராஜா ரோடு தில்லை நடம் புரிந்த
கதம்ப வாகன ரூபியே - என்னம்மா
அடம்பம் பனியமைந்த மகிடா சூரனைக் கொண்ட
அண்ட காளிகா தேவியே

**ஓட்டம்**

அண்ட காளிகா தேவி என்றும் மனமிரங்கி
ஏழைக் குடியைக் காத்து ரெட்சித் துடப்பங்கரை
பட்சம் வைத் தாள வந்த (தாயே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9.2 இரட்டை மல்லி – கோலாட்டப்பா

நன்னன்ன னா னா னா - நனா நன்ன -
நானன்ன னா னா னா
நாணன் னா னா னா - ந ன ன ன் ன
நானன்ன னா னா னா

பாட்டு

1. சீராறு ஐந்து கரத் - தேவன்
திருப் பாதம் தாழ் பணிந்தே
கூறாறு வேலுடையான் - பாத மலர்
கும்பிட் டக மகிழ் வோன் - (நன்)

2. நாரியர் பூக்களை யாம் - பூரணி
நாதன் தமைப் போற்றி
மாரியோங் காளியோடு - திரௌபதி
மாதவன் தாழ் துணையே (நன்)

3. ஈழ வழ நாட்டின் - குடபால்
இலங்கும் கட லருகே
சூழும் பல வளங்கள் - துலங்கிடும்
சுந்தரஞ் சேருடப்பு - (நன்)

4. உடப்பு நகர் வைபவம் - அடியேன்
உரைக்கு மொழியில் பிழை
கிடைப்பீற் பொறுத் தாள்வீர் - குழந்தை
சொல் கேண்மை மிகு பெரியோய் (நன்)

5. இந்தியா கீழ் தேசம் - ராமேஸ்வரம்
இருமேனி யாற்றங் கரை
சாந்த மலியும் அழையாங்குளமோடு
சாரரும் பல வூரே - (நன்)

6. ஆங்கு வசித்தவர்கள் - வறுமை
நோயால் மெலி வடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கு புகழிலங்கை - கடந்
துற்றார் பலவூரே. (நன்)

7. மன்னார் கற்பிட்டி - புத்தளம்
மருவும் குருவிக் குளம்
நன்னய மாய் வாழ்ந்து - வளஞ்செறி
நன்னகர் முந்தல் வந்தார். (நன்)

8. முந்த லென்று நகரை -அவர் பல
முயற்சியுடன் திருத்தி
சிந்தை மகிழ்வுடனே - கோயில்கள்
செப்பனிட்டார் கூறி செய்தார் (நன்)

9. அங்கிருந் தோரிற் சிலர் - கரையாகழி
யாகுங் கீரியங்கழி
தங்க வண்ணாத்தி குண்டு தன்னிற்சிலர்
தான் வசித்தார் மயிலே (நன்)

10. நாளும் பல கழிய - முந்தல்
நகரில் வசித்தோர்கள்
ஆளுங் கடற்றொழிற்காய் - கடற்கரை
யண்ணிக் கரைக்கண்டார் (நன்)

11. நன்னீரின் ஊற்றுக்களும் - முத்துமாரி
நாயகி யால யமும்
பொன்னிசை முப்பியற்று - வசதிகள்
பொலிவும் பல கண்டார் (நன்)

12. கண்டே யக மகிழ்ந்து - உடப்பங்
கரையூர் குடியேறி
கொண்டே பலமுயற்சி - செய்து
கோவில் களுண்டு பண்ணார் (நன்)

பொது நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மேனாட்டாரும் புகழ் - அவர்பல
மேன்மை பெற்றோர்கிடவே
தானாட்சி பெற்றோர்கள் - கம்மல் முதல்
தாங்கும் பூங்குள மீறாய் (நன்)

14. வஞ்சக மில்லாதோர் - கோயில் பணி
நெஞ்சிடை பூண்டவர்கள்
பஞ்சமு மில்லையவர் - என்னாளும்
தஞ்ச மென் றோரைக்காப்பார் (நன்)

15. பாரத மகா கதையை - மிக மிக
பக்தியுடன் கேட்போர்
பூரண மாய்தீயில் - நடமிடும்
புனிதராவர் மயிலே (நன்)

16. ஆண்டு பல கழிய - குடிஜனம்
அதிகரித்து விளங்க
வேண்டிய மந்திரத்தால் - பற்பல
விந்தை நிகழ்ந்ததுவே (நன்)

17. ஆயிரத் தொண்ணூற்றே உடமைவுறு
ஐம்பத்து மூன்றாண்டு
ஊழி நெருப்பெனவே வைசூரியைக்
கண்டதா லோட்டமுற்றார் (நன்)

18. ஊரை விட் டெல்லோரும் - பல திசை
யோடி மறைந்திருக்க
வீரசா முண்டியருள் - தன்னால் சிலர்
மீண்டும் குடிபுகுந்தார் (நன்)

19. அன்னை மாகாளி எம்மை - எல்லாம்
ஆதரிக்க காக்க
அண்ணார் ஒருவரின் மேல் - அக மகிழ்ந்
தருள் கொண்டெழுந்தாரே (நன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கண்டேயுடப்பூரார் - காளி என்னும்
காரண முண்மை எனில்
உண்டே பல புதுமை - அவற்றுள்ளே
ஒன்றை நீ காட்டும் என்றார் (நன்)

21. சுற்றிப் பணிந்தோர்க்கு சர்வலோக
தாயார் கடல் நீரை
ஊற்றி விளக்கேற்றி - வைத்தேயுங்கள்
உள்ளந்தேளிவு மென்றார் (நன்)

22. செப்பும் மொழிதவறா தவர்களும்
செய்யத் திரு திகனை
ஒப்பில்லாச் சோதி பெற்று - தீபமும்
ஓங்கி விளங்கியதே (நன்)

23. அற்புதங் கண்டேயவர் அம்மைக்கு
ஆலயந் தானியற்றி
சற்பூசை செய்தமையே என்னாலும்
தற்காக்க வேண்டுமென்று (நன்)

24. வேண்டுவார் வேண்டும் வரம் - மாகாளி
விளங்கிட வேயீந்து
தாண்டவ மாயிருந்தாள் - கும்பந்தளிர்
பூத்துக் காய்த்ததுவே (நன்)

25. கழுவேறு சேவலுமே - கூவிடும்
காட்சி பல காட்டி
தொழுவோர் இடர்நீங்கி - சுந்தரத்
தோகையும் வீற்றிருந்தார் (நன்)

26. மார்க்க நெறி யோங்க - உடப்பூர்
மங்கையர் கற்பிலங்க
ஊர்க்கூட்டத் தொற்றுமையும் - நீதி
யுரைஞ் சிறந்ததுவே (நன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. செல்வமும் கல்வியுமே - கலந்து
செழுங்கதிர் விட்டோங்க
நன்மனத் தோடவர்கள் - வளர்ந்துவரும்
நாளில் குறைவில்லை

28. நாளும் பல கழிய - ஆங்கார
நண்பன் திலகாட்ட
மூளும் பெராலுடப்பூர் - பிரிவுகள்
முன்னேறி வந்ததுவே (நன்)

29. கல்யாணச் சண்டைகளும் - தெருவில்
காட்சியாய் சண்டைகளும்
சலியாமல் கோவிலிலும் - சண்டைகளும்
தான் புரிந்தார் மயிலே (நன்)

30. ஆகாத செய்கைமிக - உடப்பில்
ஆணவங் கடந்தாட
வாகாயுடப்பூரின் - கீழ்பால்
வாய்ந்திடும் விந்தை கேள் (நன்)

31. ஆயிரத் தொளாயிரத் தொடேழாம்
ஆண்டாவணி மாதம்
மாயமுடன் சனிவர மதில் - எரி
றவாய் வட்டடந்ததுவே (நன்)

32. இப்படியாய் நிகழ்ந்தும் உடப்பில்
இறுமாப்புத வாது
மைப்படிந்த கண்ணார் தங்கள்
மகிழ்ன்றன றின மதியார் (நன்)

33. தந்தை தாய் எப்போதும் - தெய்வமென
சாற்று மொழிக்கெதிராய்
மைந்தரும் பெற்றோரைச் சற்றும்
மதியாதிருந்தனரே (நன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. மரியாதை என்னு முறை - அங்கு
மருந்துக்கும் இல்லையடி
பெரியார் தமை பழிக்கும் பேதையர்
தெருவில் நெருக்கமடி (நன்)

35. வயதில் முதிர் பெரியோர் - கூடி
வழக்கு மொழிகளெல்லாம்
மையல் கொண்ட மங்கையரை - பகடிமாய்
வாழ்த்துந் துதியாகும் (நன்)

36. நேர்ந்திடும் அக்கிரமம் - பல பல
நிகழ்ந் திடவுமங்கே
சேர்ந்திடு ஆயிரத் - தொளாயிரத்
தீசாற மாண்டதனில் (நன்)

37. மாசி பனிரெண்டில்- திங்கள்
நேரம் பகல் பொழுதில்
வீசும் சுடரோங் - உடப்பில்
வெந்தணல் பூத்ததுவே (நன்)

38. சொற்ப மின நீங்க - மற்றவை
சுடருக் கிரையாக
முற்ற யுடப்பூரார்- மீந்தமின
யுற்றே வசித்து வந்தார் (நன்)

39. இப்படியாய் நிகழ்ந்த - செய்கை
எமையாள் அரசறிந்து
முப்பத்தி ரெண்டியில் - வீதிகள்
முறை முறையாய் திறந்தார் (நன்)

40. தவறாது உடப்பூசை - சுகாதார
சங்கத்தினில் சேர்ந்து
நவமான நாகரீகம் - பல பல
நாட்டியம் செய்ததுவே (நன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. வளர்ந்த முடித்திலகல் - செக்கென்று
மயிர்க் கட்டடையாய் யுலவ
குளிர் கொண்டவர் போர்த்த - கூடாத
கொலைச் சரமிஃது (நன்)

42. கபடம் பல மாச்சு - உடப்பில்
கட்சி பல வாச்சு
சவரஞ் செய் நாவிதனும் - கட்சியாய்
தான் வசித்தான் மயிலோ (நன்)

43. வடநாட்டார் ரோதிடினும் - யாருக்கும்
வந்த விருந்தொவென
மேல் நாட்டில் செய்துவரும் - பொம்மைகள் போல்
தானாட்டுவார் தலையை (நன்)

44. உண்பாரிருப்பார்கள் - தெருவிறு
மோடித் திரிவார்கள்
பெண்பாலார் மெச்சுதற்கு - வீரமொழி
பேசிடப் பின்னடையார் (நன்)

45. நல்ல மொழியவர்க்கு அறிஞர்
சொல்லப் புகுந்தாலோ
எல்லாந் தெரியுமென்று - சொன்னவர் மேல்
இடியே றெனப் பாய்வார் (நன்)

46. போனதைத் தனினைத்தல் - சிறிதும்
புத்தியில்லாத செயல்
தானோத்த சோதரரே - இனியாம்
தழைக்கும் வழிபார்ப்போம் (நன்)

47. நாளொன்றில் சேர்ந்த பணம் - தலை முறை
யாகத் தழைத் தோங்கும்
சூழும் வினையகற்றி தேவர்களும்
சுபந்தருவார் நமக்கே (நன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. விளையாட்டுப் பாடல்கள்

## 10.1 பொரக்கிவா விளையாட்டு

பொரக்கிவாலக் குருவி
ஓராமல் வம்பெட்டான், சின்னக் கொளணி
ஈரிலங்க, இசைலங்க, வசயிலங்க
மோச்ச தச்சை பச்சை பவள
நங்கட்டி ராசா பிங்கட்டி போனார்
ஐஞ்சக் குத்திக்கோ பஞ்சயடைச்சிக்கோ
ஆறு சாரு அம்பட்டன் சாரு
ஏழுக்குருட்டு நாச்சி என்ன நாச்சி கப்பல் நாச்சி
எட்டாட, சுட்டாட, சுட்டியும் பவளக் கொண்டாட
காய ஒன்பது, மொயா மொக்குரு
பத்தரை, சுத்தரை பள்ளிக் கொளக்கன
உனக்கு விளையாட ஓலை
ஓலை ஓலை என்ன ஓலை, சாரை ஓலை
சமுத்திர ஓலை பள்ளிக்கு ஒளிச்சான் பனை ஓலை
பன்னிரெண்டை குறிக்கோ பவளக்குத்திக்கோ
நெருங்கவாரார் பட்டு
பட்டென்ற புள்ளை நினைச்சிப்பார்
நினைவில் வாராய் கடைப்பாக்கு
கடைஞ்ச முத்து கையடங்க
கையடக்க, காலடக்க, காப்புச் சுண்ட
நெஞ்சம் நெஞ்ச நெல்லிக்கா சுண்டோ
சுறுசுறுப்போ
சிறியவரே, பெரியவரே தவக்கொழிச்சான்
சூரா மாரா
ஒத்தக்கையோ, இரட்டைக்கையோ, இரண்டுமுலமோ
தாண்டக்கையோ தண்ணீர் செம்பு
கரை கரை நண்டுக்கரை
நண்டே நண்டேநாரநண்டே நமச்சிவாய
கிடைச்ச நண்டே... ஏந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்து ஏந்து எம்மலை ஏந்து திராட்சை ஏந்து
தர்மள ஏந்து மறுமலை போவார்
கலந்து மச்சான் கலந்து போனார் கால் சட்டம்
பூச்சட்டம் பெருமாள் ஓடிவா
வைத்தா? அல்லது வெட்டியா?
வைத்து
என்னத்துக்குப் பழம் - சொட்டுக்குப் பழம்
என்ன கதை அடிக்க - சொட்டையும் சொட்டையும் அடிக்க
அணைக்காரன் பிணைக்காரன் அமூங்க துலங்க
அணைக்கிரவனுக்கு ஒரு கட்டை
காய் காய் கத்தரிக்காய்
காம்பு முத்தின வெள்ளரிக்கா
ஓய் ஓய் தும்பு
உனக்கு இரண்டு குட்டு

## 10.2 குவா குவா விளையாட்டு

குவா குவா லையிட்டடி
கோழிக் குஞ்ச்சிக்கு லையிட்டடி
அக்கா வீட்டுக்குப் போனேன்
அவுசப்பழம் தந்தா
வேணாம் என்று சொன்னேன்
வெளியேரங்கச் சொன்னாள்
வெளியெல்லாம் பாம்பு
பாம்படிக்க கம்புக்குப் போனேன்
கம்பெல்லாம் சேறு
சேறு கழுவ ஆத்துக்குப் போனேன்
ஆறெல்லாம் மீனு
மீன்பிடிக்க வலைக்குப் போனேன்
வலையெல்லாம் பீத்தல்
பீத்தல் தைக்க ஊசிக்குப் போனேன்
ஊசியு மில்ல ஒன்றுமில்ல
ஊசியும் தட்டளம் உக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 10.3 அத்தக்கா புத்தக்கா விளையாட்டு

அத்தக்கா புத்தக்கா தையஞ்சோறு
எத்தருமை எருமைப் பாலு
தூக்குமரத்தில துணியைக் கட்டி வீராய் வந்தாய்
கோப பொடைச்சாள் ஒப்பன் பேர் என்ன?
முருங்கப் பூ
முருங்கப் பூ தின்றவளே முள்ளாம் பழம் தின்றவளே
பாதிப் பழம் தின்றவளே
படக்கென்ற கையை சொடக்கென்றெடு
வீராய் வந்து கொப்பொடச்சா கொளை ஒடச்சா
வயிற்றில் என்ன? - பூனைக்குட்டி
நெற்றியில் என்ன?
அண்ணன் ஓலைக்கையால் அடிச்சிப் போட்டார்

### 10.4 திரி போடல் விளையாட்டு

பக்கட்டி தொலைந்திட்டு
தேடியெடு
கஞ்சி முட்டி கொட்டிட்டு
அள்ளிக்குடி
கருவாப் பிலையே
மினுக்கடி மினுக்கு
பச்சரிசி தின்றால்
பல்லை உடைப்பேன்
மோட்டுக்கு மேல் ஏறுவேன்
குடலை சரிப்பேன்

### 10.5 இரும்பு கோட்டம் உடைத்தல் விளையாட்டு

சங்கிலி புங்கிலி கதவத்தொர
ஏன்மாற்றேன் தேங்காய் புலி
பசு மாட்டைக் கண்டியா
இல்லை
ஓ..... ஓ......எங்கே
வீட்டுக்குள்ளே
ஒடைக்கேலுமா..? ஒடைக்கேலாது
என்ன வேலி - இரும்பு வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10.6 கண்ணாம் பொத்தி விளையாட்டு

கொக்கு வந்து கூவ .... கூவ ....
குமரி அம்மா பால் காக்க
அடுப்பில் இருந்த பாலை
யார் குடித்தது.......
பன்றி
பன்றி வந்து பறையடிக்க
பறையன் வந்து மேளம் அடிக்க
டும்....டும்.....டும்..........
தோ தோ நாய் குட்டி
தொப்பலத்தன் நாய் குட்டி
தோட்டக் காட்டுக்குப் போய்வாரன்
வீட்டக் கொஞ்சம் பாத்துக்கோ
சின்னாத்தாள் வருவாள்
சின்னட்டிப் பழம் தருவாள்
பெரியாத்தா வருவா
பேரீச்சம்பழம் தருவா
கடக்காரன் வருவான்
கட்டிப்பிடிச்சி மோருவான்
நடுமோடு பாராலம்
தண்டு இழுக்க
தடி இழுக்க
ஜட்டுமா
ஜட்டுமா
ஜல்...

## 10.7 ஊஞ்சல் விளையாட்டு

ஊஞ்சாலம்மா ஊஞ்சாடு
கோணாத ஊஞ்சல் கோணாத
கொண்டப் பணிகாரம்
சுட்டுத்தாரன்
நேராத ஊஞ்சல் நேராத
நெய்ப் பணிகாரம்
சுட்டுத்தாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்புத் துணை நூல்கள்

சொக்கலிங்கம், சி.பூசகர் (1929), உடப்பு திரௌபதியம்மன் மான்மியம், யாழ்ப்பாணம்.

சாஜஹான், ஏ.என்.எம், (1992), புத்தளம் வரலாறும், மரபுகளும்., புத்தளம்.

சிவலோகதாசன், வ. (2014), உடப்பு - தமிழ் கலாச்சாரத்தின் ஊற்று, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

சிவலோகதாசன், வ. (1997), உடப்பூர் - வரலாறும், மரபுகளும், இந்து ஆலய பரிபாலன சபை, உடப்பு.

சொர்ணலிங்கம், (1968), ஈழத்தில் நாடகமும் நானும், யாழ்ப்பாணம்.

சோமலே, (1983), தமிழ் நாட்டு மக்களின் மரபும், பண்பாடும்., நேசனல் புக் டிரஸ்ட், இந்தியா.

வீரசொக்கன் (1989), உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு, உடப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## நூலாசிரியர் அறிமுகம்

பேராசிரியர். கலாநிதி. வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன், இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஓர் முகாமைத்துவ பேராசிரியராவார், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது வியாபார கற்கைகள் துறையில் இளைமானி பட்டத்தைப் பெற்ற (B.Com(Hons)) இவர் தாய்லாந்து ஆசியன் தொழிற்நுட்ப பல்கலைக் கழகத்தில் வியாபார முதுமாணிப் பட்டத்தையும் (MBA in IB), சீன நாட்டின் ஜெஜியாங் பல்கலைக்கழகத்தில் புத்துமை முகாமைத்துவ (Innovation Management) துறையில் கலாநிதி பட்டத்தையும் (Ph.D) பெற்றுள்ளார். பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளராக மட்டுமன்றி உதவிப்பதிவாளராகவும் கடைமையாற்றியதுடன், சர்வதேச நிறுவனங்களில் மனித வள முகாமையாளராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் கலைமானி, முதுமாணி, கலாநிதி புலமைப் பரிசில்களைப் பெற்றுள்ளார்.

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் முந்தல் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த உடப்பு கிராமத்தில் வஸ்தியாம்பிள்ளை பாக்கியம் தம்பதியினரின் மூத்த புதல்வராகப் பிறந்த கலாநிதி வ.சிவலோகதாசன் உடப்பு தமிழ் மகா வித்தியால யத்தின் பழைய மாணவராவார். தற்போது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஓர் முதுநிலை விரிவுரையாளராகவும் முகாமைத் துவ துறைத் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இவர் தமிழ் ஆங்கிலப் பத்திரிக்கைகளில் பல ஆய்வு கட்டுரை களையும் எழுதியுள்ளார். இவரின் ஆய்வுக் கட்டுரைகள் இலங்கை தேசிய சஞ்சிகைகளிலும், சர்வதேச சஞ்சிகைகளிலும் வெளியாகி யுள்ளன. இவர் இந்து தர்மம் (1996 ), உடப்பூர்: வரலாறும் மரபுகளும் (1997.), மனித வள முகாமைத்துவம் (2010), மனித முகாமைத்துவ நடைமுறைகள் (2012), உடப்பு தமிழ் கலாச்சாரத்தின் ஊற்று (2014) போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

265?38
12657CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர். கலாநிதி. வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன், இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஓர் முகாமைத்துவ பேராசிரியராவார், உடப்பூரில் கல்வி கற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது வியாபார கற்கைகள் துறையில் இளைமானி பட்டத்தைப் பெற்ற (BCom(Hons)) இவர் தாய்லாந்து ஆசியன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் வியாபார முதுமாணிப் பட்டத்தையும் (MBA in IB), சீன நாட்டின் ஜெஜியாங் பல்கலைக்கழகத்தில் புத்துமை முகாமைத்துவ (Innovation Management) துறையில் கலாநிதி பட்டத்தையும் (Ph.D) பெற்றுள்ளார். பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராக மட்டுமன்றி உதவிப் பதிவாளராகவும் கடைமையாற்றியதுடன், சர்வதேச நிறுவனங் களில் மனித வள முகாமையாளராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் கலைமானி, முதுமாணி, கலாநிதி புலமைப் பரிசில்களைப் பெற்றுள்ளார். இவர் இந்து தர்மம் (1996 ), உடப்பூர்: வரலாறும் மரபுகளும் (1997.), மனித வள முகாமைத்துவம் (2010), மனித முகாமைத்துவ நடைமுறைகள் (2012), உடப்பு தமிழ் கலாச் சாரத்தின் ஊற்று (2014) போன்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

ISBN 978-955-4676-78-7

350/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org